கடல் உணவின் களஞ்சியம்
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றிட
Kasturi Limited
IMPORT & EXPORT
290B, Ealing Road, Wembley, Middlesex, HA0 4LL, UK.
Tel: 0181-903 4276 Fax: 0181-903 0927
Mobile: 0958 246580

France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

ஈழமுரசு
பிரித்தானியா
Eelamurasu Weekly


முரசு: 4 07 – 13 மே 1998 முழக்கம்: 173

மேற்கு லண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
Nº: 199, The BROADWAY, Southall, Middx.
T.P: 0181 / 813 9126

# ஐ.நா. விசேட பிரதிநிதியின் வருகையையொட்டி
# தேசியத் தலைவர் போர்நிறுத்தத்திற்கு உத்தரவு

எதிர்வரும் 6-ம், 7-ம் திகதிகளில் ஐக்கியநாடுகள் சபையின் விசேட பிரதிநிதியான ஒலரா ஒட்டுண்ணோ வன்னிப்பகுதிக்கு விஜயம் செய்து விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளை சந்திக்க உள்ளார்.

ஐ.நா செயலாளர் நாயகம் கொபி அனானின் விசேட பிரதிநிதியாக வன்னிப்பகுதிக்கு விஜயம் மேற்கொள்ள உள்ள திரு ஒட்டுண்ணோ அங்கு சிறுவர்களின் வாழ்நிலைபற்றி ஆய்வொன்றை மேற்கொள்ள உள்ளார்.



அவரது வன்னி விஜயத்திற்கு பாதுகாப்பு வழங்கும் விதத்திலும், கௌரவிக்கும் விதத்திலும் எதிர்வரும் 6-ம், 7-ம் திகதிகளில் ஒருதலைப் பட்சமான போர் நிறுத்தம் ஒன்றிற்கு தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே.பிரபாகரன் உத்தரவிட்டுள்ளார்.

## வடமராட்சி இராணுவநகர்வு முறியடிப்பு
## யாழ். குடாவில் 8 படையினர் பலி

வடமராட்சி வல்லிபுரம் பகுதியிலிருந்து அம்பன் சந்தியை நோக்கி இரு அணிகளாக சென்ற சிறீலங்கா படையினர் மேலும் கிழக்குப் பக்கமாக முன்னேற முயன்ற போதிலும் அங்கு விடுதலைப் புலி அணிகளின் நடமாட்டம் காரணமாக தமது நடவடிக்கைகளை மட்டுப்படுத்திவிட்டு திரும்பியுள்ளனர்.

ஒரு அணி வரணி கண்டல்காடு பகுதியூடாகவும் மறு அணி மணல்காடு வழியாகவும் அம்பன் சந்தியை நோக்கி வந்த போதிலும் புலிகளின் 'தாக்குதல் தயார்

(☞ 2ம் பக்கம்)

## புலிகளின் 'சாலை' கடற்தளத்திற்குள் பிரவேசிக்கவந்த டோராக்கள் விரட்டியடிப்பு

விடுதலைப் புலிகளின் சாலை கடற்தளத்தின் பகுதிக்குள் பிரவேசித்து தாக்குதலை நடாத்த முயன்ற சிறீலங்கா கடற்படை விரைவு டோரா பீரங்கிப் படகுகள் மீது விடுதலைப் புலிகளின் கடற் காவல் அணியினர் தாக்குதலை தொடுத்து டோராக்களை விரட்டியடித்துள்ளனர்.

கடந்த 1-ம் திகதி அதிகாலை 5.30 மணியளவில் முல்லைத்தீவு சாலையிலுள்ள புலிகளின் கடற்தளத்தின் மீது தாக்குதலை மேற்கொள்ளவென வந்த டோராக்கள் மீது புலிகள் எதிர்த் தாக்குதலை மேற்கொண்டபோது டோராவில் இருந்த அதிகாரி ஒருவரும் படுகாயப்படுத்தப் பட்டுள்ளார்.

தாக்குதலைச் சமாளிக்க முடியாத டோராக்கள் சிறிது நேரத்தில் பின்வாங்கிச் சென்றுவிட்டன.

## ஜெயசிக்குறுய் ஓராண்டு
## மீண்டும் ஒரு வன்னி மாரிகாலத்துக்கு தாக்குப் பிடிக்கும் நிலை அரச படைக்கு இல்லை!

ஜெயசிக்குறுய் நடவடிக்கையின் ஒரு வருடத்தில் 2 பகுதியினர் பலங்களைப் பற்றி ஒப்பிடும்போது, சிறீலங்கா அரச தரப்பை எடுத்துக்கொண்டால் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு அரசுக்கு சர்வதேச ரீதியான பக்க பலங்களும், இந்த படை நடவடிக்கையை முடித்து வன்னிப் பகுதியை கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான ஆதரவும் எந்த விதமான நிபந்தனைகளுமின்றி சில வெளி நாட்டு அரசுகளால் வழங்கப் பட்டுள்ளன. உதாரணமாக அரசின் கரத்தை பலப்படுத்துவதற்காக விடுதலைப் புலிகள் மீது அமெரிக்கா கொண்டுவந்த தடை, இந்திய அரசு (முன்னாள்) தொடர்ச்சியாக வழங்கி வந்த ஆதரவு, சீன அரசு வழங்கி வருகின்ற இராணுவ உதவி, பாகிஸ்தான் அரசு வழங்கி வருகின்ற இராணுவ உதவி. கனடா, பிரான்ஸ் போன்ற நாடுகளில் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் வழங்கிவருகின்ற ஆலோசனைகள், உதவிக்ள் என்பவற்றை குறிப்பிடலாம். இது முதலாவது விடயம்.

(☞ 15ம் பக்கம்)

☞ அத்தாசின் பதிவுகள் (18ம் பக்கம்)
☞ ஜெயசிக்குறுயிற்கு ஓலுமடு கற்றுக்கொடுத்த பாடம் (7ம் பக்கம்)

## 24 மணி நேரத்தில் கிழக்கில் இரு பாரிய தாக்குதல்கள்
## தோப்பூர் இராணுவ - பொலிஸ் கூட்டுத்தளம் - மாஞ்சோலை பொலிஸ் நிலையங்கள் தகர்ப்பு

24 மணி நேர இடைவெளியினுள் கிழக்குப் பிராந்தியத்தில் விடுதலைப் புலிகள் இரு பாரிய தாக்குதல் அழிப்பு நடவடிக்கையினை வெற்றிகரமாக நடாத்தியுள்ளனர்.

தோப்பூர் பகுதியிலமைதுள்ள சிறீலங்கா இராணுவ பொலிஸ் கூட்டுத் தளமும் மாஞ்சோலை பொலிஸ் நிலையமுமே விடுதலைப் புலிகளினால் அழிக்கப்பட்ட இராணுவ நிலைகளாகும். இத் தாக்குதல்களின் போது 15-ற்கும் மேற்பட்ட

(☞ 2ம் பக்கம்)

## யாழ். சென்ற ஜப்பானிய பத்திரிகையாளரை காணவில்லை?

ஜப்பானிய பத்திரிகையாளர் ஒருவர் சிறீலங்காவில் காணாமற் போயுள்ளாரா? என்ற சந்தேகம் கொழும்பில் தற்போது தெரிவிக்கப்படுகிறது.

புதுடெல்லியில் ஜப்பானிய நாளிதழ் ஒன்றின் பிரதான நிருபராக இயங்கும் இவர், கடந்த இருவாரங்களுக்கு முன்னர் சிறீலங்காவிற்கு வருகை தந்து யாழ்ப்பாணத்திற்குப் போன தன் பின்னர் காணாமற் போயுள்ளாரென தெரிவிக்கப்படுகிறது. இப் பத்திரிகையாளர் காணாமற்போன விடயம் பற்றி சிறீ

(☞ 2ம் பக்கம்)

## உலங்குவானூர்திகள் சுட்டுவீழ்த்தப்படும்
### புலனாய்வு துறை எச்சரிக்கை

வன்னி 'ஜெயசிக்குறுய்' இராணுவ நடவடிக்கைகளில் படையினருக்கு உதவியாக செயற்படும் உலங்கு வானூர்திகளை விடுதலைப் புலிகள் சுட்டு வீழ்த்த இருப்பதாக இராணுவ புலனாய்வுத்துறை எச்சரிக்கை செய்துள்ளது.

உலங்கு வானூர்திகள் மீது தாக்குதலை நடாத்த விடுதலைப் புலிகளின் விசேட அணிகள் தயாராகி இருப்பதாகவும் இராணுவ நடவடிக்கைகளில் படையினரின் அழைப்பிற்கு ஏற்ப வரும் உலங்கு வானூர்திகள் மீதே

(☞ 2ம் பக்கம்)

## கிளிநொச்சியில் கிளேமோர் 5 சிப்பாய்கள் பலி

(02.05.98)

கிளிநொச்சியில் சிறீலங்காப் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஊடுருவிய விடுதலைப் புலிகள் இன்று மாலை நடாத்திய 'கிளைமோர்' கண்ணி வெடித் தாக்குதலில் ஐந்து சிப்பாய்கள் கொல்லப்பட்டதுடன், மேலும் ஒருவர் படுகாயப்படுத்

(☞ 2ம் பக்கம்)

லண்டனில் நம்பிக்கை = நாணயம் = உத்தரவாதம் = குறைந்த விலை
மங்கையர் நெஞ்சங்களில் குறுகிய காலத்தில் இடம்பிடித்தவர்கள்
RATHY JEWELLERS
தாலிக்கொடி தயாரிப்பில் கைதேர்ந்தவர்களின் கைவண்ணத்தில்
சகல நகைகளையும் செய்தும், இறக்குமதி செய்து வழங்குபவர்கள்



28 Ealing Road, Wembley, Middx. HA0 4TL
Tel: 0181-903 3063
Fax: 0181-903 9711
Mon.-Sat. 10.00 A.M. - 6.30 P.M.
Sunday 12.00 Noon - 6.30 P.M.

# ஈழமுரசு

Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE

நிர்வாகி:
ப. வேலுப்பிள்ளை

நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்

ஆசிரியர்:
பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-eelamurasu@aol.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பாரிஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
யோ. சிறீஸ்கந்தராஜா
Tel: 03 04 35 29 23
அருந்தவராஜா:
Tel / Fax: 02 151 39 73 83

டென்மார்க்:
G.R. திருச்செல்வம்
Stadion Alee - 30, 1th
7430 Ikast, Denmark.
Tel + Fax: 75310546

சுவிஸ்: மக்கள் கடை
Verlag: People Shop
Henrich Str-85; 8005 Zürich.
Druckerci: Frankreich.
Tel: 01-271 7374

லண்டன்:
ஜெயந்தன்: - Tel: 0956908145
குணம்: - Tel: 0956277718

இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527

நெதர்லாந்து:
த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804


# வற்றேவேவா பொலிஸ் நிலையத்தின் மீது தாக்குதல்

*(04.05.98)*

பொலநறுவை மாவட்டத்தின் வடக்குகிழக்கு பகுதியான வற்றா வேவா எனும் இடத்தில் அமைந்துள்ள சிறீலங்கா பொலிஸ் நிலையத்தின் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஒரு ஊர்காவற் படையினன் கொல்லப்பட, இரு பொலிசார் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

நேற்று நள்ளிரவு 12.30 மணியளவில் தாக்குதலைத் தொடுத்த புலிகள் ஒருசில நிமிடங்களில் தமது தாக்குதலை முடித்துக் கொண்டு தளம் திரும்பியுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் நடமாட்டங்களை அவதானிக்கவென பொலநறுவையின் எல்லைப் பகுதியில் மிதிரிகிரியா பொலிஸ் பிரிவில் இப் பொலிஸ் நிலையம் அமைந்துள்ளது.

## பாதுகாப்புக் கோரும் பொலிசார் !

*(04.05.98)*

கல்முனை பொலிஸ் நிலையத்தினதும் அதனைச் சூழ அமைந்துள் சாவடிகளினதும் பாதுகாப்பு, அப் பகுதிகளில் கடமை புரியும் பொலிசாருக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்தவாரம் கல்முனைப் பொலிஸ் நிலையத்திலும், கல்முனை நகரத்திலும் வைத்து ஏழு பொலிசார் கொல்லப்பட்டதையடுத்து பொலிசார் மத்தியில் பயப்பீதி உருவாகியுள்ளது. இதனைத் தொடர்ந்து அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தலைமையில் விசேட ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

இப்பகுதி பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்படும் என பொலிஸ்மா அதிபர் பொலிசாருக்கு வாக்குறுதியளித்துள்ளார்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## வடமராட்சி...

நிலை'யினை கண்டு மீண்டும் பின்வாங்கிச் சென்றுள்ளனர்.

இராணுவத் தரப்பு பின்வாங்கிச் சென்றதன் பின்னர் வடமராட்சி கிழக்கு கரையோர கிராமங்கள் மீது சிறீலங்கா கடற்படை தனது வெறித்தனமான தாக்குதல்களை கட்டவிழ்த்து விட்டுள்ளது.

இதனால் மாமுனை செம்பியன் பற்று ஆகிய கிராமங்களில் பெருஞ்சேதம் ஏற்பட்டுள்ளது.

இதே நேரம் யாழ்.குடாவில் படையினர் மீதான தாக்குதல்களை விடுதலைப் புலிகள் மேலும் முடுக்கிவிட்டுள்ளனர். கடந்த ஓரிரு நாட்களில் மட்டும் குடாநாட்டில் நடந்த மூன்று வெவ்வேறான தாக்குதல்களில் எட்டுப் படையினர் கொல்லப்பட்டதுடன், மேலும் ஏழு பேர் காயப்படுத்தப்பட்டுள்ளனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## 24 மணி நேரத்தில்...

படையினர் பலியாகி, மேலும் பலர் படுகாயப்படுத்தப்பட்டுள்ளனர். நான்கு பொலிசாரைக் காணவில்லை எனவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தாக்குதலுக்குள்ளான இராணுவ, பொலிஸ் தளங்களிலிருந்து பாரியளவிலான ஆயுத தளவாடங்களும் விடுதலைப் புலிகளினால் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன.

முதலாவது தாக்கியழிப்பு நடவடிக்கையினை கடந்த 2-ம் திகதி மாஞ்சோலை பொலிஸ் நிலையத்தின் மீது மேற்கொண்ட புலிகள் அங்கிருந்த ஆயுத தளவாடங்களைக் கைப்பற்றிய பின்னர் பொலிஸ் நிலையத்தை அழித்துள்ளனர். இரவு 11 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதலின்போது, நான்கு பொலிசார் கொல்லப்பட்டு மேலும் பலர் காயப்படுத்தப்பட்டுள்ளனர்.

இத் தாக்குதல் நடைபெற்று சில மணி நேரத்தின் பின்னர் மூதூர் - தோப்பூர் வீதியில் அமைந்திருக்கும் இராணுவ- பொலிஸ் கூட்டுத் தளத்தின் மீது விடுதலைப் புலிகள் தமது இரண்டாவது பாரிய தாக்குதலைத் தொடுத்தனர். (தாக்குதல் நேரம் அதிகாலை 5.30 மணி)

சுமார் ஒரு மணிநேரமாக நடைபெற்ற இத் தாக்குதலின் முடிவில் 10 பொலிசாரும் ஒரு சிப்பாயும் கொல்லப்பட்டுள்ளனர். தாக்குதல் நடைபெற்ற வேளையில் இராணுவ, பொலிஸ் தரப்பில் மொத்தமாக 40 பேர் இருந்துள்ளனர். இவர்களில் எட்டுப்பேர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. தோப்பூர் முகாமிலிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுத தளவாடங்களில் ஆர்.பி.ஜி.கள், மோட்டார்கள் ஆகியனவும் அடங்குகின்றன.

விடுதலைப் புலிகளின் தரப்பு இழப்புப் பற்றி தலைமைப் பீடச் செய்திகள் இதுவரை கிடைக்கவில்லை.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## கிளிநொச்சியில்...

தப்பட்டுள்ளார்.

படையினர் பயணித்த உழவு இயந்திர வாகனம் ஒன்றை இலக்காக வைத்தே புலிகள் தாக்குதலை நடாத்தியுள்ளனர். இத் தாக்குதலினால் உழவு இயந்திரமும் முற்றாக சேதமடைந்துள்ளது. இராணுவ வலையத்தினுள் புலிகள் ஊடுருவி இத் தாக்குதலை நடாத்தியமை படைத்தரப்பினை அதிர்ச்சியடையவும் வைத்துள்ளது.

இவ்வருட முற்பகுதியில் கிளிநொச்சி இராணுவ தளத்தின் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலை அடுத்து நகரின் பெரும்பாலான பகுதிகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்தமை குறிப்பிடத்தக்கது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## உலங்குவானூர்திகள்...

இவர்களது தாக்குதல் திட்டம் உள்ளதெனவும் குறிப்பிட்டுள்ள பூநகரிய்வுத்துறை, புல்மோட்டை முல்லைத்தீவு கடற் பிரதேசத்தில் கடற்படை கலங்கள் மீது புலிகள் பாரிய தாக்குதலை நடாத்த தயாராகி விட்டனர் எனவும் எச்சரித்துள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## யாழ். சென்ற...


லங்கா ஜப்பானிய துதரகம் விபரம் எதனையும் தெரிவிக்க இதுவரை மறுத்து வருகிறது.

இவர் யாழ்பாணத்தில் வைத்துக் காணமற் போனாரா அல்லது அங்கிருந்து திரும்பிய பின்னர் கொழும்பில் காணாமற் போயுள்ளாரா என்பது பற்றிய சரியான விபரங்கள்கூட உறுதிப்படுத்தப்படவில்லை.

ஆனால் இன்னொரு பத்திரிகையாளர் தெரிவித்த விபரங்களின்படி யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு திரும்பிய மேற்படி பத்திரிகையாளர் உடனடியாக சிங்கப்பூருக்கு சென்றுவிட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.


## பிறந்தநாள் வாழ்த்து

### நிலவன் செல்லையா



*சின்னமலர்ச் சிரிப்புக்கு வயது ஒன்று*
*வண்ணத்து கனவுக்கு வயது ஒன்று*
*அள்ளிக் கொஞ்சும் அன்புக்கு வயது ஒன்று*
*வீடு வந்த நிலவுக்கு வயது ஒன்று*

செல்லையா ராஜன், பத்மினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் நிலவன் செல்லையா, 06.05.98 புதன்கிழமை ஒஸ்லோவில் உள்ள தனது இல்லத்தில் முதலாவது பிறந்தநாள் காண்கையில் அவரை அன்புடன் வாழ்த்துபவர்கள்:

சஞ்சீவன் மச்சான், சிந்து அக்கா, பிருந்தா மச்சாள், பிரகாஷ் மச்சான், விபிஷன் அண்ணா, விதுரன் மச்சான், அப்பம்மா, அம்மம்மா, பபா சித்தி, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமிமார், மாமாமார் மற்றும் சிறுவர் பாடசாலை குட்டி நண்பர்கள்.

*ஒஸ்லோ, நோர்வே*

Pub

## பிரயாண முகவர் தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கும் பிரயாண முகவர் நிலையத்திற்கு (Travel Agence) தேர்ச்சி பெற்றோர் தேவை.

**தொடர்புகட்கு: 01 42 09 21 43**

புதிய வரவு — உடனுக்குடன் பிரயாண ரிக்கெற் பெற்றுக்கொள்ளலாம்

**ERRANCES TRAVELS**

**Tel: 01 42 09 70 00**
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc, 75010 Paris.
M°: La Chapelle *ou* Louis Blanc

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,400 Frs. |
| Colombo | - | 3,800 Frs. |
| Singapour | - | 3,400 Frs. |
| Madras | - | 3,600 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New york | - | 2,300 Frs. |
| Montreal | - | 2,800 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,800 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

Li: 075 95 01 37

(ADV)

# தமிழீழச் செய்தித் தொகுப்பு

## மீகஸ் கொட இராணுவ முகாம் அழிப்பு! மோட்டாரும் கைப்பற்றப்பட்டது

திருமலை மாவட்டத்தின் மீகஸ் கொடப் பகுதியில் அமைந்திருந்த சிறிலங்கா இராணுவ முகாம் விடுதலைப் புலிகளினால் கடந்த 27-ம் திகதி நள்ளிரவுவேளையில் அழிக்கப்பட்டு ஆயுத தளவாடங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இத் தாக்குதளின் போது மூன்று படையினர் கொல்லப்பட்டு மேலும் ஒன்பது சிப்பாய்கள் படுகாயமடைந்திருப்பதாக சிறீலங்காப் படைத்தரப்பு அறிவித்துள்ள போதிலும் அவர்களுக்கேற்பட்ட இழப்பு அதிகமெனத் தெரிய வருகிறது.

கந்தளாய் — சேருவில வீதியில் அமைந்திருந்த இம் முகாமின் மீது இரவு 9.30 மணியளவில் விடுதலைப் புலிகள் தாக்குதலைத் தொடுத்தனர். புலிகளின் தாக்குதலுக்கு சமாளிக்க முடியாத வான்படையினரின் உதவியை நாடினர். வான்படையினரின் தாக்குதலினையும் புலிகள் முறியடித்ததுடன் முகாமினைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்த பின்னர் 81மி.மீ. மோட்டார் உட்பட பல ஆயுத தளவாடங்களை அப்புறப்படுத்தினர்.

இவ்வேளையில் காயமடைந்த சக சிப்பாய்களையும் அப்புறப்படுத்திக் கொண்டு படையினர் பின்வாங்கிச் சென்றுவிட்டனர். முகாமினை முற்றாக அழித்த பின்னர் ஆயுதத் தளாடங்களுடன் திரும்பிய புலிகளுக்கு இழப்புக்கள் ஏற்படவில்லை.

## இராணுவ உளவாளி சுட்டுக் கொலை

சிறீலங்கா இராணுவ உளவாளி ஒருவர் கடந்த 28-ம் திகதி காலை மட்டக்களப்பு கொம்மாதுறைப் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சிறிலங்கா இராணுவத்தின் மட்டக்களப்பு புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த எஸ்.ரவிச்சந்திரன் என்பவர் கொம்மாதுறைப் பகுதியில் விடுதலைப் புலிகளின் நடமாட்டங்கள் அவர்களது தளங்கள் ஆகியவற்றின் விபரங்களைத் திரட்ட முனைந்த வேளையிலேயே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இவரது சடலத்தினை புளொட் குழுவைச் சேர்ந்தவர்கள் மீட்டுக் கொண்டு வந்து இராணுவப் புலனாய்வுத் துறையிடம் ஒப்படைத்துள்ளனர்.

## யாழ்ப்பாண யுவதிகளுக்கான அழைப்பு

சிறீலங்கா இராணுவத்தினரின் வஞ்சக நடவடிக்கைகளில் விழுந்துவிடாமல் தமிழ் சமூகத்தின் பாரம்பரியத்தை யாழ். யுவதிகள் காக்க வேண்டுமென யாழ். மாவட்ட மாணவர் அமைப்பு அறிக்கையொன்றின் மூலமாக வேண்டுகோள் விடுத்துள்ளது.

'சிறீலங்கா அரசு திட்டமிட்ட ரீதியில் தமிழ் மக்களது கல்வியை நசுக்கிவருகிறது. தமிழ் மாணவர்களது கல்வி மேம்பாடு குறித்து தமிழ் குழுக்களுக்கோ அன்றி வேறு எவருக்குமே அக்கறையில்லாத இந்த நேரத்தில் சகல மாணவர்களுக்கும் எம்முடன் ஒத்துழைத்தால் இதற்கொரு முடிவை காணமுடியும்.

இந்த நேரத்தில் யாழ் மாணவர்கள் குறிப்பாக மாணவிகள் மிகவும் கூர்மையுடன் நடந்து கொள்ள வேண்டும். ஏனெனில் சிறீலங்கா இராணுவம் விரித்துள்ள வஞ்சக வலை, தமிழ் பாரம்பரியத்தை சிதைத்து விடும் நோக்கிலானது.

படையினருடன் உறவுகளை ஏற்படுத்த இளம் பெண்கள் சிலர் முனைவது பற்றியும் எமது அமைப்பிற்கு விபரங்கள் கிடைத்துள்ளதால் இது குறித்து இளம் பெண்கள் விழிப்பாக இருக்க வேண்டுமெனவும் அவ் அறிக்கையில் மேலும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

## முல்லையில் எழுச்சிமிகு மே தின ஊர்வலங்கள்

சர்வதேசமெங்கும் தொழிலாளர் தின ஊர்வலங்கள் நடைபெற்றவேளை தமிழீழமும் அவ் எழுச்சிநாளில் தன்னை இணைத்துக்கொண்டுள்ளது.

முல்லைத்தீவில் பிரஜைகள் குழுக்களின் சம்மேளனத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட மேதின எழுச்சி ஊர்வலம் கடந்த 1-ம் திகதி மாலை 3 மணிக்கு ஆரம்பமானது. 4-ம் மைற்கல் பகுதியிலும், அம்மன் கோவில் பகுதியிலும் இரு பிரிவுகளாக ஆரம்பித்த இவ் எழுச்சி ஊர்வலம் முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி மைதானத்தை வந்தடைந்ததும் அங்கு எழுச்சிக் கூட்டமொன்றும் நடைபெற்றுள்ளது.

இதேபோன்ற வேறு எழுச்சி ஊர்வலங்கள், அக்கராயன் பகுதியிலும், காந்தரூபன் அறிவுச் சோலை மாணவர்களாலும் நடாத்தப்பட்டுள்ளது.

இவ் ஊர்வலங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் பால், வயது வேறுபாடின்றி கலந்துகொண்டதுடன் சிறீலங்கா அரசின் இராணுவ ஒடுக்குமுறை, மருத்துவ பொருளாதார தடை ஆகியவற்றுக்கெதிரான கோசங்களை கோசித்தவண்ணம் சென்றனர்.

ஊர்வலத்தின் முடிவில் நடைபெற்ற கூட்டத்தில் பல பிரமுகர்களும் உரையாற்றினர்.

## மன்னார் முகாம்களில் கைதிகள் இல்லை

### – இராணுவத் தரப்பு –

மன்னாரிலுள்ள சிறிலங்காத் தடை முகாம்களான முருங்கன் இராணுவ முகாம், தள்ளாடி இராணுவமுகாம், மன்னார் பொலிஸ் நிலையம், தலைமன்னார் பொலிஸ் நிலையம், ஆகிய நான்கிலும் எந்த ஒரு விடுதலைப் புலி சந்தேக நபரும் இல்லையென சிறிலங்காத்தரப்பு, மன்னார் மாவட்ட நீதிபதி இளஞ்செழியனிடம் தெரிவித்துள்ளது.

மேற்படி நிலைகளில் தடுத்து வைக்கப்பட்ட தமிழ் மக்களது விபரங்களைத் தமக்கு தெரியப்படுத்துமாறு இராணுவத் தரப்பிடம் நீதிபதி யோரியபோதே மேற்கண்டவாறு இராணுவம் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் இருந்து வரும் மக்கள் மீது உயிலங்குளம் சந்திப் பகுதியிலுள்ள சோதனைச் சாவடியில் சோதனையை மேற்கொண்டுவரும் படையினர் தமக்கு சந்தேகமானவர்களைத் தடுத்து வைப்பது வழமையாயினும் நீதிபதிக்கு அவ்வாறு தாம் செய்வதில்லை எனவும், கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றத்தின் முன்னிலையில் நிறுத்தப்பட்ட பின்னர் மேலதிக விசாரணைக்காக அநுராதபுர சிறைச்சாலைக்கு அனுப்பப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

## பதிவுக்கான செய்திக் குறிப்புகள்

- ★ யாழ். அச்செழு பகுதியில் வெட்டி வீழ்த்தப்பட்டிருந்த தென்னைமர வட்டுப் பகுதிக்குள் இருந்த குண்டொன்று வெடித்ததில் சிறுவன் ஒருவன் படுகாயம். இச் சம்பவம் அண்மையில் நடைபெற்றுள்ளது.
- ★ மன்னார் பரப்பாங்கண்டல் பகுதியில் உள்ள பாழடைந்த வீடொன்றிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட மனித எலும்புக்கூடு சிறீலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போன தனது மகனுடையதாக இருக்கலாமென பள்ளிமுனையைச் சேர்ந்த சவரி என்பவர் மன்னார் நீதிமன்றத்தில் முறையிட்டுள்ளார்.
- ★ பருத்தித்துறை — கொடிகாமம் வீதி வரணி பகுதியில் உள்ள சிறீலங்கா படை சோதனை நிலையங்களில், சோதனை கெடுபிடிகள் மிக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் பயணிகளும் உடல் ரீதியான துன்புறுத்தல்களுக்கும் ஆளாவது அதிகரிப்பு.
- ★ வடக்கு—கிழக்கு மாகாணசபை வெறும்கோவைகளை சுமக்கும் கழுதை எனவும் இதனால் தமிழ் மக்களுக்கு எந்தவித பிரயோசனமும் இல்லை எனவும் திருமலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் நடந்த பொதுக் கூட்டமொன்றில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட இ.சோமசுந்தரம் கண்டனம் தெரிவித்துள்ளார்.
- ★ மட்டக்களப்பில் எரிபொருளுக்கு நிலவும் தட்டுப்பாட்டினால் போக்குவரத்து சேவைகள் பெரிதும் பாதிப்பு.
- ★ தற்போது தமிழீழத்தில் நிலவிவரும் அதிகூடிய சூழல் வெப்பநிலை இன்னும் ஒரு சில வாரங்களுக்கு தொடரும் என தெரிவிக்கப்படுகிறது.
- ★ யாழ். குருநகர் பகுதியில் கசிப்பு உற்பத்தியும், பாவனையும் மிக அதிகரித்து வருவதாக குருநகர் புனித யாகப்பர் ஆலய பங்குத் தந்தை கவலை தெரிவித்துள்ளதுடன் கசிப்பிற்கு எதிரான பிராச்சாரங்களை முன்னெடுக்குமாறும் தொண்டர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.
- ★ பதவியுயர்வு பெறுவதில் தமிழ் கிராம சேவையாளர்கள் புறக்கணிக்கப்பட்டு சிங்களக் கிராமசேவையாளரே பலனடைவதாக மட்டக்களப்பு கிராமசேவையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.
- ★ பண்டிதர் வி.சி.கந்தையாவுக்கு இலக்கிய கலாநிதி பட்டத்தினை கிழக்கு பல்கலை கழகம் வழங்கியுள்ளது. பண்டிதர் கந்தையா இருபதிற்கு மேற்பட்ட நூல்களை எழுதியவராவர்.
- ★ வாகரை, செங்கலடி, கரடியனாறு, பன்குடிவெளி, இலுப்படிச் சேனை ஆகிய பகுதிகளில் வசிக்கும் இடம்பெயர்ந்த மக்களுக்கு இவ்வருடத்திற்கான உலர் உணவு வினியோகம் இதுவரை வழங்கப்படவில்லை.
- ★ மேலதிக சிகிச்சைக்கான வசதிகள் இல்லாத காரணத்தால் பூவரசங்குள வைத்தியசாலையில் இரு நோயாளர்கள் மரணம்.

## அமெரிக்க ரேடார்கள் வன்னியில்?

அமெரிக்க அரசிடமிருந்து சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சினால் கொள்வனவு செய்யப்பட்ட ரேடார் கருவிகள் 'ஜெயசிக்குறுய்' யுத்த முனைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக வவுனியா படைத்தரப்பு தெரிவித்ததாக செய்தி நிறுவனமொன்று குறிப்பிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் மோட்டார் ஏவு தளங்களை கண்டறியக் கூடியது என படைத்தரப்பினரால் நம்பப்படும் இவ் ரேடார் கருவிகள் கடந்த வாரமே வன்னிக்கு அனுப்பப்பட்டுள்ளதெனவும் கொழும்புச் செய்திகள் குறிப்பிட்டுள்ளன.

விடுதலைப் புலிகளின் மோட்டார் தளங்களை இவ் ரேடார்கள் மூலம் இனங்கண்டு அவற்றை விமானப் படையினரின் உதவியுடன் அழிக்க முடியும் எனவும் படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

ஆனால் வன்னி யுத்தமுனை செய்திகளின்படி, இவ் ரேடார்களின் இயக்கத்திற்கு மாற்றீடான பல திட்டங்களை விடுதலைப் புலிகள் ஏற்கனவே வகுத்துவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ரத்வத்தை வவுனியா விஜயம்

சிறீலங்காவின் பிரதிப் பாதுகாப்பமைச்சர் ஜெனரல் அநுருத்த ரத்வத்தை கடந்த 28-ம் திகதியன்று வவுனியாவுக்குச் சென்று 'ஜெயசிக்குறுய்' களநிலைத் தளபதிகளுடன் கலந்தாலோசனை நடாத்தியுள்ளார்.

இராணுவத் தளபதியுடன் வவுனியா விமானத் தளத்துக்கு சென்ற ரத்வத்தையை பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுடன தாண்டிக்குளம் பகுதிக்கு இராணுவ கொமாண்டோப் பிரிவினர் அழைத்துச்சென்றுள்ளனர்.

களநிலைத் தளபதிகளுடன் பேச்சுக்களை நடாத்திய ரத்வத்தை, 'ஜெயசிக்குறுய்' நடவடிக்கை எப்படியாவது முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டுமென அறிவுறுத்தியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## மாவடி வேம்பில் இருவர் கோரக் கொலை

மாவடிவேம்பு பகுதியில் இரு தமிழ் மக்கள் சிறீலங்கா அதிரடிப் படையினரால் தலைகள் சிதைக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் தாக்குதலினால் இரு சிப்பாய்கள் பலியானதைத் தொடர்ந்தே தமது பழிவாங்கலை அப்பாவி மக்கள் மீது அதிரடிப்படையினர் வெறித்தனமாக கட்டவிழ்த்துவிட்டுள்ளனர்.

தலை சிதைக்கப்பட்ட நிலையில் இருந்த இவர்களது சடலங்கள் பின்னர் ஏறாவூர் வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டன.

# 'ஜா' கிளப்பிய சலசலப்புகளும் அரசியல் வியாக்கியானங்களும்

கடந்தவார உலக நிகழ்வுகளில் தொழிலாளர் தினமும் (மே 1ம் திகதி), ஐரோப்பிய சங்கத்தின் 'யூரோ' நாணய அறிமுகமும் முக்கிய இடத்தினை பெற்றிருந்தன. சிறீலங்கா, தமிழீழம் ஆகிய தேசங்கள் இரண்டாவது நிகழ்வில் பெரிதாக அக்கறை கொள்ளாவிடினும் முதலாவது நிகழ்வான தொழிலாளர் தினத்தில் வழமை போலவே இம்முறையும் கவனத்தினைத் திருப்பியிருந்தன.

தொழிலாளர் உரிமையை வலியுறுத்த எடுக்கப்படவேண்டிய மேதின விழாக்கள் சிறீலங்காவினைப் பொறுத்தவரை தமது அரசியல் சேறு பூசல்களுக்கு வடிகாலமைக்கும் ஒரு நாளாகவே இம் முறையும் கழிக்கப்பட்டுள்ளது.

பாரிய காக்கிச்சட்டை கெடுபிடிகளுடனும், கண்காணிப்புடனும் கொழும்பில் நடைபெற்று முடிந்த மந்தமான மேதின ஊர்வலங்கள் நாட்டின் இன்றைய நிலைக்கு நல்லதொரு எடுத்துக்காட்டாக அமைந்திருந்தது. கூட்டத்திற்குள் குண்டு வைக்க 'யாராவது' வந்துவிட்டார்களோ என்ற சுயமான துப்பறிவு ஆராச்சியில் கட்சித் தொண்டர்களே ஈடுபடவும் தலைப்பட்டுவிட்டார்கள். **அரசியல் தலைமைகளுக்கோ முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மே தின 'முடிவு' மனக்கண்களில் தோன்றி பயமுறுத்தியதால் வெகு அவதானமாகவே தமது நடமாட்டங்களை மேற்கொண்டிருந்தனர்.**

'உழைப்புக்கு சக்தி நாட்டுக்கு சமாதானம்' என்ற கருப்பொருளுடன் ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியும், 'தலதா மாளிகையை பாதுகாக்க வக்கில்லாத அரசே பதவி இறங்கு' என்ற கோசங்களுடனும் சிறீலங்காவின் இரு பெரும் பேரினவாத கட்சிகளும் மேதின களத்தில் குதித்து ஒருவர் மீது ஒருவர் மாறி மாறிசேற்றினை வீசினார்கள். இப் பேரினவாதக் கட்சிகளின் அரசியலில் குளிர் காய்ந்து கொண்டிருக்கும் **தமிழ் அரசியல் குழுக்களோ தமிழ் மக்களது சுதந்திர தாகத்தினை எல்லாம் முற்றாக மறந்து வடக்கு-**

**கிழக்கை பிரிக்காதே? தீர்வுப் பொதி எங்கே? என்ற கோசங்களுடனும் அடுத்த மே தினத்திலாவது 'நாட்டில்' சமாதானம் தோன்றட்டும் என ஆசி கூறியும் மேதினத்தை ஒப்பேற்றியுள்ளன.**

பிரேமதாசாவின் மேதின முடிவிற்குப் பின்னர் கடந்த 5 வருடங்களாக மேதின ஊர்வலங்களையெல்லாம் மறந்திருந்த ஐ.தே.க. இம்முறை கண்டியில் ஊர்வலமொன்றை நடாத்தியதுடன் சிறீலங்கா அரசிற்கு பெரும் கபாலயிடியாக மாறியுள்ள அஞ்சற்துறையினரின் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு 'காயை' நகர்த்தி தனது அரசியல் இலாபத்தினைத் தேடிக்கொள்ள முயற்சித்தது.

## பேம்பி

அஞ்சற்துறையின் வேலை நிறுத்தத்திற்கு முண்டு கொடுப்பவர்கள் 'துரோகிகள்' என சிறீலங்கா ஜனாதிபதி கொழும்பில் முழங்கிய அதேநேரம் வேலை நிறுத்தக்காரர்களுக்கு தனது கட்சியின் ஆதரவு உண்டென ஐ.தே.க வின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குரல்கொடுத்துள்ளார். இரு கட்சிகளும் இவ்வாறு வீராப்பாக குரல் கொடுத்தாலும் கட்சியினுள்ளே பெரும் 'புகைச்சல்கள்' இல்லாமலில்லை.

அஞ்சற்துறையினை அவசர கால **சேவையாக பிரகடனப் படுத்தி தொழிற்சங்கத் தலைமைப் பீடங்களில் கைவைத்த செயலுக்கு அரசின் உள்ளேயே எதிர்ப்புக் கிளப்பியுள்ளாது.** அஞ்சற்துறையின் பிரச்சனையை இலாவகமாக கையாளாமல் குட்டையைக் குழப்பியது ஏன் என்ற கேள்விகளை சில அமைச்சர்கள் அமைச்சரவையின் வாராந்த கூட்டத்தினத்தில் (29-ம் திகதி) எழுப்பினார்கள்.

அமைச்சர் பேற்றி வீரக்கோன் அஞ்சற்சேவையை அவசரகால சேவையாக பிரகடனப்படுத்தியதற்கு கண்டனம் தெரிவிக்க, அமைச்சர் சமரவீராவும், பிரதி பாதுகாப்பமைச்சர் ரத்வத்தையும் அரசின் 'செயலுக்கு' நியாயம் கற்பித்ததுடன் ஐ.தே.க. வும் ஜேவிபியும் வேலைநிறுத்தத்திற்கு பின்னனி வகிக்கின்றன என்ற புலனாய்வுத்துறையின் அறிக்கையின்படி ஜனாதிபதியின் அங்கிகாரத்துடனே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும் கூற கூட்டத்தில் சற்று வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டு அமைச்சரவையை பிழையாக வழிநடத்த அமைச்சர் அலவி மௌலானா முனைகிறார் என்ற குற்றச்சாட்டுடன் முடிவடைந்தது.

மாகாணசபை தேர்தல் களங்களை முன்வைத்து கட்சிக்கு 'புது ரத்தம்' பாச்ச வேண்டும் என்று திட்டமிட்ட சந்திரிகாவிற்கு உள்வீட்டிற்குள்ளேயே 'பிச்சல்பிடுங்கல்கள்' நடப்பது நிச்சயம் எரிச்சலை கொடுத்ததால் தான் 20 மாவட்டங்களில் கட்சியின் நிலைஎன்ன? வெற்றி வாய்ப்பு அரசிற்கு கிடைக்குமா என்ற 'ஆராய்ச்சியில்' நேரடியாகவே இறங்கிவிட்டார்.

பொதுவாக ஒரு நாட்டின் அரசில் ஏற்படும் பலவீனங்களை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு தமக்கு சாதகமாக நகர்த்துவதே பிரதான எதிர்க் கட்சியின் நிலையாக இருக்கும். ஆனால் சிறீலங்காவின் எதிர்க் கட்சியின் நிலையோ இன்று அப்படியல்ல, மாறாக 'குருட்டுப் பூனையொன்று இருட்டில் விட்டத்தில் பாயும் நிலையினையே அது கொண்டிருக்கிறது. 17 வருடங்களாக அரசோச்சிய கட்சியா இது? என்று இன்று அதனை சிங்களமக்களேநம்பக் கொஞ்சம் சிரமப்பட ஆரம்பித்துவிட்டார்கள்.

தற்போது ஐ.தே.க.வின் குரல்வளைக்குள் 'முள்ளாக' விஜயபால மென்டிஸ்சின் விவகாரம் கிடக்கிறது கடந்த 28-ம் திகதி 'சிறிகோத்தாவில் நடந்த கட்சியின் செயற் குழுக் கூட்டத்தில் விஜயபால மென்டிசின் விவகாரம் எடுக்கப்பட்டாலும் ஐ.தே.க. வின் முக்கியஸ்தரான ஸ்ரான்லி கல்பகே மென்டிசிற்கு ஆதரவாக குரல்கொடுத்துள்ளார், கூட்டம் ஆரம்பிப்பதற்கு கொஞ்ச நேரத்திற்கு முன்னர் மென்டிசுடன் தனிப்பட்டமுறையில் சந்திப்பொன்றை நடத்திய போதிலும் மென்டிஸ் தனது நிலையில் மாற்றமெதையும் ஏற்படுத்தவில்லை.

கூட்டம் ஆரம்பமானதும் கட்சிக்காக 50 வருடங்கள் தான் உழைத்ததையும் கட்சிக்காக தனது மகனை இழந்தது பற்றியும் மென்டிஸ் கூறியபோது கூட்டமண்டபம் சில நிமிட நேரம் நிசப்தமானதை ரணில் அவதானிக்க தவறவில்லை. **அரசை எதிர்ப்பதில் கட்சிக்கு இருக்கும் அக்கறையினைவிட தனது விவகாரத்திலேயே கட்சியில் சிலர் அக்கறை எடுப்பதாக ரணிலை மறைமுகமாக மென்டிஸ் சாடியுள்ளார்.** இக் கூட்டத்தில் ரொனி— அனுரா மோதலுக்கும் மறுமெருகு ஊட்டப்படுமென ஐ.தே.கட்சிக்காரர்கள் எதிர்பார்த்தபோதிலும் அனுராவோ ரொனியோ இக் கூட்டத்தில் கலந்துகொள்ளாதமை அவர்களை சற்று ஆசுவாசப்படுத்தியதும் உண்மை தான். மென்டிஸ் விடயத்தில் ஐ.தே.கட்சியின் நிலை இப்படியானால் அரசும் மென்டிஸ் விடயத்தில் மேலும் இலாபமடைய சில திட்டங்களை வகுத்துள்ளது. மென்டிஸின் குடியுரிமையை நீக்குவதான விவாதத்தை மீண்டும் எப்போது பாராளுமன்றில் எடுக்கப்போகிறது என்பதில் ஐ.தே.கட்சிக்காரர்களுக்குக் கூட ஆர்வம் தொட்டுவிட்ட போதிலும் அரசோ இவ்விவாதத்தை மாகாணசபைத் தேர்தலுக்கு அண்மையாக எடுத்து ஐ.தே. கட்சியின் வாக்குவங்கியை சரித்து விடத்தான் பெரிதும் முயலக்கூடும்.

ஐ.தே.கட்சி அரசு 'அரசியல் சடுகுடு' ஓட்டங்களுக்குமிடையிலும் நாகேந்திநாத்ஜாவின் கொழும்பு விஜயம் பற்றிய சலசலப்புக்கள் ஓய்ந்தபாடில்லை. வடக்குக் கிழக்கு இணைப்புத் தொடர்பாக ஜா தெரிவித்த கருத்துக்கள் சிங்கள அரசியல்வாதிகள் பெரும்பாலானோருக்கு வயிற்றில் புளியைக்கரைத்து விட்டுள்ளது. ஜாவின் கருத்திற்கு நீதியமைச்சர் பீரிஸ்—ரணிலிடம் வியாக்கியானம் கொடுத்து ரணிலின் வயிற்றெரிவினை தற்காலிகமாக தணிக்க முயன்றுள்ளார். இந்த தணிப்புமுயற்சிகளுக்கு அர்த்தம் உண்டா? இல்லையா? என்பது பற்றி இந்திய அரசின் அடுத்த நகர்வுகள் புலப்படுத்தும்வரை சிறீலங்கா அரசியலில் பதட்டம் கொஞ்சம் நீடிக்கத்தான் செய்யும்.



உதடு பிதுக்கும் சந்திரிகா: கரையும் எதிர்காலம்



மே தினம்: இடதுசாரிகள் கைகோர்க்க மட்டும்


## அறிவித்தல்

பிரான்ஸ் ராதாகிருஸ்ணா ஆலயத்தினரால் நடாத்தப்படும் 1998ம் ஆண்டுக்கான மகாபாரதம், இராமாயணம், பகவத் கீதை வினாவிடை எழுத்துப் போட்டிகள். ஆடி மாதம் 26ம் திகதி ஞாயிற்றுக்கிழமை (26.07.98) அன்று ஆலய மண்டபத்தில் காலை 10மணி தொடக்கம் 12 1/2மணி வரை நடைபெறும்.

இப் போட்டி மூன்று பிரிவுகளாக நடைபெறும். 1. ஆரம்பப் பிரிவு 2. மத்திய பிரிவு 3. அதி மேற்பிரிவு இம் மூன்று பிரிவுகளும் ஒரேநாளில் (19.07.98 ஞாயிற்றுக்கிழமை 10 மணி - 12 1/2) நடைபெறும். இப் போட்டியில் பங்குபற்றி வெற்றி பெறுபவர்களுக்கு தகுந்த பரிசில்கள் காத்திருக்கின்றன. போட்டியில் பங்குபெறுவோர் ஆனி 30 வரை ஞாயிறு தோறும் சென்று தங்கள் - பெயர் - விலாசம் - வயது - தொலைபேசி எண் ஆகியவைவற்றைப் பதிவு செய்து கொள்ளவும். மறந்து விடாது மாதிரி வினாவிடைப் புத்தகத்தை கேட்டுவாங்கிப் படித்து தங்கள் அறிவை மேலும் விருத்தி செய்து போட்டியில் வெற்றி பெறுங்கள்.

இப்போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்குரிய பரிசில்கள் ஆவணி மாதம் 15ம் திகதி சனிக்கிழமை நடைபெற இருக்கும் கிருஸ்ண ஜெயந்தி அன்று இரவு 10 மணிக்கு வழங்கப்படும். ஆகவே போட்டியில் பங்கு பெறுபவர்கள் உடன் கீழ்க்கண்ட விலாசம், தொலைபேசியுடன் தொடர்பு கொள்க.

**TEMPLE RADHAKRISHNA**
**31, rue du Dr. Jean Vaquier**
**93160 Noisy le Grand, (Ling: RER-A)**
**Tel: 01 43 04 32 63**
தமிழ்த் தொலைபேசி: **0143042766 / 0143829637**

# தென் தமிழீழச் செய்திகள்

## பன்சல் கொடல்ல காவலரண்கள் தகர்ப்பு
## 4 படையினர் பலி - 10ற்கு மேல் படுகாயம்

கந்தளாய் பன்சல் கொடல்ல சிறீலங்கா இராணுவக் காவல் நிலைகள் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிவேக அதிரடித் தாக்குதலில் 4 படையினர் கொல்லப்பட பத்துக்கு மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர். பல காவலரண்கள் எரித்து அழிக்கப்பட்டுள்ளன.

கடந்த புதன் இரவு 9 மணியளவில் கந்தளாய் சேருவில பகுதியில் அமைந்துள்ள காவலரண்களை முற்றுகையிட்ட புலிகள் தாக்குதலை வேகமாகத் தொடங்கினர். புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத படையினர் அருகிலுள்ள முகாங்களிலிருந்து மேலதிக படையினரின் உதவி கோரியதைத் தொடர்ந்து சிறீலங்கா விமானப்படையின் எம்.ஐ.24 உலங்கு வானூர்தி தாக்குதலுக்கு உள்ளான முகாமினை நோக்கி விரைந்து தாக்குதலில் ஈடுபடத் தொடங்கியது.

ஆனால் தமது அதிவேகத் தாக்குதலை பத்து நிமிடங்களில் முடித்துக்கொண்ட புலிகளின் அணி கைப்பற்றப்பட்ட ஏராளமான ஆயுத தளவாடங்களுடன் இழப்புக்கள் எதுவுமின்றி தமது தளம் திரும்பினர்.

இத் தாக்குதல் குறித்து கருத்துத் தெரிவித்த படையினர் தரப்பு, இது விடுதலைப் புலிகளின் 'சார்ள்ஸ் அன்ரனி' படைப் பிரிவினராலேயே நடாத்தப்பட்டிருக்க வேண்டும். குறிக்கப்பட்ட இலக்கை குறிக்கப்பட்ட நேரத்தினுள் வெற்றிகரமாக நடாத்தி முடிக்கககக்கூடியவர்கள் அவர்களே எனவும் தெரிவித்துள்ளனர்.

## கிழக்கு இராணுவ நடவடிக்கையால் மக்கள் இடம்பெயர்வு

(29.04.98)

சிறீலங்கா இராணுவத்தினர் கிழக்கில் ஆரம்பித்துள்ள படை நடவடிக்கையால் ஆயிரக்கணக்கான மக்கள் தமது சொந்த இடங்களை விட்டு இடம் பெயர்ந்து வருகின்றனர்.

இவ்வாறு வாகரைப் பிரதேசத்தில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் காட்டுப்பகுதிக்குள் தஞ்சமடைந்து வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இங்குள்ள மக்கள் உணவுத் தட்டுப்பாட்டினால் பெரும் இன்னல்களை அனுபவித்து வருவதுடன், இவ் இராணுவ நடவடிக்கைக்கு கடற்படையினரும் ஒத்துழைப்பு வழங்கி வருவதால், கடற்பரப்பில் ரோந்து நடவடிக்கைகள் அதிகரித்துள்ளமையால் மூதூரிலிருந்து படகுகள் மூலம் வேறு பகுதிகளுக்கு மக்கள் இடம் பெயர்வதும் தடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இராணுவத்தினரின் இவ் இராணுவ நடவடிக்கையை தடுக்கும் முகமாக வெருகல் படகுப் பாதையை விடுதலைப் புலிகள் தகர்த்துள்ளனர் என கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

## யானைகள் அழித்த இடத்தை புகைப்படம் எடுக்க படையினர் அனுமதி மறுப்பு

காட்டு யானைகளின் அட்டகாசத்தினால் அழிக்கப்பட்ட தென்னந் தோட்டங்களை படம்பிடிக்கச் சென்ற பத்திரிகையாளருக்கு படம் பிடிப்பதற்கு இராணுவத்தினர் அனுமதி மறுத்துள்ளனர்.

நிலாவெளிப் பிரதேசத்தில் யானைகளின் அட்டகாசத்தினால் அழிக்கப்பட்ட பல இலட்சம் ரூபா பெறுமதியுள்ள தென்னைகள், வீடுகள், பயன்தரு மரங்கள் என்பவற்றை புகைப்படம் எடுத்து செய்தியும் சேகரித்து வரச் சென்ற பத்திரிகையாளர், இராணுவ சோதனை சாவடியில் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளார். அவரிடமிருந்த புகைப்படக் கருவியை கண்ட படையினர் அவரிடம் வினாவிய போது, தான் ஒரு பத்திரிகையாளர் எனவும், குறிப்பிட்ட இடத்தில் படங்களையும் செய்தியையும் சேகரிப்பதற்காக செல்வதாகக் கூறியும் நம்பமறுத்த படையினர் அரை மணிக்கு மேலாக தடுத்து வைத்து அப் படைமுகாமின் அதிகாரி முன் நிறுத்தியுள்ளனர். அவரை விசாரணை செய்த அதிகாரி, அப் பதிரிகையாளர் திருமலையில் உள்ள 22 படையணியின் பொதுக் கட்டளை அதிகாரியிடமிருந்து எழுத்து மூலமான அனுமதி கொண்டு வராததால் அவரை அப் பகுதிக்கு சென்று புகைப்படம் எடுக்க அனுமதிக்க முடியாது என்று திருப்பி அனுப்பியுள்ளார்.

## இராணுவக் கண்காணிப்பில் நின்ற படகு மாயம்!
### 'புலிகளே கடத்திச் சென்றனர்' -படையினர்

மட்டு. வாழைச்சேனை சத்துருக்கொண்டான் சிறீலங்கா இராணுவ பொலிஸ் காவலரண்களின் முன்பாக உள்ள வாவியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு அதிவேக கண்ணாடி இழைப்படகுகளில் ஒன்று இராணுவ கண்காணிப்பிற்கு முன்பே மாயமாக மறைந்தது படைத் தரப்பினரை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

கடந்த புதன் இரவு ஒன்பது மணிவரை வாவியில் காணப்பட்ட படகு 9.45 மணியளவில் பார்த்தபோது காணாமல் போயிருந்தது. உடனடியாகப் படையினர் தேடுதல் நடாத்திய போது படகினை கண்டுபிடிக்க முடியவில்லை என தெரிவித்துள்ளனர்.

புலிகளின் நீரடி நீச்சல் பிரிவினர் நீந்தி வந்து ஒரு படகில் குண்டினைப் பொருத்திவிட்டு மற்றப் படகினை மெதுவாக நகர்த்திச் சென்று இராணுவ வலையப் பகுதியை தாண்டிய பின் இயந்திரத்தை இயக்கி தப்பிச் சென்றிருக்க வேண்டும் என தெரிவித்துள்ள படைத் தரப்பு, படகில் பொருத்தப்பட்டிருந்த குண்டு, குண்டு செயலிழக்க வைக்கும் பிரிவினரால் செயலிழக்க வைக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

## மாவடி வேம்பில் படையினர் மீது தாக்குதல்

மட்டு - மாவடி வேம்பு பகுதியில் வீதிச் சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சிறீலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 2 படையினர் கொல்லப்பட்டனர்.

கடந்த வியாழன் மதியம் 12 மணியளவில் பதுங்கியிருந்த புலிகளின் அணி அதிரடியாக தாக்குதல் மேற்கொண்டனர்.

இத் தாக்குதலில் கொல்லப்பட்ட இரு படையினரின் சடலங்களுடன் தமது முகாமினை நோக்கி பின்வாங்கிச் சென்றனர்.

இப் பின் வாங்கலின்போது இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீதியில் சென்ற வந்தாறுமூலையைச் சேர்ந்த கே. காசுபதி(45) படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## 'எங்கே என் தேசம்'

தமிழர்களின் தேசியப் பிரச்சினைகளை வெளிப்படுத்தும் ஓவியக் கண்காட்சி ஒன்றை நடாத்த அர்ப்பணா என்ற அமைப்பு முடிவு செய்துள்ளது.

'எங்கே என் தேசம்' என்ற தலைப்புடன் நடாத்தப்படவுள்ள இக் கண்காட்சியில் உங்கள் ஓவியங்களும் இடம் பெற வேண்டுமாயின் எதிர் வரும் 30-ம் திகதிக்கு முன் திருமலையில் உள்ள முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு இதன் அமைப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இக் கண்காட்சியில் சிறந்ததாக தேர்ந்தெடுக்கப்படும் ஓவியங்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## படையினர் துப்பாக்கிச் சூட்டுக்கு விறகு வெட்டச் சென்றவர் பலி

அம்பாறை சாகாயம் காட்டுப் பகுதியில் விறகுவெட்டச் சென்ற ஒருவர் சிறீலங்கா அதிரடிப் படையினரின் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியாகியுள்ளார்.

கடந்த செவ்வாய் அன்று விநாயகபுரத்தைசேர்ந்த வேலுப்பிள்ளை கண்ணமுத்து (45) என்பவர் விறகு வெட்டிக்கொண்டிருந்த போது அங்கு பதுங்கியிருந்த படையினர் அவர் மீது மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அக் குடும்பத்தவர் அவ்விடத்திலேயே உயிரிழந்தார். கொல்லப்பட்ட அவரது சடலம் பொதுமக்களால் கண்டெடுக்கப்பட்டு அக்கரைப்பற்று வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மட்டு - அம்பாறையில் புதிய திட்டம்

சர்வதேச செஞ்சிலுவை சங்கம் (ஐ.சிஆர்சி) உலக வங்கியின் உதவியுடன் மட்டு - அம்பாறை மாவட்டங்களில் நன்னீர் மீன் வளர்ப்பு திட்டமொன்றை அமுல்படுத்தவுள்ளது.

எண்பது இலட்சம் ரூபா செலவில் உருவாக்கப்படவுள்ள இத் திட்டத்திற்கு மட்டக்களப்பு உன்னிச்சைக்குளமும், திருமலை கந்தளாய் குளமும் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இத் திட்டத்தின் மூலம் வருடா வருடம் 10 இலட்சத்திற்கு மேற்பட்ட மீன் குஞ்சுகள் உருவாக்கப்புட்டு இம் மாவட்டங்களில் உள்ள குளங்களில் விடப்பட உள்ளன.

மீன்பிடி தொழில் விருத்தி செய்தல், உள்ளூர் மீனவர்கட்கு தொழில் வாய்ப்பை உறுதிப்படுத்துதல், வறிய குடும்பங்களுக்கு போஷாக்கை வழங்குதல் போன்ற குறிக்கோளுடனேயே இத்திட்டத்தை சர்வதேச செஞ்சிலுவை சங்கம் மேற்கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.


## அம்பாறை - புளுக் காய்ச்சலால் பலநூற்றுக்கணக்கானோர் பாதிப்பு

சிறீலங்காவில் தோன்றியுள்ள புளுக் காய்ச்சல் அம்பாறை மாவட்டத்தையும் தாக்கத் தொடங்கியுள்ளது. கடந்த வாரத்தில் மட்டும், கல்முனை ஆதார வைத்தியசாலையில் 300 நோயாளிகள் வெளி நோயாளர் பிரிவில் அனுமதிக்கப்பட்டதாகவும், அதில் 95 பேர் மேலதிக சிகிச்சைகளிற்காக வைத்தியசாலையில் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கல்முனை தெற்கு வைத்தியசாலையில் 250 பேரும், அம்பாந்துறை வைத்தியசாலையில் 400 பேரும், சாய்ந்தமருது வைத்தியசாலையில் 500 பேரும் சென்ற வாரம் புளுக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு வைத்தியத்திற்குச் சென்றுள்ளனர். இவர்களில் 200க்கும் மேற்பட்டவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதால் வைத்தியசாலையில் தங்கவைக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந் நோய் வேகமாக பரவி வருவதால் இராணுவத் தடையால் போதிய மருந்துகள் இன்றி மக்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்கொள்வதாகவும், வைத்தியசாலையில் தங்கவைக்கப்படுபவர்களுக்கு போதிய படுக்கை வசதிகள் இல்லாததால் தரையிலேயே நோயாளிகள் படுக்க வைக்கப்படுவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.


நித்தி வாகன சேவை



வீட்டுத் தளபாடங்களை ஏற்றி இறக்கவும், ஐரோப்பிய நாடுகளுக்குமான சகல போக்குவரத்துக்கான வாகன வசதிகளுக்கும் இன்றே நாடுங்கள்

உங்கள் தொடர்புகட்கு- நித்தி Tel: 01 48 05 02 14 / 01 43 03 07 08, (Répondeur) 01 49 23 97 32

அவசரத்தொடர்புகளுக்கு: 06 07 34 80 51

Pub

# ஹற்றன் நகரில் குண்டு வெடிப்பு

மேதினத்தன்று அதிகாலை 4.00 மணியளவில் நுவரேலியா மாவட்டத்தின் ஹற்றன் நகர்ப் பகுதியில் இருக்கும் இரு மின் சார மாற்றிகளில் (ரான்ஸ் போமர்) குண்டு வெடிப்புகள் நிகழ்ந்துள்ளன.

'மல்லைபுவ', 'டன்பார்' ஆகிய வீதிகளில் அமைந்துள்ள இம் மின் மாற்றிகளே இக்குண்டு வெடிப்பினால் முற்றாக சேதமடைந்துள்ளன. இக் குண்டு வெடிப்புகளைப் பற்றி புலன் விசாரணைகளை மேற்கொள்ளும் நுவரேலியா பொலிசார், அண்மைக்காலங்களில் பண்டாரவளை, பதுளை நகரங்களில் நடாத்தப்பட்ட மின்மாற்றி குண்டு வெடிப்புகளை ஒத்ததாகவே இதுவும் இருப்பதாக் குறிப்பிட்டுள்ளனர்.

சேதமடைந்த மின் மாற்றிகளின் பெறுமதி ஒரு மில்லியன் ரூபாவாகும்.

இதேவேளை கடந்த 27 ஆந் திகதி இரவு களுத்துறை தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையத்தினுள் நடந்த குண்டு வெடிப்பு சம்பவத்தில் விடுதலைப் புலிகளே முதலாவது சந்தேக நபர்களென குறிப்பிட்டுள்ள பொலிஸ் தரப்பு, இக்குண்டு வெடிப்பினால் ஏராளமான தொலை பரிவர்த்தனை கட்டைகள் அழிந்துள்ளன எனவும் தெரிவித்துள்ளது.

# பண்டாரவளை பகுதியில் இறங்கிய மர்ம பறக்கும் கலம்

மலையகத்தின் பண்டாரவளை பகுதியில் கடந்தவாரம் சிறிய வான்கலமொன்று தரையிறங்கியதை தாம் கண்டதாக சிலர் தெரிவித்ததையடுத்து அப்பகுதியில் தற்போது பீதி நிலவி வருகிறது. இச் சம்பவம் பற்றி மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளவென சிறீலங்காவின் புலனாய்வுத் திணைக்கள அதிகாரியொருவரும் அங்கு சென்றுள்ளார்.

சிறிய பறக்கும் கலமொன்று இறங்கியதை நாம் கண்டதாக அப்பகுதி ஆரம்ப பாடசாலை மாணவர்களும் தெரிவித்துள்ளனர். இக் கலம் இறங்கிய இடத்தில் ஏற்பட்ட அடையாளங்களையும், சிறிய காலடையாளங்களையும் அப்பகுதிக்கு விரைந்த மக்கள் பெருமளவு அழித்த போதிலும் இன்னும் கொஞ்சம் அடையாளங்கள் அங்கு காணப்படுவதாகவும் கூறப்படுகிறது.

இந்த மர்ம பறக்கும் கலத்தினை நேரடியாக பார்த்ததாக கூறிய மாணவன் ஒருவன் அக் கலத்தின் மாதிரி உருவத்தினையும் வரைந்து தான்கண்ட சம்பவத்தினையும் எழுத்து மூலமாக புலனாய்வு துறையிடம் சமர்ப்பித்துள்ளான்.

தரையிறங்கிய வான்கலம் எங்கு சென்றது என்ற மர்மம் இன்னும் துலங்காதமையால் இப் பகுதி மக்களிடையே பரபரப்பு நிலவி வருகிறது.

# கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு அருந்தியோர் வைத்தியசாலைகளில்

யாழ்.குடாவில் மீண்டும் என்றுமில்லாத அளவிற்கு கசிப்பின் உற்பத்தி பெருகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் இக் கசிப்பினை அருந்திய பலர் பாதிப்படைந்து வைத்தியசாலைகளில் பெருமளவில் அனுமதிக்கப்ப்ட்டு வருகின்றனர்.

இங்கு வருபவர்கள் வயிறு எரிவு, நிமோனியா, காய்ச்சல், கைகால் உழைவு போன்ற பல்வேறு நோய்களினால் அவதிப்படுவதாக வைத்தியசாலை தகவல்கள் கூறுகின்றன.

மக்களின் குடும்ப வாழ்க்கையை சீர்குலைப்பதுடன், ஆபத்து நிறைந்த நோய்களை உருவாக்கி மனித உயிர்களை பலிகொள்ளும் இக் கசிப்பு உற்பத்திக்கு விடுதலைப் புலிகள் முற்றாக தடை விதித்திருந்தமை தெரிந்ததே. மீண்டும் சிறீலங்கா இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பில் தலை தூக்கியுள்ள இக் கசிப்பு உற்பத்தியை முன்னின்று செய்பவர்கள் பல குடும்பப் பெண்கள் என்பது வேதனை தருவதாக உள்ளதென குடாநாட்டு பொதுமகன் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# 'யால' காட்டினை காக்க விசேட படையணி

யால காட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகளின் தளங்களும், முகாம்களும் அமைந்திருப்பதுடன், அப் பகுதியில் அவர்களது நடமாட்டமும் அதிகரித்திருப்பதால் பீதிகொண்ட சிறீலங்கா படைத்தரப்பு யால காட்டுப் பகுதியை பாதுகாக்கவென விசேட படையணி ஒன்றினை இராணுவ தளபதி றொகான் தலுவத்தையின் பணிப்பில் அமைத்துள்ளது.

இப் படையணிக்கான முதற் தொகுதிச் சிப்பாய்கள் நூறு பேருக்கு தற்போது மாத்தறை இராணுவ முகாமில் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. ஏற்கனவே யால பகுதி பாதுகாப்பிற்காக பிரிகேடியர் என்.ரி. பெரேரா நியமிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# கட்டாக்காலிகளால் விவசாயிகள் பாதிப்பு

யாழ். குடாநாட்டில் கட்டாக்காலி ஆடு, மாடுகளின் தொல்லையால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்ட வண்ணம் உள்ளனர்.

ஊரடங்கச் சட்டம் அமுலில் உள்ளதால் தோட்டங்களில் புகுந்து பயிர்களை அழித்து வரும் இக் கட்டாக்காலிகளின் தொல்லைகளை தடுக்க முடியவில்லை என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

பண்டத்தரிப்பு, மாதகல், வடலியடைப்பு பகுதிகளில் உள்ள தோட்டக் காணிகளிலேயே ஏராளமான கட்டாக்காலிகள் நடமாடுவதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

# காணாமல்போன சிறுமி பிணமாக மீட்பு

செட்டிக்குளம் தொட்டுவாகை எனும் இடத்தில் காணாமல் போன ஆறுவயதுச் சிறுமி மூன்று நாட்களின் பின் பிணமாக மீட்கப்பட்டுள்ளார். இச்சிறுமி கொலை செய்யப்பட்ட பின்னரே கிணற்றினுள் வீசப்பட்டிருக்கலாம் என சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

இம் மரணம் தொடர்பாக இளைஞர் ஒருவர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.





எங்கும் கிடைக்கிறது







Marketed & Distributed by
Ayngaran Limited
172, Woodmansterne Road,
London SW16 5TZ,
United Kingdom.
Tel: 0181 7645200
Fax: 0181 764 5255
E-mail: bhasky@aol.com




போலி CD க்களை வாங்கி ஏமாறாதீர்கள். Bhasky முத்திரைகளை கவனித்து வாங்குங்கள்

# ஜெயசிக்குறுவிற்கு ஒலுமடு கற்றுக்கொடுத்த புதிய பாடம்

ஜெயசிக்குறுய் துருப்பினர் மாங்குளத்தை மீண்டும் ஒருமுறை கைப்பற்ற முனைந்து ஒலுமடு சந்தியில் சந்தித்த கடந்த வாரத் தோல்வியானது இராணுவத் தலைமையை ஜெயசிக்குறுய் நகர்வுப் பாதையை திசைதிருப்பும் அளவிற்கு மாற்றியுள்ளது.

கடந்த 20ம் திகதி சிறீலங்காவின் உயர் இராணுவ தளபதிகளின் ஒப்புதலுடன் 25ற்கு மேற்பட்ட தாங்கிகள், கவச வாகனங்கள் சகிதம் மேற்கொள்ளப்பட்ட மாங்குளம் நோக்கிய நகர்வு முயற்சி விடுதலைப் புலிகளின் பலமுனைத் தாக்குதல்களினூடே ஒலுமடுச் சந்தியில் முறியடிக்கப்பட்டது. இத்தாக்குதலின்போது விடுதலைப் புலிகளின் எறிகணைகளால் தரைப்படையினர் தாக்கப்படா



# புதிய பாதை திறப்பிற்காக குரலெழுப்பும் இராணுவம்

மல் இருப்பதற்காகவும், மிக வேகமான ஒரு தகர்த்து முன்னேறும் ஒரு நகர்வினை கனரக வாகனங்களின் மூலமே முடியும் என்ற படைத் தளபதிகளின் அசைக்கமுடியாத அந்த சூரியக்கதிர் அனுபவத்தினை இங்கு ஒலுமடுவில் அரங்கேற்ற முனைந்தவேளை, அந்த நம்பிக்கையை தகர்த்தெறியும் நடவடிக்கையினை விடுதலைப் புலிகள் மேற்கொண்டனர்.

எதிர்பின்றி நகர்ந்த இரா

**அப்போது சில இராணுவத் தளபதிகள் இந்தப் பாதை திறப்பானது பெரும் இழப்புக்களை ஏற்படுத்தக்கூடியது என்றும், வவுனியாவிலிருந்து கிளிநொச்சிக்கான பாதை திறப்பு மிகவும் இலகுவானது என்றும் எடுத்துக்கூறினர். மேலும் இப் பாதையைத் திறக்கும் போது ஏற்படும் மோதல்களில் பெருமளவிலான விடுதலைப் புலிகளை தம்மால் அழிக்க முடியும் என்றும் அவர்களது ஆள், ஆயுத பலத்தை தம்மால் குறைக்க முடியும் என்றும் கூறினர்.**

ணுவ, கனரக அணிகள் மீது திடீரென மோட்டார், எறிகணைத் தாக்குதல்களை விடுதலைப் புலிகள் மேற்கொண்டனர். ஒலுமடுவில் விடுதலைப் புலிகள் பாரிய நிலைகள் எதுவும் இல்லை என தப்புக்கணக்குப் போட்டிருந்த அந்த இராணுவ அணி மோட்டார் மழைக்குள் சிக்கிக்கொண்டபோது தப்பி ஒதுங்கக்கூட முடியாத நிலையில் ஏராளமான இராணுவத்தினர் இறந்தும், மரண காயத்திற்கும் உள்ளானார்கள். அத்துடன் முன்னேறிய தாங்கிகள் தீப்பிடித்து எரியத்தொடங்க, சில தாங்கிகள் மோட்டார்த் தாக்குதல்களால் சேதமடைய,

திருத்த முயன்ற இராணுவத் தளபதி காணாமல்போக எஞ்சிய தாங்கிகளையும் திருப்பிக் கொண்டு இராணுவத்தினர் வந்தவழியே திரும்பி ஏற்கெனவே இருந்த நிலைகளையும் தாண்டி பின்னோக்கிப் போய் நின்றனர். விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் 90 வீதமானவை முடிந்து விட்டன. எஞ்சியவையும் விரைவிலேயே முடித்துவிடுவோம் எனக்கூறிய அரசின் கூற்றிற்கு இத்தாக்குதல்கள் மூலம் விடுதலைப் புலிகள் எதிர்மாறான பதிலை அளித்துள்ளனர். அதாவது 15 வீதமான போர்தான் முடிந்துள்ளன. மிகுதி 85 வீதம் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றன என்பதுதான் உண்மை.

கடந்த 20ம் திகதி ஏற்பட்ட படுதோல்வியின் காரணங்களை அறிய கடந்த 23ம் திகதி பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் 'ஜெயசிக்குறுய்' நடவடிக்கைத் தலைமையகத்திற்கு விஜயம் செய்தார். அவருடன் முப்படைத் தளபதி ஜெனரல் ரோகான் தலுவத்தை, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் திசில் திசேரா, விமானப்படைத் தளபதி ஜெயலத் வீரக்கொடி போன்ற படைத் தளபதிகளும், பொலிஸ் மாஅதிபர் ராஜகுருவும் சென்றிருந்தனர். வவுனியாவில் நடவடிக்கைத் தலைமையகத்தை சென்றடைந்த குழுவினர், ஜெயசிக்குறு நடவடிக்கையின் தளபதி மேஜர் ஜெனரல் சிறிலால் வீரசூரியா, கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் கருணாதிலக போன்றோருடன் ஒலுமடு தோல்வி பற்றிய ஆராய்வில் ஈடுபட்டனர். அதன் பின் இக்குழு போரின் முன்னணிப் பகுதிக்கு சென்றடைந்தனர். அங்கு கட்டளையிடும் அதிகாரிகளிடம் நிலைமைகளை கேட்டறிந்தபின் கனகராயன்குளம் பகுதியில் அமைந்திருந்த 56வது படைப்பிரிவின் தற்காலிக தலைமையகத்தில் பிராந்தியத்தின் முக்கிய இராணுவ தளபதிகளை உள்ளடக்கிய மகாநாடு ஒன்று ரத்வத்தையால் கூட்டப்பட்டது. அங்கு 'முழுத் தேசமுமே எங்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறது. துணிவினை இழக்காது புலிகளின் பலத்தை உடைத்தெறியுங்கள்' என ரத்வத்தை கூறினார். இம் மகாநாடு முடிந்தவுடன் ரத்வத்தை குழுவினர் கொழும்பு திரும்பினர்.

மீண்டும், 28ம் திகதி ரத்வத்தை வவுனியா நோக்கி மற்றொரு திடீர் பயணத்தை மேற்கொண்டார். இம்முறை 55 வது படைப்பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, 56 வது படைப்பிரிவின் தளபதி சுசில் சந்திரபால, 53 வது படைப்பிரிவின் தளபதி நீல் டயஸ் போன்றோருடன் பேச்சுக்களை நடத்தினார். பேச்சுக்களினிடையே மற்றைய ஜெயசிக்குறுய் தளபதிகளும் இணைந்து கொண்டனர். இப் பேச்சுக்களின் போது நடந்து முடிந்த தோல்வி பற்றி பிரஸ்தாபிக்காது, மீண்டுமொருமுறை மாங்குளத்தை கைப்பற்றுவதற்கான திட்டமிடலை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது. கடந்தவாரம் முழுதும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை தனது முழுவேலைகளையும் ஒதுக்கிவிட்டு ஒலுமடுத் தோல்வி பற்றியும், மீண்டும் மாங்குளத்தை எப்படி கைப்பற்றுவது என்பது பற்றியும் படைத் தளபதிகளுடன் ஆலோசித்துக் கொண்டிருந்தார். அவரது எண்ணப்படி மாங்குளம் நகர் எப்படியாவது கைப்பற்




றப்பட்டே ஆகவேண்டும்.

ஆனால், மாங்குளம் கைப்பற்றுதல் என்பது இராணுவத்தைப் பொறுத்தவரை லேசான காரியமில்லை என்பது சகலரும் அறிந்துகொண்டுள்ள உண்மை. மாங்குளம் நகரின் தென்பகுதியில் சில கிலோமீற்றர்கள் கீழாக ஜெயசிக்குறுயின் ஒரு பகுதியினர் கடந்த இரண்டு மாதங்களாக காத்திருக்க இன்னுமொரு பிரிவினர் ஒலுமடுப் பகுதியின் பின்பகுதியாக கரிப்பட்ட முறிப்பு பகுதியில் நிலைகொண்டுள்ளனர். இதேவேளை விடுதலைப் புலிகளின் அணிகள் மாங்குளம் முழுதும் பரவிநின்றும், ஜெயசிக்குறுய் படைகளுக்கு சூழவாகவும் நிலைகொண்டுள்ளனர்.

மாங்குளம் பகுதியில் மாத்திரம் விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகள் உட்பட நான்கு தளபதிகள், இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட போராளிகளுடன் நிலைகொண்டுள்ளனர். இப் போராளிகள் விடுதலைப் புலிகள் அமைப்பின் விசேட தாக்குதல் படையணிகளைச் சேர்ந்தவர்கள் என்றும், ஜெயசிக்குறுய் படையணிகளுக்கு எதிரான தாக்குதல்களின் போது இவ் அணிகளால் நடத்தப்பட்ட தாக்குதல்களே மிக உக்கிரமானவை என்றும் இப் பகுதியிலேயே இராணுவத்தினர் பாரிய இழப்புக்களை சந்தித்தனர் என்றும் சொல்லப்படுகின்றது.

கடந்த வருட ஆரம்பத்தில் இராணுவ பிரதானிகளைக் கொண்ட கலந்துரையாடல் ஒன்றின் போது வவுனியா, மன்னார் - பூநகரி - பரந்தன் வழியாக புதிய பாதை ஒன்றைத் திறப்பது அவசியம் எனக் கூறப்பட்டது. அப்போது சில இராணுவத் தளபதிகள் இந்தப் பாதை திறப்பானது பெரும் இழப்புக்களை ஏற்படுத்தக்கூடியது என்றும், வவுனியாவிலிருந்து கிளிநொச்சிக்கான பாதை திறப்பு மிகவும் இலகுவானது என்றும் எடுத்துக்கூறினர். மேலும் இப் பாதையைத் திறக்கும் போது ஏற்படும் மோதல்களில் பெருமளவிலான விடுதலைப் புலிகளை தம்மால் அழிக்க முடியும் என்றும் அவர்களது ஆள், ஆயுத பலத்தை தம்மால் குறைக்க முடியும் என்றும் கூறினர். இதேசமயம் கடந்த வருடம் பெப்ரவரி மாதம் சிறீலங்காவின் 49வது சுதந்திர தினத்தின்று ஆரம்பிக்கப்பட்ட 'எடிபல' இராணுவ நடவடிக்கையின் மூலம் வவுனியா மன்னார் பிரதான பாதையை எதிர்ப்பின்றி இராணுவம் கைப்பற்றிக்கொண்டது. தரைப் பாதை ஒன்றை யாழ் நோக்கி திறக்க முடியும் என்ற துணிவினை எடிபலவே பெற்றுக் கொடுத்தது. ஒருபுறம் விடுதலைப் புலிகளின் பலத்தை ஒரு பெரும் இராணுவ நடவடிக்கை ஒன்றின் மூலம் ஒழிக்கலாம் என்று மட்டும் சிந்தித்த இராணுவத் தலைமை அந் நடவடிக்கைக்காக தாம் பயணம் செய்யும் பகுதிகளின் புவியியல் நிலைமைகளையோ அல்லது அதன் தன்மைகளையோ ஆராயத் தவறினர். விடுதலைப் புலிகளின் ஆளுமைக்குட்பட்டிருந்த பெரும் வனாந்தரப் பகுதிகளினூடாக தாம் நகரும் போது ஏற்படவிருந்த இடிப்புக்கள் பற்றி எண்ண மறந்தனர். இன்று அதன் பலனை அனுபவிப்பது மட்டுமல்லாமல் பல்லாயிரம் கோடி ரூபா பெறுமதியான ஆயுத தளபாடங்களை விடுதலைப் புலிகளிடம் பறிகொடுத்தும், இழந்தும் உள்ளனர்.

இன்று, ஒருவருடத்தை எட்டியுள்ள ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கையில் மிக இலகுவாக கைப்பற்றப்பட்ட பகுதி வவுனியாவிலிருந்து ஏழு கிலோமீட்டர் தூரம்வரையான பகுதியே. இங்கு ஓமந்தையை கைப்பற்றிக் கொண்டிருந்த வேளை முதலாவது பெரும் தாக்குதலை படையணி சந்தித்தது. அன்றிலிருந்து இன்றுவரை ஐந்து முதல் ஏழுவரையான பெரும் சண்டைகளையும், மேலும் பல சிறு மோதல்களையும் இப் படையணிகள் சந்தித்துள்ளன. இதில் புளியங்குளம் மோதல், பெரியமடு, மன்னங்குளம் மோதல்கள் போன்றவைகள் மிகவும் முக்கியமானவை. இன்று மாங்குளம் மோதல் ஒரு பெரும் திருப்பத்தையே ஏற்படுத்தியுள்ளது. இறுதியாக ஏற்பட்ட தோல்வியினைத் தொடர்ந்தும், இதுவரை ஏற்பட்ட பெரும் இழப்புக்களைக் காரணம் காட்டியும் ஒரு பகுதி இராணுவத் தளபதிகள் கிளிநொச்சியை அடைவதற்கு பூநகரி சங்குப்பிட்டி ஊடான பாதையை இழப்புகள் அதிகமின்றி திறக்கமுடியும் என்றும், இதன் மூலம் தொடரப்போகும் ஜெயசிக்குறுய் இழப்புக்களை தவிர்க்க முடியுமென்றும் எடுத்துக்கூறியுள்ள போதும் தற்போதைய நிலைமையில் இது தாமதமான ஒரு யோசனை என இராணுவ ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

# ‘குற்றப்பத்திரிகை தாக்கலான எவருக்கும் எனது அமைச்சரவையில் இடமில்லை’


## இந்தியப் பிரதமர் வாஜ்பாய் அறிவிப்பு!

நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கலான எவரும் தன்னுடைய அமைச்சரவையில் இடம்பெற முடியாது என்று பிரதமர் வாஜ்பாய் திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

கொங்கன் ரயில்வே திட்டத்தை தொடக்கி வைப்பதற்காக மும்பை வந்த பிரதமர், ராஜ்பவனில் பத்திரிக்கையாளர்களைச் சந்தித்துப் பேசினார். அப்போது அவரிடம் ஊழல் புகாருக்குள்ளான ராம் ஜெத்மலானி ஹெக்டே போன்றவர்களை அமைச்சரவையிலிருந்து நீக்கவேண்டும் என்ற கோரிக்கை பற்றி பிரதமரிடம் கேட்கப்பட்டது.

அதற்கு பிரதமர் பதிலளித்ததாவது:—

ஒருவர் குற்றவாளியா இல்லையா என்று உடனே கூறிவிட முடியாது. நீதிமன்றத்தால்



குற்றப்பத்திரிகை தாக்கலாகாத வரை ஒருவர் குற்றவாளி என்று கூறுவது மிகக் கடினமான விடயம். சுக்ராம் விடயத்திலும்கூட அவரை நான் அமைச்சர் பதவியிலிருந்து விலக வேண்டும் என்று ஆலோசனை கூறினேன். ஜெத்மலானி ஹெக்டே ஆகியோரிடமும் அவர்கள் மீதான புகாருக்கு உரியவிளக்கம் அளிக்கும்படி கேட்டுள்ளேன். அவர்களின் விளக்கம் ஆய்வு செய்யப்பட்டு தேவையானால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

என்னுடைய அரசு நிலையாக இருக்கும். தினம் தினம் அரசுக்கு வலு கூடுகின்றது. நாட்டின் வளர்ச்சியை பாதிக்கும் வகையில் அரசியல் கட்சிகளின் தத்துவ வேறுபாடுகள் இருக்கக் கூடாது. இவ்வாறு பிரதமர் கூறினார்.

# தென் அமெரிக்காவில் இந்தியக் குடியரசுத் தலைவர்!

ஐக்கிய அமெரிக்க பயணத்தை முடித்துக் கொண்ட குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணன் தற்போது தென் அமெரிக்க நாடுகளில் ஐந்து




நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கிறார். இதில் முதல் கட்டமாக பெரு நாட்டின் தலைநகர் லிமாவுக்கு வந்து சேர்ந்தார். தொடர்ந்து பிரேசில் நாட்டுக்கும் செல்லவுள்ளார்.

பெரு நாட்டின் அதிபர் அல்பர்ட்டோ பியூஜிமோரியைச் சந்தித்த இந்தியக் குடியரசுத் தலைவர் ஐ.நா. அமைப்பின் பாதுகாப்புச் சபையில் இந்தியா நிரந்தர உறுப்பினராவதற்கான ஆதரவை அவரிடம் கோரினார். அதற்குப் பதிலளிக்கும் வகையில் இந்தியா நிரந்தர உறுப்பினராக இருக்கத் தகுதியுள்ள நாடாகும் என பெரு நாட்டின் அதிபர் கூறினார்.

இந்தியாவின் விண்வெளி ஆராய்ச்சித்துறையிலும் பெருவின் எஃகு உற்பத்தித்துறையிலும் ஒப்பந்தம் செய்துகொண்டு இரு நாடுகளும் அதில் கையெழுத்திட்டன.

இதேவேளையில் உலக சிறந்த இராஜதந்திர விருது, இந்தியக் குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணனுக்குக் கிடைத்துள்ளது குறிப்பிடத் தக்கது.




# கருணாநிதி குற்றவாளி

## பாராளுமன்றத்தில் எடுத்துரைப்பேன்

### - வைகோ அறிவிப்பு!


குமரி மாவட்டத்தில் மே தின விழாவில் கலந்துகொள்வதற்காக நாகர்கோவில் வந்த ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ பத்திரிகையாளரிடம் பேசினார். அப்போது அவர் குறிப்பிட்டதாவது:

கருணாநிதியை குற்றவாளிக் கூண்டில் நிறுத்த வேண்டும் இதனை பாராளுமன்றத்தில் எடுத்துக் கூற உள்ளேன். கோவை குண்டுவெடிப்பு குறித்து சி.பி.ஐ. விசாரிக்க வேண்டும். தமிழக அரசின் வெள்ளை அறிக்கையாக மூடிமறைக்கப்பட்ட அறிக்கை.



இருந்தபோதும் தனது கடமையிலிருந்து முதல்வர் தவறிவிட்டார் என்பதை இந்த அறிக்கை சுட்டிக் காட்டுகின்றது. மத்திய அரசு உளவுத்துறை அளித்த எச்சரிக்கையை தி.மு.க. அரசு புறக்கணித்தது.

ஆனால் தற்போது முதல்வர்



குண்டு வெடிப்புச் சம்பவம் குறித்து அதிகாரிகள் மீது பழி சுமத்தி தான் தப்பிக்க முயற்சிக்கிறார். கோவை சம்பவத்தை தடுக்க நடவடிக்கை எடுக்காததால் 90 பேர்கள் கொல்லப்பட்டனர். இதற்கு கருணாநிதிதான் பொறுப்பு. வாஜ்பாய், அத்வானி போன்ற தலைவர்கள் பற்றி கருணாநிதி கடுமையாக விமர்சித்த பேச்சுகள் பயங்கரவாதிகளுக்கு ஊக்கமளித்தது. இந்திய குற்றவியல் சட்டப்படி இது குற்றமானது. ஆதலால் கருணாநிதியை குற்றவாளிக் கூண்டில் நிறுத்த வேண்டும் என வைகோ தெரிவித்தார்.

# நீதியின் பிடியிலிருந்து யாரும் தப்ப முடியாது

## கருணாநிதி எச்சரிக்கை!

சட்டத்தின் சந்துபொந்துகளில் புகுந்து விளையாடலாம் என்று ஜெயலலிதா நினைத்தாலும் நீதியின் பிடியிலிருந்து அவர் தப்ப முடியாது என தமிழக முதல்வர் கருணாநிதி கூறினார். சென்னையில் நடைபெற்ற மே தினப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்ட கருணாநிதி கூறியதாவது:—

நான்கு முறை ஆட்சியில் இருந்துவிட்டோம், இந்த ஆட்சியைக் கலைப்போம் என்று சொல்கிறார்கள். ஏனென்றால் சட்டம்-ஒழுங்கு எல்லாம் கெட்டுவிட்டது என்று ஜெயலலிதா



சொல்கிறார். அண்ணா வேடிக்கையாக ஒரு கதை சொல்வார், ஆற்று வெள்ளம் ஒரு நரியை அடித்துக்கொண்டு போனதாம். அப்போது ‘உலகம் போச்சே உலகம் போச்சே’ என்று ஒரு குரல் வந்தது.

ஆற்றங்கரையில் இருந்தவர்கள் எல்லாம் ஓடிச்சென்று அந்த நரியைப் பிடித்து கரைக்கு இழுத்துவந்து ‘உலகம் போச்சே என ஏன் கத்தினாய்?’ எனக் கேட்டார்களாம். அதற்கு அந்த நரி ‘நீங்கள் என்னைக் காப்பாற்றாவிட்டால் என்னுயிர் போயிடுமே’ என்று சொன்னதாம். அந்த நரியைப் போன்றே, ஜெயலலிதா இன்று ‘உலகம் போச்சே, சட்டம் போச்சே, ஒழுங்கு போச்சே’ என்று சத்தம் போட்டுக்கொண்டு இருக்கின்றார். சட்டம் எங்கும் போகாது; அது நிரந்தரமாகத்தான் இருக்கும். அந்த சட்டத்தின் சந்துபொந்துகளில் சிலநாள் நுழைந்து விளையாடிப் பார்க்கலாம்; ஆனால் நீதி வளையாது. அப்படி வளைந்தாலும் மதுரையில் எப்படி நீதி நிமிர்த்தப்பட்டதோ அதுபோல் நீதிமன்றத்தில் நீதி நிமிர்த்தி வைக்கப்படும் என்பதை ஜெயலலிதாவுக்கு எச்சரிக்கையாகத் தெரிவித்துக்கொள்கிறேன்’ இவ்வாறு அவர் கூறினார்.

# பாரதிய ஜனதா கட்சிக்கு புதிய தலைவர்!

பாரதிய ஜனதாக்கட்சியின் தலைவராக இருந்த எல்.கே. அத்வானி உள்துறை அமைச்சராக பொறுப்பேற்றதால் புதிய தலைவர் தெரிவு அவசியமாகியது. இவ்வேளையில் பாஜ.கட்சியின் தேசியற்குழுக் கூட்டம் குஜராத் மாநிலத்தில் கூடியுள்ளது. இதில் புதிய தலைவராக குஷபாவு தாக்கரே போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஞாயிற்றுக்கிழமையிலிருந்து புதிய தலைவராக பொறுப்பேற்கும் குஷபாவு பத்திரிகையாளரிடம் பேசுகையில் ஆர். எஸ்.எஸ். இயக்கத்தின் கட்டுப்பாட்டில் பாரதிய ஜனதா செயல்படுவதாக கூறப்படுவதை ஏற்க முடியாது எனக் கூறினார்.

1986 1998

இலாப நோக்கமற்ற 12 வது வருட சேவையில்

பாரீஸ் தமிழர் கல்வி நிலையம்

CENTRE PARISIEN D'EDUCATION POUR LES TAMOULS

உச்சரிப்பு, இலக்கண,
உரையாடலுக்கான

புதிய பிரெஞ்சு வகுப்பு

காலம் : 09.05.98

நேரம்: மாலை 2.30

கஜன்

பிரெஞ்சு உயர்தர வகுப்புகள்
1.00, 2.30, 4.00, 5.30,
ஆகிய நேரங்களில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன

நேரடி தொடர்புகளுக்கு
165 rue de Charonne, 75011 Paris.
(M° : Alexandre Dumas ou Charonne)

# தமிழில் கார்ல் மார்க்சின் 'மூலதனம்' நூல் மே 5-ல் சென்னையில் வெளியீட்டு விழா !

கம்யூனிச தத்துவத்தின் தந்தை என புகழப்படும் கார்ல் மார்க்ஸ் எழுதிய மூலதனம் நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு சென்னையில் மே 5-ல் வெளியிடப் படுகின்றது. இதுபற்றி அந்நூலை வெளியிடும் என்.சி.பி.ஏச் நிறுவனத்தின் தலைவர் ப. மாணிக்கம் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்ததாவது:

1964-க்கு முன்பே வங்காளம், மலையாளம் ஆகிய மொழிகளில் வெளிவந்துவிட்டது. 1959-ம் ஆண்டிலேயே மூலதனம் நூலை தமிழில் கொண்டு வர முயற்சித்தோம். அப்போது சிறையிலிருந்த கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் பாலதண்டாயுதம் மொழிபெயர்க்க முயற்சித்தார். முதல்பாகம் முடிவுறும் நிலையில் அவர் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார். ஆனால் மொழிபெயர்ப்பு நகல்கள் காணாமல் போய்விட்டன. 1964-ல் மூலதனத்தை மொழிபெயர்க்க முப்பது பேர்கொண்ட ஒரு குழு அமைத்தோம். அதில் ஒரு சில பகுதிகள் மொழிபெயர்க்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டது. பின்னர் அது முழுமை அடையவில்லை. அவ்வேளையில்தான் தூக்குத்தண்டனை பெற்ற நக்சல்பாரி கைதியாக சிறையிலிருந்த தியாகு மூலதனம் நூலை தமிழில் மொழிபெயர்ப்பது பற்றி அறிந்த நாம் அவருக்கு உதவினோம். சிறந்த மொழிபெயர்ப்பாளரான கிருஷ்ணய்யாவின் பெரும் உதவியுடன் இந்நூலை தியாகு மொழிபெயர்த்தார். இந்நூலை சரிபார்த்து எடிட் செய்ய ஏழு ஆண்டுகளாயின. மொத்தம் 3200 பக்கங்களுடன் இந்நூல் வெளியிடப்படுகின்றது. இந்நூலைத் தொடர்ந்து மார்க்சிய கலைச்சொல் அகராதியை வெளியிடத் திட்டமிட்டுள்ளோம்.

சென்னை தேவநேயப்பாவாணர் நூலக அரங்கில் இந்நூல் வெளியீட்டப்படுகின்றது, இதனை தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர். தமிழ்க்குடிமகன் வெளியிட்டு வைக்கின்றார்.

## ஓராண்டை எட்டியுள்ள உண்ணாவிரதம் !

ஜெயின் மதத்தலைவரான 65 வயதாகும் ஸ்ரீ சாகாஜ் முனி மகராஜின் உண்ணாவிரதம் ஓராண்டை எட்டுகின்றது. தனது 20 வயதில் துறவியான இவர் கடந்த ஓராண்டாக ஒரு நாளைக்கு இருமுறை வெந்நீர் மட்டுமே அவர் பருகிவந்தார். களைப்புடன் காணப்பட்ட அவர் இந்த உண்ணாவிரதத்தால் தான் மிகவும் மகிழ்ச்சியடைந்ததாக கூறினார்.

இவரை 11 மருத்துவர்கள் தொடர்ந்து பரிசோதித்து வந்தனர். அவரது உடல் நிலை சீராக இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். ஓராண்டு நிறைவுடன் தனது விரதத்தை முடிக்கின்றார்.

# 'ஐ.நா பாதுகாப்புச் சபையில் இந்தியாவும் நிரந்தர உறுப்பினராக வேண்டும்'

## அமெரிக்க உதவியை நாடும் இந்தியா !

ஐக்கிய நாடுகள் அமைப்பின் பாதுகாப்பு சபையை விரிவுபடுத்தும்போது அதில் இந்தியாவை நிரந்தர உறுப்பு நாடாக சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற முயற்சியில் இந்திய குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணன் ஈடுபட்டு வருகின்றார். இம் முயற்சிக்கு அமெரிக்க ஆதரவு தேவை எனக் கருதும் இந்தியக் குடியரசுத் தலைவர் அவ்வாதரவினை திரட்டும் பொருட்டு கடந்தவாரம் அமெரிக்க பயணத்தை மேற்கொண்டு நியூயோர்க் சென்றிருந்தார்.

அமெரிக்கா வந்தடைந்த குடியரசுத் தலைவர் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்களான பிராங் பலோன் கேரி ஆக்கர்மேன் தாமஸ் மான்டன் ஆகியோரைச் சந்தித்து இந்தியாவின் கோரிக்கையை அமெரிக்கா ஏற்றுக் கொள்ளவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். இந்திய குடியரசுத் தலைவரின் கோரிக்கையின் நியாயத்தை ஏற்றுக் கொண்ட ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் அமெரிக்க நாடாளுமன்றத்தில் இந்தியாவின் குரலை ஒலிக்கச்செய்தனர்.

இந்திய குடியரசுத் தலைவரைச் சந்தித்த பிராங் பலோன் அமெரிக்க நாடாளுமன்ற உரையில் தெரிவித்ததாவது; ஐக்கிய



நாடுகள் அமைப்பின் பாதுகாப்பு சபை விரிவுபடுத்த வேண்டும். அதில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்பினர் பதவி வேண்டும் என்று இந்தியா கோரி வருகின்றது. இக்கோரிக்கைக்கு அமெரிக்காவின் நேரடி ஆதரவு தேவை என்று கேட்டுக்கொள்ளவே நாராயணன் அமெரிக்கா வந்திருக்கின்றார்.

அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவு சமீப காலங்களில் வளர்ந்து வருகின்றது. வாஜ்பாய் தலைமையிலான புதிய அரசும் பொருளாதார சீர்திருத்தங்களையும் தாராளமயமாக்கலையும் தொடர்ந்து கடைப்பிடிக்கின்றது. இந்தியாவுக்கு நாம் தொடர்ந்து முக்கியத்துவம் தரவேண்டும். பில் ரிச்சர்ட்சனை தனது தூதுவராக அமெரிக்க அதிபர் அனுப்பி வைத்தது, பிரதமர் வாஜ்பாய் அவர்களுக்கு மகிழ்ச்சியை அளித்திருக்கிறது. அரசியல் பொருளாதாரம் ராஜரீகம் ஆகிய துறைகளுடன் இராணுவத் துறையிலும் நம்மிரு நாடுகளும் மேலும் நெருங்கி ஒத்துழைக்கும் நேரம் வந்திருப்பதாக கருதுகிறேன் என்றார் பலோன்.

# சூரிய ஒளியில் மின்சக்தி தமிழ்நாடெங்கும் சூரியசக்தி நீரிறைப் பொறிகள்

தமிழ்நாடு மாநிலமெங்கும் சூரிய சக்தி நீரிறைப் பொறிகளை நிறுவுவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி தமிழ்நாடு அரசு பரிசீலித்து வருவதாக மின்துறை அமைச்சர் தெரிவித்தார். தமிழ்நாட்டில் நீரிறைப் பொறிகளுக்கு மின்சாரம் பெறுவதற்கு 4.80 இலட்சம் விவசாயிகள் காத்திருக்கிறார்கள்.

இத்தகைய சூழ்நிலையில் சூரிய சக்தியிலான நீரிறைப் பொறிகள் சிறு விவசாயிகளுக்கு நம்பகமான ஒரு மாற்றாக அமையும். சூரிய சக்தி நீரிறைப்பொறி என்பது சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயாரித்து நீரிறைப் பொறியை இயக்கி தண்ணீரைப் பாய்ச்சக்கூடிய ஒரு சாதனம்.

900 மின் அலகு திறன் உள்ள ஒரு நீரிறைப்பொறி ஒரு நாளைக்கு 50 ஆயிரம் லீற்றர் தண்ணீரை முப்பது அடி ஆழத்திலிருந்து இறைக்க வல்லது. அது ஒன்றிலிருந்து இரண்டேக்கர் நிலங்களுக்கு நீர் பாய்ச்சும் சூரியசக்தியிலான வெப்ப சாதனங்கள் சுடுநீராக்கும் தொழில்நுட்பம் நன்கு வளர்ந்து வாணிபச் சந்தையில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளன. இவற்றை அமைப்பதற்கான மானியங்களை வழங்க தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது என்றார் மின் துறை அமைச்சர்.

# நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் பிறந்த இடம் இந்தியாவின் தேசிய நினைவுச்சின்னமாகின்றது!

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஆயுதம் ஏந்துவதன் அவசியத்தை வலியுறுத்தி செயல்பட்டவரான நேதாஜியின் பங்களிப்பு இந்திய ஆட்சியாளரால் மறைக்கப்பட்டே வந்தது. நேதாஜியின் இறுதிக்காலம் பற்றியும் பல்வேறு ஊகங்கள் வெளியிடப்பட்டு வந்தன. இந்நிலையில் நேதாஜீ பிறந்த இடமான ஒரிசா மாநிலம் கட்டாக்கில் ஒரியா பஜாரில் உள்ள ஜானகிநாத் பவன் இந்திய மத்திய அரசால் தேசிய நினைவுச்சின்னமாக விரைவில் அறிவிக்கப்பட உள்ளது. இதுபற்றி மத்திய அரசின் மனிதமேம்பாட்டுத் துறை அமைச்சர் முரளி மனோகர் னோஷி தம்மிடம் இதற்கான உறுதிமொழியை அளித்துள்ளார் என பாரதிய ஜனதாக் கட்சி உறுப்பினர் ஒருவர் பத்திரிகையாளரிடம் தெரிவித்தார். நேதாஜியின் நினைவுச் சின்னமான ஜானகிநாத் பவன் பொறிக்கப்பட்டதான தபால் முத்திரையும் விரைவில் வெளியிடப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

# ☺ வாய் மொழிகளும் கொசுறுச் செய்திகளும் ☹

☺ அடுத்த ஐம்பது ஆண்டில் 'இந்தியா' இருக்குமா? இதுபற்றி டெல்லி இளைஞர்களிடம் ஒரு கருத்துக்கணிப்பு எடுக்கப்பட்டது. 36 சதவீத இளைஞர்கள் 'இந்தியா பல சுதந்திர நாடுகளாக உடைந்து போகும்' என்று கூறினார்கள்.

*- ராணி வார இதழில்*

❀ ❀ ❀

☺ வாஜ்பாய் படுகிறபாட்டைப் பார்த்துவிட்டு டெல்லியின் பெரிய அரசியல் பிரமுகர் யாரோ உருவாக்கிவிட்ட ஜோக்தான் எங்கு பார்த்தாலும் பரவிக்கிடக்கின்றது. அந்த ஜோக் பிரதமரை வழக்கமான ஹெல்த் செக்-அப் செய்த டாக்டர் சொன்னாராம், 'இவர் கலந்து கொள்கிற விழாக்களின் முடிவில் தேசிய கீதம் இசைப்பதை மட்டும் தவிர்த்து விடுங்கள்! தேசியகீதம் கேட்டால் பிரதமருக்கு ரத்தக் கொதிப்பு அதிகமாகிவிடும்!' சுற்றியிருந்தவர்கள் புரியாமல் டாக்டரிடம் காரணம் கேட்க... டாக்டர் சொன்னாராம் 'தேசியகீதத்தின் முடிவில் ஒன்றுக்கு நான்கு தடவையாக 'ஜெய ஜெய ஜெய ஜெய ஹே' என்று ஜெயலலிதா பெயர் வருகின்றதே!'

*- ஜுனியர் விகடனில்*

❀ ❀ ❀

☺ பண்டைய காலங்களில் தமிழகச் சிற்பிகள் கோவில்களில் மிக அழகிய சிலைகளை வடித்து காலங்காலமாய் புகழ் பரப்பி நிற்கும்படி செய்திருக்கிறார்கள். கல்லில் சங்கிலி இசைத்தூண்கள் யாளி வாய்க் குண்டு போன்ற நுணுக்கமான வேலைகளையும் செய்து வியக்க வைத்திருக்கிறார்கள். நெல்லை மதுரை காரைக்குடி போன்ற ஊர்களில் அவைகளைக் காணலாம். ஆனால் இசைப் படிகள் என்பது கொஞ்சம் வித்தியாசமான வேலை.
கும்பகோணத்திற்கு அருகிலுள்ள அன்றைய இராசராசேச்சுவரமான தாராபுரம் ஐராவதேச்சுவரர் ஆலயத்திலுள்ள பலிபீடப் படிக்கற்கள் ஒவ்வொன்றும் தட்டினால் ஒவ்வொரு ஓசையை தருகின்றன.

*- தேவி சஞ்சிகையில்*

❀ ❀ ❀

☺ 'மக்கள் புத்திசாலிகள். நடிகர்களும் இயக்குநர்களும் புத்திசாலிகளாக இருந்தால் மட்டுமே ஜெயிக்கலாம்.'


*- நடிகராக இருந்து இயக்குநரான மோகன் கூறியதாக தமிழன் எக்ஸ்பிரஸ்.*

❀ ❀ ❀

☺ இலங்கை பகுத்தறிவாளர் கழகத் தலைவர் கோவூர். கேரளாவில் பிறந்து வளர்ந்தவர்... மந்திரவாதிகள், சாமியார்கள் ஞானிகள், ஞானதிருஷ்டி உள்ளவர்கள் என்பவர்களுக்கு கோவூர் ஒரு போட்டி வைத்தார். சில ரூபாய் நோட்டுகளை ஒரு உறைக்குள்போட்டு அரக்கு முத்திரை வைத்துள்ளார். அந்த நோட்டுக்களின் எண்களை சரியாக சொல்ல வேண்டும். சொன்னால் ரூ 1 இலட்சம் பரிசு கொடுக்கப்படும். கோவூர் பரிசுப்பணத்தை ஒரு வங்கியில் கட்டியுள்ளார். அந்த வங்கியிலேயே உறையும் இருக்கின்றது. சரியாகப் பதில் சொல்கிறவர் இன்றுகூட அந்தப் பரிசைப் பெற்றுக்கொள்ள முடியும். பரிசுத் தொகை இன்று ரூ 20 இலட்சமாக உயர்ந்துவிட்டது. கோவூர் 1978-ல் இறந்தார். 20 ஆண்டு ஆகிவிட்டது. இது அவரது நூற்றாண்டு அவரது அறைகூவலை இன்னும் எந்த மந்திரவாதியும் சாமியாரும் ஏற்கவில்லை.

*- ராணி வார இதழில்.*

❀ ❀ ❀




*நன்றி: நக்கீரன்*




# இளவரசி டயானா திட்டமிட்டுக் கொலை? சதி முயற்சியின் பின்னணியில் சி.ஐ.ஏ.?

(வியன்னா ஏப் 30)

வேல்ஸ் இளவரசி டயானா பிரான்சில் எதேர்ச்சையாக நடந்த கார் விபத்தில் கொல்லப்படவில்லை, அவரது மரணம் ஒருதிட்டமிட்ட கொலை, இந்தக் கொலைச் சதி முயற்சியில் அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏயின் பங்கு முக்கியமானது என்கின்ற புதிய தகவல்கள் இப்போது வெளியாகியுள்ளன.

இளவரசி டயானாவைக் கொல்வதற்கு சி.ஐ.ஏ. யின் உதவி கோரப்பட்டதை நிரூபிக்கும் ஆவணங்களை ஒரு கோடி 50 இலட்சம் டொலருக்கு விற்பனை செய்ய முயன்ற 67 வயது நபர் ஒருவர் ஒஸ்ரியத் தலைநகர் வியன்னாவில் கைது செய்யப்பட்டதை அடுத்து இந்தப் புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனை அடுத்து இளவரசி



டயானாவுடன் கொல்லப்பட்ட அவரது காதலர் டொடி பயட்டின் தந்தையும் பிரபல கோடீஸ்வரருமான முஹம்மது அல்பயட் தனது பிரத்தியேக பாதுகாப்பு அதிகாரி ஜோன் மக்ன்மாராவை இந்த விடயம் குறித்து விசாரணை நடத்துமாறு கோரியுள்ளார்.

கொலை முயற்சி சம்பந்தமான தகவல்களை விற்க முயன்று கைது செய்யப்பட்ட நபர், அல்பயட்டுடன் தொடர்புடையவர் என்று ஒஸ்ரிய பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க இளவரசி டயானாவை கொலை செய்ய நாம் உடந்தையாக இருந்தோம் என்பது, ஆதாரமற்ற கேலிக்கிடமான குற்றச்சாட்டு என்று சிஐஏ. நிறுவன அதிகாரிகள் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

# ஆயுதங்களை கைவிட ஐ.ஆர்.ஏ. மறுப்பு

(துப்ளின் மே-1)

அயர்லாந்து குடியரசு இராணுவம் (IRA) அண்மையில் கைச்சாத்திடப்பட்ட அமைதி உடன்படிக்கையின் அடிப்படையில் உடனடியாக ஆயுதங்களை கைவிட மறுப்புத் தெரிவித்துள்ளது.

நேற்று (வியாழன் - ஏப். 30) அயர்லாந்து தலைநகர் துப்ளினில் ஐ.ஆர்.ஏ. யின் அரசியல் பிரிவுான சின்பெயின் வெளியிட்ட அறிக்கையில் எந்தக் காரணத்தைக் கொண்டும் IRA ஆயுதங்களைக் கைவிடாது இது போன்ற சர்ச்சைக்குரிய விடயங்கள் குறித்து பிரச்சினை எழுப்புவது அரசியல் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் என்று கூறியுள்ளார்.

இந்த ஆயுத விவகாரங்களைப் போலவே IRA யைப் பாதிக்கக் கூடிய ஏனைய விடயங்கள், அதன் செயற்பாடுகள், நோக்கங்கள் ஆகியவை குறித்து தீர்மானிக்கும் கருத்து வெளியிடும் உரிமை IRA க்கே இருக்கும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

IRA இயக்கம் தடைசெய்யப்பட்டுள்ளதால் அதன் அரசியல் பிரிவான சின்பெயின் அமைப்பே இதுவரை IRA யின் சார்பான கருத்துக்களையும் முடிவுகளையும் தெரிவித்து வந்தது.

IRA-யின் தற்போதைய இந்த முடிவுபற்றி கருத்துத் தெரிவித்த பிரித்தானிய பிரதமரின் பேச்சாளர்கள் இந்த விடயம் பற்றி விரிவாக கவனிக்க வேண்டியுள்ளது என்று தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் அண்மையில் கைச்சாத்திடப்பட்ட அயர்லாந்து அமைதி உடன்படிக்கை ஒரு முன்னேற்றகரமான நடவடிக்கையேயன்றி நிலையான தீர்வுக்கு அடிப்படையாக இருக்கும் என்று தாம் கருதவில்லை என்று IRA தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

# இஸ்ரேலின் 50வது ஆண்டுக் கொண்டாட்டம் முரண்பாடுகளால் சோபையிழந்தது

(ஜெருசெலம் மே-2)

இஸ்ரேல் ஒரு நாடாக உருவாக்கப்பட்ட 50-வது ஆண்டு விழா பிரமாண்டமான அளவில் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும் இஸ்ரேலிய தலைவர்களிடையே ஏற்பட்டிருந்த கருத்து வேறுபாடுகள் மற்றும் பிளவுகளால் அது எதிர்பார்த்த அளவுக்கு சிறப்பாக அமையவில்லை.

இந்தவிழா நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக அமெரிக்கா உதவி, ஜனாதிபதி அல் கோர் வருகை தந்திருந்தபோதிலும், அவர் தனது உரைகளில் பாலஸ்தீனர்களுடன் செய்து கொண்ட சமாதான ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துமாறு இஸ்ரேலை வலியுறுத்தியது. யூதமத தீவிரவாதிகளுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது.

அதுபோல் ஐரோப்பிய பாணியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நாட்டிய நிகழ்ச்சி ஒன்றுக்கு யூத மதத்தீவிரவாதிகள் எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்து நிகழ்ச்சி ஆரம்பித்த ஒரு சில நிமிடங்களாலேயே அதில் கலந்து கொண்ட நடனக் குழுவினர் மண்டபத்தைவிட்டு வெளியேறினார்கள்.

மறுபுறத்தில் பாலஸ்தீனக் கெரில்லாக்களின் தாக்குதல்கள் இடம் பெறலாம் என்ற அச்சத்தின் காரணமாகவும் ஏராளமான இராணுவத்தினரும் பொலிசாரும் சகல இடங்களிலும் குவிக்கப்பட்டிருந்தனர். இதுவும் மக்களின் சுதந்திரமான ஆடல் பாடல்களுக்குத் தடையாக இருந்தது.

# டென்மார்க்: 15 இலட்சம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

## அரசுக்கு பாரிய நெருக்கடி

(ஹெப்பன்ஹேகன் மே-3)

1985-ம் ஆண்டுக்குப் பின்பு டென்மார்க் தற்போது மிகப் பெரிய சமூகப் பிரச்சினைக்கு முகங் கொடுக்க ஆரம்பித்திருக்கிறது. "கடந்த ஏப்பிரல் 27-ம் திகதியிலிருந்து போக்குவரத்து கட்டடத்துறை" சேவைகள் துறை, தொழிற்சாலைகள் உட்பட்ட அனைத்துத் துறைகளையும் சேர்ந்த 15 இலட்சத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் காலவரையறையற்ற வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

விமானப் போக்குவரத்து உட்பட பல்வேறு சேவைகள் இந்த காலவரையற்ற வேலை நிறுத்தத்தால் முற்றாக சீர் குலைந்துள்ளன.

கடந்த மார்ச் மாதம் முதலாளிகளுக்கும்- தொழிற்சங்கங்களுக்குமிடையில் சம்பள உயர்வு மற்றும் சம்பளத்துடன் கூடிய 6 நாள் விடுமுறை முதலான கோரிக்கைகள் தொடர்பாக செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் நிராகரிக்கப்பட்டதை அடுத்தே தொழிற் சங்கங்கள் இந்தக் கால வரையறையற்ற வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளன.

இந்த வேலை நிறுத்தப் போராட்டம் வாரக் கணக்கில் முடிவின்றி நீடிக்கலாம் என்ற அச்சத்தின் காரணமாக மக்கள் முன்கூட்டியே உணவுப் பொருட்களையும் எரிபொருட்களையும் வாங்கி சேமிக்க ஆரம்பித்துள்ளனர்.

# ஒரு மனிதனின் தற்கொலை நிகழ்வை நேரடி ஒளிபரப்புச் செய்த அமெரிக்க தொலைக்காட்சிகள்

(வாஷிங்டன் மே-1)

அமெரிக்காவில் 40 வயது மதிக்கத்தக்க மனிதன் ஒருவன் தன்னைத்தானே தலையில் துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்துகொண்ட நிகழ்வை பல தொலைக்காட்சி நிறுவனங்கள் நேரடி ஒலிபரப்புச் செய்தது பலத்த சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது.

கடந்த 30.04.98 வியாழக்கிழமை கலிபோர்னியா மாநிலத்தில் நிகழ்ந்த இந்தச் சம்பவத்தை அந்த மாநிலத்தின் 6 பிராந்திய தொலைக்காட்சி நிறுவனங்கள் நேரடி ஒளிபரப்புச் செய்தன.

எயிட்ஸ் நோய்க் கிருமிகளின் தாக்கத்துக்கு (Zéro Positif) உள்ளாகியிருந்த இந்த நபர், தன்னுடைய மருத்துவக் காப்புறுதி நிறுவனம் (Mutueil) தனது பிரச்சினை கவனத்தில் கொள்ளத் தவறியதை அம்பலப்படுத்துவதற்காக, பிரதான நெடுஞ்சாலை (Auto Route) ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் கமராக்களில் முன்னாள் போக்குவரத்தை இடைமறித்தவாறு நின்றுகொண்டு தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டார். குரூரமான இந்த நிகழ்ச்சியை தொலைக்காட்சியில் நேரடியாகப் பார்த்த ஏராளமான மக்கள் இப்படியானதொரு சம்பவத்தை, குரூரத்தனத்தை வெளிப்படுத்தும் விதத்தில் ஒளிபரப்புச் செய்ததற்காக தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு தமது கண்டனங்களைத் தெரிவித்துள்ளனர். இவர்களில் தற்கொலை செய்து கொண்டவரின் தாயும் அடக்கம்.

# 6 வயதுச் சிறுவன் தனது பிறந்தநாளன்று 4 வயது சிறுவனால் சுட்டுக்கொலை

(நியூயோர்க் ஏப்ரல் 29)

அமெரிக்காவின் வடக்கு கரோலின் மாவட்டத்தில் 6 வயதுச் சிறுவன் ஒருவன் தனது பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கான சந்தோசத்தில் மூழ்கியிருந்த வேளையில் 14 வயதுச் சிறுவனால் சுட்டுக்கொல்லப்பட்ட பரிதாபம் நிகழ்ந்தது.

தான் வைத்திருப்பது விளையாட்டுத் துப்பாக்கி என நினைத்த 4 வயதுச் சிறுவன்; பிறந்த நாள் கொண்டாட இருந்த சிறுவனை நோக்கி அதை நீட்டி விசையை இழுக்க, குண்டு பிடரியைத் துளைத்துச் சென்ற நிலையில் அந்த 6 வயதுச் சிறுவன் அந்த இடத்திலேயே வீழ்ந்து மடிந்தான்.

வீட்டின் கீழ் தளத்தில் இச் சம்பவம் நடைபெற்றபோது கொல்லப்பட்ட சிறுவனின் பெற்றோரும், கொலை செய்த சிறுவனின் பெற்றோரும் மாடியில் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தனர். இது தொடர்பாக செய்தியாளர்களிடம் தகவல் தெரிவித்த வடகரோலின் மாவட்ட பொலிஸ் அதிகாரி' துப்பாக்கி எவ்வாறு 4 வயதுச் சிறுவனின் கைக்கு கிடைத்தது என்று தெரியவில்லை. ஆனால் துப்பாக்கியை வைத்து விளையாடும் அளவுக்கு சிறுவனை அனுமதித்த பெற்றோர் மீது வழக்குத் தொடரப்பட இருப்பதாகக் கூறியுள்ளார்.

# கம்பூச்சியாவிலிருந்து கமர்ரூஷ் ஆதரவாளர்கள் பல்லாயிரக் கணக்கில் இடம் பெயர்வு

(பாங்கொக்- மே 3)

கம்பூச்சியாவின் கமர்ரூஷ் கெரில்லாக்களின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த Anlono Veno பிரதேசம் அரசாங்கப்படைகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்ததையடுத்து 30 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் தாய்லாந்தின் வடகிழக்கிலுள்ள அகதி முகாம்களுக்கு அடைக்கலம் தேடி இடம் பெயர்ந்துள்ளனர்.

கடந்த வெள்ளி காலையில் ஆரம்பித்த இந்த இடம் பெயர்வு இன்னும் தொடர்ந்து கொண்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இன்று (ஞாயிறு) பிற்பகல் வரை 30 ஆயிரம் மக்கள் கம்பூச்சிய எல்லையைத் தாண்டி தாய்லாந்துக்குள் வந்து தஞ்சமடைந்துள்ளதாக தாய்லாந்து அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் Huay Samran அகதி முகாம் வளாகத்தில் தங்க வைக்கப்படுவதாகவும், இவர்களது தேவைகளை உள்ளூர் செஞ்சிலுவைச் சங்கத்தினரும், தாய்லாந்து இராணுவத்தினரும் கவனித்துவருவதாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**வாணன் வாகன சேவை**

உங்கள் பொருட்கள், வீட்டுத் தளபாடங்கள் போன்றவற்றை ஏற்றி இறக்கவும் வெளியூர் பிரயாணம் போன்ற தேவைகளுக்கும்

Pub Tel: 01 42 52 06 80 / 01 48 05 21 63 / 06 09 26 88 35

# ஐயத்தில் ஐக்கியமாகும் ஐரோப்பிய 'ஈரோ' (Euro)

ஐரோப்பிய கூட்டுறவு (Union) நாடுகள் கடந்த காலங்களில் பொருளாதாரம், சமுதாயம், வர்த்தகம் போன்ற பலவற்றில் ஒன்றிணைந்து பொதுவான தீர்மானங்களை எடுத்து நடைமுறையில் தங்கள் பொருளாதாரத்தை காப்பாற்றி வருகின்றனர்.

ஒருவர் இவ் ஐரோப்பிய நாடொன்றில் இருந்து அடுத்த நாட்டிற்குச் செல்கையில் தனது நாட்டு பணத்தை மாற்றும் போது ஒரு குறிப்பிட்ட விகிதத்தை இழப்பதும் பின் திரும்பியபின் மிகுதிப் பணத்தை தனது நாட்டுப் பணத்தில் திரும்ப மாற்றும்போது மீண்டும் ஒரு விகிதத்தை இழப்பதும் தற்போது நடைமுறையில் உள்ளது.

இவ் ஐரோப்பிய நாடுகளில் பெரிய அளவில் பணவீக்கம் இல்லாததால் இந் நாடுகளுக்கிடையிலான வர்த்தகத்தில் இப் பணமாற்றத்தால் பெரிய அளவில் பாதிப்பு இல்லை.



ஒரு சமமான ஒழுங்கு நிலையும் நாணயத்தின் பலத்தை நிலைநிறுத்துவதும் 21-ம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளுக்கு மிகவும் அவசியமாகியது. வளர்ந்து வரும் ஆசிய நாடுகளின் வர்த்தகப் பொருளாதார வளர்ச்சியின் வேகமும் அமெரிக்கா, கனடா நாடுகளின் புதிய வர்த்தகமுறைத் திட்டங்களும் ஏற்கனவே இவ் வளர்ச்சியடைந்த ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரத்தை வீழ்ச்சியடையச் செய்யும் என்பது நிச்சயமாயிற்று. இதனால் 21-ம் நூற்றாண்டில் வர்த்தகத்தில் உலகச் சந்தையில் ஏற்படவிருக்கும் கடும் போட்டியில் கலந்துகொள்வதற்கான தகுதிகளைப் பெற்றுக்கொள்ள, இவ் ஐரோப்பிய நாடுகள் ஒன்றுகூடுகின்றன. இவ் வளர்ச்சியடைந்த ஐரோப்பிய நாடுகளில் அதிகரித்து வரும் வேலையில்லாத் திண்டாட்டம் அடுத்துவரும் ஆண்டுகளில் இன்னும் அதிகரிக்கலாம். இதனால் மேலும் பல பிரச்சினைகள் உருவாவதைத் தவிர்ப்பதே Euro வின் நோக்கமாகும்.

இந்த எல்லா ஐரோப்பிய நாடுகளின் நாணயங்களும் இணைந்து ஒரு புதிய நாணயமாக Euro எனப்படும் நாணயம் அறிமுகப்படுத்தப் படுகின்றது. ஒரு Euro நாணயம் 100 Cent ஆகும்.

*எப்போது?*

இது 1998 இல் எந்த நாடுகள் அங்கத்துவம் வகிக்க முடியும் என்பதை ஐரோப்பியக் கூட்டுறவு நாடுகளால் ஒன்றாக இணைந்து தீர்மானிக்கப்படும். இது 1997-இல் நிலையான பொருளாதாரம், உள்நாட்டு உற்பத்தி நிதி நிலைமைகள் போன்றவற்றின் தரவுகளை வைத்துத் தீர்மானிக்கப்படும். இவ் Euro 01.01.1999-ல் வெளியிடப்படும். பின்பு மாற்ற முடியாத ஒரு நாணயமாற்று (Exchange) விகிதம் அந்தந்த நாட்டு நாணயங்களுக்கேற்ப அமைக்கப்படும். ஆரம்பத்தில் மக்கள் Euro வும் மற்றும் நாணயங்களை விருப்பப்படி பயன்படுத்தலாம்.

01.01.2002-ல் இருந்து Euro நாணயம் மட்டுமே நடைமுறையில் இருக்கும். 2002-ன் நடுப்பகுதியில் எல்லாநாட்டுத் தேசிய நாணயங்களும் Euro வாக மாற்றம் அடையும். 01.07.2002 ல் இருந்து தனித்த ஐரோப்பிய நாடுகளின் தேசிய நாணயங்கள் பெறுமதி அற்றவையாகும். Euro மட்டும் நடைமுறையில் இருக்கும்.

*Euro அசையாத பெறுமதியில் இருக்குமா?*

ஆம் என்றுதான் பொருளாதார நிதி நிபுணர்கள் சொல்கிறார்கள். இருந்தும் பலருக்கு அடி மனதில் ஐயம்தான். Euro வின் பெறுமதி ஐரோப்பிய மத்திய வங்கியினால் அவதானிக்கப்படும்.

ஒரு குறிப்பிட்ட விகிதாசாரத்தில் தங்கள் நாட்டின் பொருளாதாரம் இருந்தால் மட்டுமே Euro நாணயத்தில் அங்கத்துவம் பெறுவதால் இவ் Euro நாணயம் தொடர்ந்தும் DM ஐப்போல ஒரு பலமான நாணயமாக இருக்கும் எனக் கூறப்படுகின்றது.

இது ஏற்கனவே 1996-ல் Dublin-ல் அங்கத்துவ நாடுகளினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இது ஐரோப்பியத் தேசிய நாணயங்களின் ஒரு திருத்தமல்ல. எல்லா நாணயங்களையும் ஒன்றிணைப்பதற்கான மாற்றமைப்பேயாகும். ஊதியம், ஓய்வூதியம், நோட்டுக்கள் கொடுக்க வேண்டிய கடன்கள், சேமிப்பு வைப்புக்கள், பொருட்களின் விலைகள், வாடகை, ஆயுட் காப்புறுதி, பணம் போன்றன புதிய Euro வில் மாற்றிக் கணக்கிடப்படுமேயன்றி அவற்றின் பெறுமதிகள் இழக்கப்படமாட்டாது.

2 DM 1 Euro ஆக மாற்றியமைக்கப்படும்போது ஏற்கனவே DM 2000 ஊதியம் பெற்றவர் 1000 Euro க்கள் மட்டுமே பெறுவார்.

எண் அலகுகள் குறைக்கப்படுமேயன்றி அதன் பெறுமதி குறைவதில்லை. ஏனெனில் Dm 1000 பெறுமதியாக இருந்தபொருள் 500 Euro விற்கு விற்கப்படும்.

அதேபோன்றே உலகச் சந்தையிலும் உதாரணமாக ஒரு DM இலங்கையில் Rs-35 பெறுமதியாக இருந்தால் 1 Euro Rs - 70 ஆக மாற்றமடையும்.

இவ்வாறு நிபுணர்கள் கூறிய போதும் பெரிய பிரித்தானியா தாங்கள் Euro நாணயத்தை முதலில் வெளியில் நின்று வேடிக்கை பார்த்துவிட்டு பின்பு அது ஒரு அசையா பெறுமதியாக இருக்குமேயானால் தாங்களும் சேர்ந்து கொள்வதாகக் கூறுகின்றது.

எது எப்படியானாலும் யார் தயங்கினாலும் தாங்கள் முன்வைத்த தீர்மானம் விரைவில் வெற்றியடையாவிடில் பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டிவரும் என மற்றைய நாடுகள் ஐயத்தோடு ஐக்கியமாகின்றன.

எதிர்வரும் காலத்தில் வரவிருக்கும் வர்த்தகச் சண்டைகள், பாதுகாப்பு, தேசியப் பொருளாதார அரசியல் பணவீக்கம் மற்றும் அமெரிக்கா, ஜப்பான் நாடுகளால் ஏற்படவிருக்கும் வேலையில்லாத் திண்டாட்டம் போன்றவற்றைச் சமாளிக்க Euro நாணயத்தை முன்வைத்து இந்நாடுகள் ஐரோப்பா என ஒரு பெரிய நாடாக உருவெடுத்து எல்லாப் போட்டிகளுக்கும் தயாராகின்றது.

அசையாத பெறுமதி Euro விற்கு தொடர்ந்து இருக்குமா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

*நன்றி: பூவரசு*


வெகுவிரைவில்...

பாரிஸ் திரையரங்குகளில்

தேசியத் தலைவர் விடை கொடுக்க
பகை முடித்த கரும்புலிகளின் கதை
தமிழீழ தளத்தில் உருவாக்கம் பெற்ற முழு நீளத்திரைப்படம்

பொ. தாசனின்

தேசத்தின் புயல்கள்

உண்மைச் சம்பவத்தைத் தழுவியது

பலாலி படைத்தளத்தினுள் இருளோடு இருளாக ஊடுருவி
கரும்புலிகள் நடாத்திய தாக்குதல்களை உயிர்ப்புடன்
வெளிப்படுத்தும் அதி உன்னத திரைக் காவியம்


## இஸ்ரேல் வரலாற்றில் 50 ஆண்டுகள்

**29 நவம்பர் 1947:** ஐ.நா சபை பாலஸ்தீனத்தை இரண்டு நாடுகளாக பிரிக்கத் திட்டம். ஒன்று யூதர்களுக்கு, பாலஸ்தீனியர்களுக்கு ஜெருசலேத்தைச் சுற்றி சர்வதேச பாதுகாப்பு வலயத்தை உருவாக்கவும் ஆலோசனை.

**14 மே 1948:** பாலஸ்தீனத்தின் மீது இருந்த பிரித்தானிய ஆதிக்கம் முடிவடைந்தவுடன் இஸ்ரேல் தனது சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்திக்கொள்ளல்.

**15 மே 1948:** இஸ்ரேலின் சுதந்திரப் பிரகடனத்தை எதிர்த்து அரேபியர்கள் இஸ்ரேலியர்களுடனான முதலாவது யுத்தத்தை தொடுத்தல் இந்த யுத்தம் 1949 ல் 'Rhodes' என்ற சமாதான ஒப்பந்தத்தின் மூலம் முடிவுக்குக் கொண்டு வரப்படல்.

**ஒக்–நவ. 1956:** எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத் சுவேஸ் கால்வாயை தேசியமயமாக்கல் பாலஸ்தீனிய போராளிகள் இஸ்ரேல் மீது தாக்குதல். பிரான்சினதும் பிரித்தானியாவினதும் உதவியோடு இஸ்ரேல் எகிப்தின் 'சினாய்' பகுதியை ஆக்கிரமித்தது. ஆனால் சர்வதேச அழுத்தம் காரணமாக ஐ.நா சபை இஸ்ரேலை சீனாவைவிட்டு வெளியேறும்படி நிர்ப்பந்தித்தது.

**23 மே 1960:** 'அடல்ப் ஐஸ்மான்' என்ற நாசி குற்றவாளியை ஆர்ஜன்டீனாவில் வைத்து இஸ்ரேலிய உளவுப் படை கடத்திவந்து இஸ்ரேலில் வைத்து விசாரணை செய்து அவருக்கு மரண தண்டனை விதித்தது. இத் தண்டனை 1962 ல் நிறைவேற்றப்பட்டது.

**5–10 ஜூன் 1967:** அரேபியர்களுக்கும் இஸ்ரேலியர்களுக்கும் இடையில் '6 நாள் யுத்தம்' என்று குறிப்பிடப்பட்ட மூன்றாவது யுத்தம் நடைபெற்றது. இஸ்ரேல் இந்த யுத்தத்தின்போது சினால் மற்றும் சிறிய மலைக் குன்றுகள், காசா, சிஸ்ஜோர்டான், ஜெருசலத்தின் கிழக்குப் பகுதி என்பவற்றைக் கைப்பற்றியது.

**செப் 1967:** சிஸ்ஜோர்டானில் யூதக் குடியேற்றம் ஆரம்பம்

**6–25 அக் 1973:** Kippoun அல்லது Ramadan என அழைக்கப்படும் 4-வது அரபு- இஸ்ரேல் யுத்தம் நடைபெற்றது. சிரியாவும் எகிப்தும் கூட்டுச் சேர்ந்து இஸ்ரேல் மீது தாக்குதல். முதலில் இஸ்ரேல் மீது தாக்குதல். முதலில் இஸ்ரேல் தோல்வியடைந்தாலும் பின்னர் இரட்டிப்பு வெற்றியை அடைந்தது.

**மே 1997: 27** வருடங்களாக ஆட்சி செய்த தொழிலாளர் கட்சி தேர்தலில் படுதோல்வி. வலதுசாரிகள் ஆட்சியைக் கைப்பற்றல்.

**19–21 நவம்பர் 1977:** எகிப்திய ஜனாதிபதி அன்பர் சதாத் ஜெருசலத்திற்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விஜயம் பாராளுமன்றத்திற்கு முன்பாக உண்மையான சமாதானத்திற்கான தீர்மானத்தை முன்வைத்தல்.

**14–மார்ச் 1978:** தென் லெபனானை இஸ்ரேல் ஆக்கிரமித்து அங்கிருந்து பாலஸ்தீனியர் கனா Litani என்ற நதிக்கு அப்பால் விரட்டிவிடல். ஐக்கியநாடு சபை இஸ்ரேலுக்கு கண்டிக்கும் 425 -வது தீர்மானத்தை நிறைவேற்றல். அதன்படி இஸ்ரேல் தனது படைகளை லெபனானில் இருந்து திருப்பி அழைக்கவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது. ஐக்கியநாடு அமைதிப்படையை லெபனானக்கு அனுப்ப முடிவு.

**செப்டெம்பர் 1978:** இஸ்ரேல் பிரதமர் Menahem Begim மும் எகிப்திய அதிபர் அன்பர் சதாத்தும் வாசிங்டனில் சந்தித்துப் பேச்சுவார்த்தை.

**26 மார்ச் 79:** இஸ்ரேலும் எகிப்தும் புகழ்பெற்ற காம்ப்டேலிட் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல்.

**30 ஜூலை 80:** கிழக்கு ஜெருசெலம் இஸ்ரேல் நிர்வாகத்தின் கீழ் இணைக்கப்படல்.

**14 டிசெம்பர் 81:** கோலான் குன்றுகளை இஸ்ரேல் தனது நிர்வாகத்தின்கீழ் எடுத்துக்கொள்ளல்.

**25 ஏப்ரல் 82:** எகிப்திடம் சினாய் கையளிக்கப்பட்டது.

**06 ஜூன் 82:** இஸ்ரேல் லெபனான் மீது மீண்டும் படையெடுப்பு. லெபனான் தலைநகர் பெய்ருத் வரை சென்ற இஸ்ரேலியப் படைகள் அங்கு தளம்கொண்டிருந்த PLO வை தெற்கு லெபனானுக்கு விரட்டிவிடல்.

**09 டிசெம்பர் 87:** Intifida என்று அழைக்கப்படும் இஸ்ரேலியப் படைகளை கல்லெறிந்து தாக்கும் யுத்த முறையை அராபியர்கள் தொடங்குதல்.

**15 நவம்பர்:** (CNP) பாலஸ்தீன தேசிய சபை ஐக்கியநாடுகளின் 242 தீர்மானத்தை ஏற்றுக்கொண்டதன் மூலம் இஸ்ரேலை ஒரு நாடாக ஏற்றுக்கொண்டனர். இத் தீர்மானம் பாலஸ்தீன மண்ணில் இஸ்ரேல் பாலஸ்தீனம் என்ற இரண்டு நாடுகள் இருப்பதை வலியுறுத்தியது.

**ஜூன் 19 1991** வளைகுடா யுத்தம். ஈராக் இஸ்ரேல் மீது ஸ்காட் ஏவுகணைகளை ஏவியது.

**ஒக்டோபர் 19 1991** - ஸ்பெயின் தலைநகர் மட்றிட்டில் இஸ்ரேலியப் பாலஸ்தீனர் சமாதான முயற்சிக்கான கூட்டம் கூட்டப்படல்.

**13 செப்டெம்பர் 1993** - வாசிங்டனில் ஒஸ்லோ ஒப்பந்தம் என்று அழைக்கப்படும் புகழ்பெற்ற இஸ்ரேலிய பாலஸ்தீனர் சமாதான ஒப்பந்தத்தில் இஸ்ரேலியப் பிரதமர் இசக் ராபினுன், பாலஸ்தீனத் தலைவர் ஜாசீர் அரபாத்தும் கைச்சாத்திடல்.

**மே– 1994** காசாவிலிருந்தும் ஜெரிக்கோவிலிருந்தும் இஸ்ரேலியப் படை திருப்பி அழைக்கப்படல். பாலஸ்தீனியர்கள் சுதந்திரமாகக் குடியேற அனுமதி.

**ஜூலை 1994** 27 வருட இடப் பெயர்வுக்குப் பின்பு பாலஸ்தீனத் தலைவர் யாசீர் அரபாத் காசாவுக்கு மீள் வருகை.

**26 ஒக்டோபர் 1994–** இஸ்ரேலும், ஜோர்டானும் சமாதான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல்.

**04 நவம்பர் 1995** - இஸ்ரேல் பிரதமர் இசக்ராவின் யூதமத தீவிரவாதியால் டெல் அவிலில் வைத்துச் சுட்டுக்கொலை.

**11–27 ஏப்ரல் 1996** - இஸ்ரேல் லெபனான் மேல் மீண்டும் படையெடுப்பு. ஈரான் ஆதரவு ஹிஸ்புல்லாஷ் கெரில்லாக்களை கட்டுப்படுத்த இந்த நடவடிக்கை எனத் தெரிவிப்பு.

**29 மே 1996** இஸ்லாமியப் போராட்டக் குழுக்களில் தாக்குதல்களைத் தொடர்ந்து 'ஒஸ்லோ' சமாதான ஒப்பந்தத்தை எதிர்த்து வலதுசாரி யுத்தத் தேசிய தலைவரான பெஞ்சமின் நிட்டன்யாகு தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியமைத்தார்.

**18 மே 1997** - கிழக்கு ஜெருசலம் பகுதியில் யூதக் குடியேற்றத்தை மேற்கொள்வதற்கு அனுமதியளித்ததன் மூலம் சமாதான ஒப்பந்தம் பின் தள்ளப்படல்.


'சோதனையானதொரு காலகட்டத்தில் எமது தேசத்தின் விடுதலைச் சுடர் அணைந்து போகாது பாதுகாப்பது உங்களின் கைகளில்தான தங்கியிருக்கிறது'
தேசியத் தலைவரின் வேண்டுதலுக்கிணங்க
சுவிஸ்வாழ் தமிழீழ மக்களின்
போராட்டப் பெருநிதி
'மேலதிகமான பங்களிப்பை கூடுதலான
நிதி உதவியினை வேண்டி நிற்கிறோம்'
வருடா வருடம் நிதி வழங்கினோம்
இவ் வருடம் தலைவரின்
வேண்டுதலுக்கிணங்க
பெருநிதி
கொடுப்போம்
நாள் ஒன்றுக்கு 10
பிராங்குக்குக் குறையாத
தொகையாக இவ் வருடம்
பெருநிதிக்குக் கொடுப்போம்
'எமது வேருக்கு நீர் பாய்ச்சுவோம்
விடுதலையை விரைவாக்குவோம்'
புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்
தமிழீழ விடுதலைப் புலிகள்
சுவிஸ் பணியகம்
TAMIL EELAM


ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# ஆத்ம பலம்

எதிர்வரும் மே 13-ம் திகதியுடன் ஜெய்சிக்குறுய் இராணுவ நடவடிக்கையை சிறீலங்கா அரசாங்கம் ஆரம்பித்து ஒரு வருடம் பூர்த்தியாகின்றது. வவுனியாவிலிருந்து கிளிநொச்சிவரையுள்ள ஏறக்குறைய 64 கிலோமீற்றர் நீளமுள்ள பாதையைக் கைப்பற்றுவதற்காக 40 ஆயிரம் இராணுவத்தினரையும் 10 ஆயிரம் துணைப் படையணியையும் பயன்படுத்தி '2 வாரம் முதல் 1 மாதத்திற்குள் முடிக்கப்படும்' என்ற காலக்கெடுவுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கை ஓராண்டு பூர்த்தியாகும் இன்றைய நிலையில் - அதனுடைய இலக்கில் மூன்றில் ஒரு பகுதியை மட்டுமே அதுவும் மிகப் பெரிய ஆள்-ஆயுத தளவாட இழப்புகளுடனும் அடைந்திருக்கிறது.

நவீன இராணுவ வரலாற்றில் இல்லாத அளவுக்கு ஒரு உள்நாட்டு யுத்தத்தில் ஒரு குறித்த இலக்கை ஒரு அரசாங்கத்தின் படைகளால் அதுவும் பெரும் எண்ணிக்கையிலான நன்கு பயிற்சி பெற்ற படைகளால் அடைய முடியாமல் போனது ஏன்? என்பது ஒரு அதிமுக்கியமான கேள்வியாக இங்கே எழுகின்றது.

இந்தக் கேள்விக்குரிய விடை ஒன்றும் சிக்கலானதோ அர்த்தங்கண்டுகொள்ள முடியாததோ அல்ல அது மிகவும் வெளிப்படையானது.

உலக வரலாற்றில் ஒரு அரசு இன்னொரு அரசை ஆக்கிரமிக்கப் படை எடுக்கும்போது மட்டுமே இவ்வாறான நிகழ்வுகள் நடைபெறுவது வழக்கம். அதாவது ஆக்கிரமிப்பாளர்களால் மட்டுமே அவர்களது இலக்கை சுலபமாக அடைந்து விடமுடியாது. அவ்வாறு அடைந்தாலும் கூட அதற்காக அவர்கள் சந்தித்திருந்த இழப்புகளும் மிக அதிகமாகவே இருக்கும்.

தமிழீழ தேசத்தினை ஆக்கிரமிக்க சிறீலங்கா அரசால் மேற்கொள்ளப்பட்ட ஜெய்சிக்குறுய் படை நகர்வுக்கு இந்த நிலை ஏற்பட்டது ஒன்றும் வியப்பான விடயமோ ஆய்வுக்குரிய விடயமோ அல்ல.

ஆனால் இந்தச் சமரிலே புலிகளுடைய பங்கையும் அவர்கள் யார் என்பதையும் தீர்மானிப்பது மிக முக்கியமானதொரு விடயமாகும்.

சிறீலங்கா அரசு அவர்களை தடை செய்திருக்கிறது.

பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தியிருக்கிறது. தோற்கடிக்கப்பட்ட சிறு இராணுவக் குழுவினர் என்றும் தமிழ் மக்களின் ஆதரவை இழந்தவர்கள் என்றும் சர்வதேச அளவில் பிரச்சாரப்படுத்தியிருக்கிறது.

ஆனால் அவர்கள் சாதித்துக் காட்டியிருக்கின்றார்கள். சகலவளங்களுடனும் சர்வதேச ஆசியுடனும் அலை கடல் போல் ஆர்ப்பரித்து வந்த பெரும் படையை தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். அதிரடி கொடுத்து சிதறடித்துக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு அவர்களால் எப்படி முடிந்தது? எங்கிருந்து வந்தது அவர்களுக்கு இந்தப் பலம்? இந்தக் கேள்விகளுக்குரிய விடையும் மிகச் சுலபமானதே.

தன்னுடைய உடமை பறிக்கப்படும்போது ஒரு குழந்தைக்கு சீற்றம் ஏற்படுவது எவ்வாறு இயல்போ, தன்னுடைய சொந்த நிலம் பறிபோகும்போது ஒரு மனிதனுக்கு கோபம் ஏற்படுவது எவ்வாறு இயல்போ அவ்வாறே தன்னுடைய நாடு ஆக்கிரமிக்கப்படும் - தன்னுடைய நாட்டை ஆக்கிரமிக்க எதிரிப்படைகள் வரும்போது, தன்னுடைய தாயகத்தை நேசிக்கின்ற தேசத்தின் புதல்வர்களும், புதல்விகளும் - கிளர்ந்தெழுவது இயல்பு. அந்தக் கிளர்ச்சியில், எங்களது தேசம் காப்பாற்றப்படவேண்டும் என்ற உணர்வு அவர்களுக்கு ஒரு ஆத்ம பலத்தைக் கொடுக்கிறது. அந்த ஆத்ம பலத்தை வெல்லும் வல்லமை ஆக்கிரமிப்பாளரின் படைகளுக்கோ அவை வைத்திருக்கும் படைக் கலன்களுக்கோ கிடையாது.

விடுதலைப் புலிகள் தமிழீழ தேசத்தின் ஆத்ம பலத்தைப் பெற்றவர்கள். அவர்கள் தோற்கடிக்கப்பட்ட ஒரு இராணுவக் குழு அல்ல. அவர்கள் தமிழீழ தேசத்தின் தேசிய இராணுவம்.

அமெரிக்க - சீனா - பாகிஸ்தான் அரசுகளின் ஆசிபெற்ற 50,000 படையினரைக் கொண்ட ஜெயசிக்குறுய் படை நகர்வை அதாவது மரபு ரீதியான இராணுவச் சமரை மரபு ரீதியிலும் எதிர்கொண்டு முறியடித்த அந்தத் தேசிய இராணுவத்தின் சாதனை நிச்சயம் உலக வரலாற்றில் இடம்பெறும்.

# ஜெயசிக்குறுய்:
# ஒரு அரசியல் கேள்விக்குறி

64 கிலோமீற்றர் வவுனியா - கிளிநொச்சி நெடுஞ்சாலையை கைப்பற்றுவதற்காக 4 பிரதான இராணுவப் பிரிவுகளையும் பிற துணைப் படைகளையும் ஈடுபடுத்தி வெற்றி பெறத் துடிக்கும் - சந்திரிகா ரத்வத்தை அரசிற்கு, ஜெயசிக்குறுய் ஒரு வருடப் பூர்த்தி இராணுவ ரீதியாக மட்டுமல்ல அரசியல் ரீதியாகவும் கிடைத்துவரும் தோல்வியாகும்.



ஜெயசிக்குறுய் ஒரு தனித்த இராணுவ நடவடிக்கையல்ல. இது ஒரு அரசியல் போக்கையும்-பின்னணியையும் கொண்ட போர் நடவடிக்கை. 'யாப்பட்டுணாவ' வெற்றி விழா தந்த மமதையில் தமிழர்களின் மற்றுமொரு கோட்டையான வன்னியை 'கைப்பற்றி அழிக்கும்' அரசியல் நோக்கைக்கொண்ட போர் முயற்சி. இங்கே கைப்பற்றி அழிக்கும் நடவடிக்கை என்பது குடிமனைகளை தரைமட்டமாக்கி, இனப் படுகொலைகளை நடாத்தி சிறீலங்கா கொடியை நாட்டுதல் என்று மட்டும் அர்த்தமல்ல. மாறாக 'தமிழீழம்' என்ற தமிழர்களின் அரசியல் இலட்சியத்திற்கான உட்கட்டுமானம் உருவாகிவரும் பிரதேசங்களைக் கைப்பற்றி, அந்த எத்தனத்தை இல்லாதொழிக்கும் அரசியல் நோக்கமே பிரதானமாகும். சர்வதேச சட்ட வரைவுகள் - நாகரிக சமூகம் என்பன ஒரு மனித இனம் தமது சொந்த அரசை விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் நிறுவ முயலும்போது அதனை அங்கீகரிக்க தலைப்படுகின்றன. அவ் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களின் தலைமைகளுடன் சர்வதேச அமைப்புக்கள், அரசுகள் பரிமாற்றங்களைப் புரிகின்றன. இவ் 'Defacto' நிலைப்பாட்டை நோக்கி சந்திரிக்கா அரசு வைத்த இரண்டாவது குறிதான் வன்னிப்போர் நடவடிக்கை.

யாழ். குடாநாட்டைக் கைப்பற்றியபோது தமிழர்கள் தமது அரசுக்கான கட்டமைப்பைச் சாதுரியமாக வன்னிக்கு நகர்த்தினர். சகல உட்கட்டுமான பணிகளும் வன்னியில் தலைமை கொண்டு இயங்கத் தொடங்கின. 'சூரியக்கதிர்' மூலம் சாதிக்க முற்பட்ட அரசியல் நோக்கம் 'ஜெயசிக்குறுய்'க்கு இடம் மாற்றப்பட்டது. இப் போருக்காக தென் தமிழீழத்திலிருந்து துருப்புக்கள் வன்னிக்கு நகர்த்தப்பட்டன. முழு அரசியல் - இராணுவ - பொருளாதார வழிகளும் பாவிக்கப்பட்டன; பாவிக்கப்பட்டு வருகின்றன. சர்வதேச சமூகத்தின் ஆதரவு 'சமாதானத்திற்கான யுத்தம்' என்ற 'விளம்பரத்துடன்' திரட்டப்பட்டது. பாதை பிடிப்பு போர் முயற்சியானது மக்களுக்கு உணவு வழங்கல்களை மேற்கொள்ள எடுக்கப்பட்ட நடவடிக்கை என பிரித்தானிய அரசு சான்றிதழ் கொடுக்கும் அளவுக்கு அரசியல் இராஜதந்திர வலு இதற்கு இருந்தது.

இப் பக்க பலத்துடன் ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கையின் கோரத்தை உலகின் கண்களில் இருந்து மறைக்க 'தீர்வுப்பொதி' என்ற அரசியல் - இராணுவ ஆயுதம் புத்திசாதுரியமாக பாவிக்கப்பட்டது. இவை அனைத்தையும் திட்டமிட்டது சந்திரிகா தலைமையிலான அரசியல் சக்திகளே! இராணுவ காலக்கெடுக்களைக் கூட இவ் அரசியல் தலைமை தீர்மானித்திருந்தமை ஜெயசிக்குறுயில் அரசியல் நோக்கை வெளிப்படுத்தும் அம்சமாக இருந்தது.

இவ் அரசியல் பரிமாற்றத்தை புலிகள் கூர்மையாக அவதானித்திருந்தனர். புலிகளின் கடந்த ஒருவருட கால அரசியல் - இராஜதந்திர - இராணுவ நகர்வுகள் இதனைப் புலப்படுத்துகின்றன.

**சர்வதேச சட்ட வரைவுகள் - நாகரிக சமூகம் என்பன ஒரு மனித இனம் தமது சொந்த அரசை விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் நிறுவ முயலும்போது அதனை அங்கீகரிக்க தலைப்படுகின்றன. அவ் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களின் தலைமைகளுடன் சர்வதேச அமைப்புக்கள், அரசுகள் பரிமாற்றங்களைப் புரிகின்றன. இவ் 'Defacto' நிலைப்பாட்டை நோக்கி சந்திரிக்கா அரசு வைத்த இரண்டாவது குறிதான் வன்னிப்போர் நடவடிக்கை.**

ஜெயசிக்குறுவை இராணுவ ரீதியில் எதிர்கொண்டு மோத ஒரு தீர்க்கமான மரபுவழிச் சமருக்கு ஏற்புடைய கட்டமைப்பு புலிகளால் மேற்கொள்ளப்படும் அதேவேளை, தமிழர் சுயாட்சிக்கான கட்டமைப்பை வன்னியில் இருந்து தென் தமிழீழம் வரை புலிகள் விரிவு படுத்தினர். நீதிபரிபாலனம் முதல் அனைத்து தமிழீழத்திற்கான கட்டமைப்புகளும் சூரியக்கதிருக்கு முன்பிருந்த பரப்பளவிலும் அதிகமான பரப்பளவு பிரதேசங்களுக்கு விரிவு படுத்தப்பட்டன.

புலிகளின் தீர்க்கமான இராணுவ நடவடிக்கைகள் சந்திரிகா அரசினால் குறுங்கால அரசியல் நோக்குகளை சீர்குலைத்தன. பாதை திறப்பு வெற்றி விழாவை கொண்டாடிய பின்னர் 'தீர்வுப்பொதியினை' மேலும் பலவீனப்படுத்தி அரைகுறையாக அமுல்படுத்தும் இரகசிய அரசியல் முயற்சியினை அரசு கொண்டிருந்தது. ஓமதமாகிச் செல்லும் மாகாண சபைத் தேர்தலை நடாத்தி இராணுவ வெற்றிகளைக் காட்டி வெற்றிபெற சந்திரிகா அரசு தயாராக இருந்தது. சர்வதேச சமூகத்திடம் புலிகளின் கோட்டை உடைக்கப்பட்டாயிற்று; இனி இச் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளை



நாம் ஒருதலைப் பட்சமாக தீர்த்துக்கொள்ளலாம். 'உங்கள் உதவிக்கு நன்றி' எனக்கூறும் சதித்திட்டம் பிரித்தானியாவில் இருந்தது.

ஆனால் புலிகளின் இராணுவ நடவடிக்கை தமிழர்களின் சுதந்திரத்திற்கான போராட்டத்தினை வெறும் சிறுபான்மை மக்களின் பிரச்சினையாக சந்திரிகா குறுக்கிவிட தடை போட்டுவிட்டது. இன்று புலிகளுடன் பேசவேண்டும் என்ற அரசியல் - இராஜதந்திர நிர்ப்பந்தத்தை சிறீலங்கா அரசு பல தரப்புகளிலும் இருந்து பெற்று வருகின்றது.

மறுபுறம் சிறீலங்கா தேசம் சந்திரிகா - ரத்வத்தை கூட்டணி மீது வைத்திருந்த 'நம்பிக்கையை' கைவிடத் தொடங்கியது. கடந்த ஒரு வருட காலத்து போர் முனைவளர்ச்சி சிங்கள தேசியம் மீது நிர்ப்பந்தத்தை உருவாக்கிவிட்டது. பொருளாதார சுமையும் அழுத்தமும் சிங்கள தேசத்தை நெருக்குகின்றபோது 'யாப்பட்டுணாவ' வெற்றிவிழா தந்த பெருமிதம் தோற்கடிக்கப்பட்டு சந்திரிகாவின் நவீன மயப்படுத்தப்பட்ட அரசியல் - இராணுவ தந்திரோபாயம் தோல்வியடையத் தொடங்கிவிட்டது.

இவ் அரசியல் தோல்விக்கு சிறந்த எடுத்துக்காட்டு புலிகள் மேல் சந்திரிகா விடுத்த சட்ட ரீதியான தடை. பௌத்த பிக்குகளின் வேண்டுகோளுக்குத் தலைசாய்த்து தன்னை யார் என்பதை அவர் தெளிவாக இனம்காட்டிவிட்டார். இது சந்திரிகாவின் மேல் நம்பிக்கை வைத்திருந்த 'சமாதானப் புறா'வுக்கு ஏற்பட்ட அரசியல் தோல்வியாகும்.

- ராஜா

## உங்கள் கைவண்ணம்



செல்வன் எஸ்.சசிதர்

வயது: 6

இடம்:
Hildesheim, Germany.

### சிங்கமும் பசுக்களும்

முன் ஒருகாலத்திலே ஒரு காட்டிலே நான்கு பசுக்கள் மிகவும் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தன.

அந்தக் காட்டிலே வாழ்ந்து வந்த சிங்கம் இரை தேடிச் சென்ற பொழுது இப்பசுக்களைக் கண்டு அவைகளுக்குச் சமீபமாகச் சென்றது, அப்பொழுது பசுக்கள் ஒன்றாகச் சேர்ந்து சிங்கத்துடன் சண்டை பிடித்துக் கலைத்தன.

சில நாட்கள் சென்றபின் பசுக்கள் தம்முடன் சண்டை பிடித்து எதிரிகளாகி ஒவ்வொன்றும் பிரிந்து சென்று தனித் தனியாக மேய்ந்தன.

சிங்கம் திரும்பவும் அங்கு வந்த பொழுது பசுக்கள் ஒவ்வொன்றும் தனித்தனியாக மேய்வதைக் கண்டவுடன் அவைகள் ஒவ்வொன்றையும் மிக இலகுவாகக் கொன்று தின்றது.

"ஒற்றுமையே பலம்"

சசிதர்
6 வயது

## கவிதை முற்றம்

### காற்றே வா...


காற்றே காற்றே
இங்கே வா
கண்ணின் முன்னே
நடந்து வா.

எங்கே ஒளிந்து
செல்கின்றாய்?
எதற்கு மறைந்து
திரிகின்றாய்?

காற்றே காற்றே
இங்கே வா
கதைகள் சொல்வேன்.

செ.யோ






## குட்டிக்கதை படிப்போம்

### நெப்போலியனும் கிராமியப் பெண்ணும்

பிரெஞ்சு சர்வாதிகாரி நெப்போலியன் அப்போது சாதாரணப் படை வீரனாக இருந்தான். அவ்வாறிருந்த காலத்தில் அவனும் வேறு சிலரும் ஓர் இடத்தில் கூடாரம் போட்டுத் தங்கியிருந்தார்கள். நெப்போலியன் அங்கு சும்மா இருக்கவில்லை; தன்னுடைய ஓய்வு நேரத்தை வீணாக்காமல், நல்ல நூல்களைப் படித்துக் கொண்டிருந்தான். இது நெப்போலியனுடைய இயல்பான பழக்கமாக இருந்தது.



அப்போது ஒரு நாள் அந்தப் பக்கமாக வந்த கிராமப் பெண் ஒருத்தி, 'எல்லோரும் விளையாடிக் கொண்டு மகிழ்ச்சியாகப் பொழுதைப் போக்கும்போது, நீ மட்டும் இங்கே சோம்பேறி போல உட்கார்ந்திருக்கின்றாயே!' என்று சொல்லி, நெப்போலியனைக் கேலி செய்தாள்.

அதைக் கேட்ட நெப்போலியன், அதற்குப் பதில் எதுவும் சொல்லவில்லை.

அப் பெண்ணும் சென்றுவிட்டாள்.

பன்னிரெண்டு ஆண்டுகள் கழிந்தன.

நெப்போலியன் பிரெஞ்சுச் சக்கரவர்த்தியானான்.

அதன் பின்பு அவன் அந்த ஊருக்கு ஒருமுறை சென்றிருந்தான்; அந்த ஊரை அடைந்தவுடன் அப்பெண்ணை விசாரித்துத் தெரிந்துகொண்டு, அவளது வீட்டிற்குச் சென்றான். அப் பெண்ணைப் பார்த்து, 'என்னை நினைவு இருக்கின்றதா?' என்று கேட்டான்.


அப் பெண் அவனைப் பார்த்தபடியே சிறிது நேரம் யோசித்தாள்; எதையோ நினைத்தவளாக சிறிது தயங்கினாள்; 'சக்கரவர்த்தியா... ...ஆம் இதற்கு முன் உங்களை எங்கோ பார்த்திருக்கின்றேனே... உங்களைப் பார்த்த நினைவு இருக்கின்றது' என்று கூறினாள்.

சக்கரவர்த்தி நெப்போலியன் உடனே, 'ஆம்! ஒரு காலத்தில் இதே ஊரில் நான் சாதாரணப் போர் வீரனாக இருந்தேன். அப்போது நீ என்னை சோம்பேறி என்று சொல்லி கேலி செய்தாயே! மற்ற போர் வீரர்களைப் போல நானும் விளையாடிக் கொண்டிருந்திருந்தால், இப்போதும் அவர்களைப் போலத்தான் இருந்திருப்பேன்' என்று கூறினான்.

அதைக் கேட்ட அப் பெண், வாயடைத்து மௌனமாகப் புன்னகையுடன் நின்றாள்.

## அறிந்து கொள்ளுங்கள்

### உயரமான மலை



உலகிலேயே உயரமான மலை எது என்று உங்களைக் கேட்டால் உடனே எவரெஸ்ட் என்று பதில் சொல்லி விடுவீர்கள். நிலப்பரப்பில் உள்ள மலைகளில்தான் எவரெஸ்ட் உயரமானது.

ஆனால் நீர்ப்பகுதிகளில் பெருங்கடல்களிலும் மலைகள் உண்டு. பசுபிக் பெருங்கடலின் அடியில் இருந்து கடல் மட்டத்திற்கு மேலாக எழுந்து நிற்கும் மலைதான் உலகத்திலேயே உயரமானது.

ஆழக்கடலின் நடுவிலே ஒரு சிறு தீவு போல எழுந்து நிற்கும் இந்த மலையின் பெயர் 'மவுனா கீ' என்பதாகும். இந்தக் கடல் மலையின் உயரம் 10,203 மீற்றர். எவரெஸ்ட் மலையின் உயரம் 8,848 மீற்றர்கள் ஆகும்.

## தகவல் முற்றம்

★ பாம்பிற்கும் மீனிற்கும் தூங்குபோதும் கண்கள் திறந்தே இருக்கும். காரணம் இவற்றிற்கு கண்களை மூட இமைகள் கிடையாது.
★ பாம்பிற்கு காது இல்லை. பாம்புகள் ஓசை ஒலிகளை தம் வயிற்றடி வளையங்கள் மூலம் நில அதிர்வுகளைக் கொண்டு புரிந்துகொள்ளும்.
★ நத்தைக்கு எலும்புகள் கிடையாது.
★ நண்டுக்கு வாய் அடிவயிற்றில் இருக்கிறது.
★ தேளின் குட்டிகள் அதன் அம்மாத் தேளின் முதுகு வெடித்து வெளிவரும். சில நாட்களில் அம்மா தேளின் முதுகு வளர்ந்து மூடிக்கொள்ளும்.
★ வௌவால்கள் சாப்பிடுவதும், கழிவுகளை வெளியகற்றுவதும் வாயால்தான்.

– மு.ஜெயந்த், தமிழகம்

# ஜெயசிக்குறுய் ஓராண்டு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வன்னி ஜெய்சிக்குறூய் படை நகர்வுக்கு எதிரான தாக்குதல்களை புலிகள் மேற்கொள்ளாத அளவுக்கு அவர்களைப் பலவீனப்படுத்துகின்ற முயற்சியிலும் பல வெளிநாட்டு அரசுகள் என்றுமில்லாத அளவுக்கு சிறீலங்கா அரசாங்கத்திற்கு இந்த ஒரு வருட காலத்தில் ஒத்துழைப்பு வழங்கி உள்ளன. 2-வது, முதல் முறையாக ஜெய்சிக்கு

கொண்டால் குறைந்த பட்சம் 50 ஆயிரம் படைகளாவது இன்று இந்த நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றன என்பது தெரியும்.

இந்த வகையில் பார்க்கும் போது இது உள்நாட்டு யுத்தமாக இல்லாமல் முழுமையான 2 நாடுகளுக்கிடையிலான ஒரு யுத்தம் போன்ற தன்மையை எடுத்திருப்பதைக் காணலாம்.

இன்று உலகத்தில் நடந்து

ணுவமாக இருக்காது காலப் போக்கில் உடைந்து சிதறிப் போகக்கூடிய ஒரு நிலையும் ஏற்படலாம். தொடர்ந்து தோல்வியைச் சந்திக்கும் இந்த யுத்தத்தின் காரணமாக இந்த 4 படையணிகளுக்குள்ளும் ஏற்படக்கூடிய சலிப்புத் தன்மை இத்தகைய ஒரு நிலையை ஏற்படுத்தலாம்.

இப்படியான ஒரு சிக்கலை தவிர்ப்பதற்கு ஜெய்சிக்குறூய்

தற்கொலைக்கு ஒப்பான ஒரு நிலையாகவே அமையும்.

ஏனெனில் சிறீலங்கா அரசாங்கம் தன்னுடைய மாபெரும் வெற்றியாக காட்டுவதற்காக மேற்கொண்ட படை நகர்வு இந்த ஜெய்சிக்குறூய் படை நகர்வு. இதனாலேயே 'வெற்றி நிச்சயம்' என்ற பெயர் இதற்குச் சூட்டப்பட்டது. இது தோல்வி அடைந்தால், அல்லது இராணுவத் தேவையைக் கருதி இந்தப் படை நகர்வை உடனடியாக நிறுத்தி இராணுவ ரீதியாக பூநகரி பாதையில் செல்ல முயன்றால் உளவியல் ரீதியிலும் அரசியல் ரீதியிலும் தாக்கத்தை ஏற்படுத்திவிடும் என்ற பயம் அர

**வவுனியாவிலிருந்து பிரபல அரசியல் இராணுவ ஆய்வாளர் ஐ.எஸ்.வி.**


ஒருவருடம் இவ்வாறான மிகப் பெரிய படை நகர்வை எதிர்த்து நின்று முறியடித்தவர்கள் என்ற உளவியல் பலத்தை ஏற்படுத்தி அது அரசபடைகளை மேலும் தாக்கி அழித்து வெற்றியடையக் கூடிய ஒரு உளவியல் ரீதியான வெற்றியை அவர்களுக்கு கொடுத்துள்ளது.

உளவியல் ரீதியாக அரச படைகள் பலவீனப்பட்டால் எந்தவகையான ஆயுதங்கள் அவர்

# மீண்டும் ஒரு வன்னி மாரிகாலத்துக்கு தாக்குப் பிடிக்கும் நிலை அரச படைகளுக்கு இல்லை!

றூய் நடவடிக்கைக்குத் தான் அரசாங்கம் அனைத்து இராணுவ வழங்களையும் இன்னோரன்ன வழங்களையும் எந்தவிதமான கேள்வியுமற்ற நிலையில் வழங்கியிருக்கிறது.

அத்துடன் தனது மிக முக்கியமான 4 படைப் பிரிவுகளை சிறீலங்கா அரசு இந்தப் போரில் ஈடுபடுத்தியுள்ளது 53, 54, 55, 56



ஆகிய சிறீலங்கா இராணுவத்தின் முதுகெலும்பான 4 படைப் பிரிவுகளும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான வன்னிப் போரில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றன.

மொத்தமாக 4 படைப் பிரிவுகளிலும் அவற்றின் துணைப் படைகளையும் சேர்த்து 40 ஆயிரம் பேர் ஜெய்சிக்குறூய் வெற்றிக்காக போர்முனைக்கு அனுப்பப்பட்டிருகின்றனர். இந்தளவு பெரும் படைக்குவிப்பு ஒரு நடவடிக்கைக்காக மேற்கொள்ளப் பட்டது இதுவே முதல் தடவையாகும்.

யாழ்ப்பாண யுத்தத்தின்போது கூட இந்தளவு பெருவாரியான படைப்பிரிவுகள் யுத்தத்தில் ஈடுபடுத்தப்படவில்லை. அத்துடன் முதல் முறையாக அமெரிக்காவின் விசேட பயிற்சி முடித்த 53-வது படைப் பிரிவின் அணிகளும் இந்த யுத்தத்திற்கான விசேட பயிற்சிகளின் அடிப் படையில் கொமாண்டோ நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள்.

அத்துடன் முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு விமானப் படை, கடற்படை STF என்பனவும் .தரைப்படைகளாக மாற்றப் பட்டு மேலதிகமாக ஜெய்சிக்குறூய் நடவடிக்கைகளின் பின் பகுதிகளை காப்பாற்றுவதற்காக யுத்தத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இந்தப் படைகளின் எண்ணிக்கையையும் சேர்த்துக்

கொண்டிருக்கின்ற அல்லது நடந்த யுத்தங்கள்ள எடுத்துப் பார்த்தால் உள்நாட்டு போராளிகளுக்கு எதிரான யுத்தங்களில் இந்தளவு படை குவிப்பு. 2ம் உலக யுத்தத்திற்குப் பின்னர் இடம்பெற்றது இதுவே முதற் தடவையாக நடைபெற்றுள்ளது.

வியட்னாமில் அமெரிக்கர்கள் இவ்வாறான படை நகர்வுகளை மேற்கொண்ட போதும் அது வட வியட்னாமிய இராணுவத்துக்கு எதிரானதே ஒழிய வியட்கொங் துருப்புக்களுக்கு எதிராக இந்தளவு பெரிய படைக் குவிப்பை அமெரிக்கா கூட மேற்கொள்ளவில்லை. அல்லது

**எது எப்படியோ 13ம் திகதி வந்ததும் அது விடுதலைப் புலிகளுக்கு ஒரு மாபெரும் வெற்றி என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை.**

சுக்கு இருக்கிறது.

இன்னொரு புறம் சிலபடை அதிகாரிகள் சொல்கிறார்கள் இவ்வாறு பின்வாங்கினால் படையினர் தோல்வி மனோநிலையை தழுவி விடுவார்கள் என்று. இவ்வாறு படையினர் தோல்வி மனோ நிலையை தழுவிவிட்டால் புலிகளுக்கு எதிரான இன்னொரு யுத்தத்தில் அவர்களைப் பயன்படுத்த முடியாமல் போய்விடும் என்பது இந்த படைநகர்வை நிறுத்துவதற்கு எதிரான அந்த படை அதிகாரிகளின் வாதமாகும்.

எது எப்படியோ 13ம் திகதி வந்ததும் அது விடுதலைப் புலி

களிடம் இருந்தாலும் அவர்களால் வெற்றியடைய முடியாது என்பது யாவரும் அறிந்த உண்மை. அடுத்தபடியாக இந்த ஒரு வருடம் பூர்த்தியான, நிலையில் விடுதலைப் புலிகள் மேலும் 6 மாதங்களுக்கு இந்த படை நகர்வை எதிர்த்து நின்று அரச படைகள்ள பலவீனப் படுத்தினார்களேயானால் சிறீ



## 6 மாதம் இன்னமும் போர் தொடர்ந்தால் சிறீலங்கா இராணுவம் சிதறுண்டு போகும்!

அமெரிக்காவோ தெற்கு வியட்னாமோ இணைந்தோ கூட மேற்கொள்ளவில்லை.

இதுதான் நவீன இராணுவ வரலாற்றில் ஒரு உள்நாட்டில் அரசாங்கத்தால் பிரிவினைவாதிகள் என்று வர்ணிக்கப்படுகின்ற அமைப்புக்கு எதிராக மரபு இராணுவம் ஒன்று பாரியளவில் ஈடுபடுத்தப்பட்டிருப்பது கண்கூடு. இது ஒரு முழுமையான 2 நாடுகளுக்கிடையிலான ஒரு யுத்தத்திற்கான பரிமாணங்களை இந்த ஜெய்சிக்குறூய் நடவடிக்கை உருவாக்கியிருப்பதை காட்டுகின்றது.

இந்திய பாகிஸ்தான் யுத்தத்தில் கூட ஒரு சில முனைகளில் முன்னேறிய இந்தியப் படைகள் தான் இந்தளவில் பெரிய அணிகளை ஒரு படைநகர்வில் ஈடுபடுத்தியிருக்கின்றன. ஆகவே இந்த 1 வருடத்தில் 2 நாடுகளுக்கிடையில் இன்னொரு நாட்டுடன் மேற்கொள்ளும் யுத்தமாகவே இது பரிணமித்துள்ளது. சிறீலங்கா இராணுவத்தைப் பொறுத்த வரை தன்னுடைய ஆட்பலத்தில் கிட்டத்தட்ட 60 சதவீதத்தை இந்த ஜெய்சிக்குறூய் போர்முனையில் முடக்கிவிட்டது.

சில இராணுவப் படை அதிகாரிகள் கூறுவது போல காலப் போக்கில் இந்த 4 படை அணிகளும் பலவீனப்பட்டு மனோ நிலை குலைந்துபோகின்ற நிலை ஏற்படுமானால் சிறீலங்கா இராணுவம் கட்டுப்பாடுள்ள மரபு வழி இராணுவமாக அதாவது சிறீலங்கா அரசினுடைய இரா

நடவடிக்கையை உடனடியாக நிறுத்தி இருக்கின்ற பிரதேசங்களை ஒரு குறிப்பிட்ட அளவு படைகளுடன் பாதுகாத்துக் கொண்டு, மறுபுறத்தில் மன்னார் பூநகரி வழியாக யாழ்ப்பாணத்துக்கு ஒரு பாதையைத் திறக்கலாம் என்று பல இராணுவ உயர் அதிகாரிகள் அபிப்பிராயப்பட்டுள்ளார்கள்.

இராணுவ ரீதியான நிலை மற்றும் இராணுவ அதிகாரிகளின் கருத்துக்கள் இவ்வாறு இருந்தாலும் அரசாங்கத்துக்கு இது ஒரு அரசியல் ரீதியான கௌரவப் பிரச்சினையாக வந்துவிட்டது.

இராணுவ ரீதியாக படைகளை உடனடியாக பின்வாங்கச் செய்து மன்னார் பூநகரி வழியாக சென்று யாழ்ப்பாணத்திற்கான பாதையை திறக்க முயல்வது சிலவேளைகளில் இழப்புக்கள் குறைவான ஒன்றாக இருந்தாலும் அரசியல் ரீதியாக சிறீலங்கா அரசாங்கத்திற்கு அது

**ஜெயசிக்குறூய் இராணுவ நடவடிக்கையில் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களுக்கு எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

களுக்கு ஒரு மாபெரும் வெற்றி என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. ஒரு வருடமாக 50 ஆயிரம் படைகளை ஈடுபடுத்தி சர்வதேச நாடுகளின் உதவிகளையும் பெற்று புலிகளை வெல்லமுடியவில்லை என்றால், இனி எப்படி அவர்களை வெல்வது என்ற உளவியல் சிக்கல் ஒன்று, அதாவது தோல்வி மனப்பான்மை படையினர் மத்தியில் ஏற்படுவது தவிர்க்கமுடியாதது.

அதேவேளை ஒரு வருடமாக இந்தளவு சர்வதேச நெருக்கடிகள் பொருளாதாரத் தடைகள், பஞ்சங்கள் பட்டினிகள் இன்னோரன்ன பிரச்சினைகள் மத்தியில் மிகப் பெரும் மரபு ரீதியான படையெடுப்பை, சகல விதமான வளங்களையும் பெற்று உக்கிரமான முறையில் மேற்கொள்ளப்பட்ட போரை 1 வருடமாக தாக்குப் பிடித்து எதிர்த் தாக்குதல் நடத்தி முறியடித்துள்ளோம் என்பது விடுதலைப் புலிகளின் அடுத்த கட்ட வளர்ச்சிக்கும், அவர்களது உறுப்பினர்களுக்கும், மக்களுக்கும் உளவியல் ரீதியான பலம் ஒன்றை உண்டாகும் என்பதில் எந்த விதமான சந்தேகமும் இல்லை. இது எதற்கு ஒத்ததென்றால் விடுதலைப் புலிகள் இந்திய இராணுவத்துடன் மோதியபோது அவர்கள் வெளியேறும் வரை செயற்படக் கூடியதாக இருந்ததன் ஊடாக உலகின் 4 வது பெரிய இராணுவத்தையே நாங்கள் எதிர்த்தவர்கள் என்ற ஒரு உளவியல் பலம் அவர்களுக்கு ஏற்பட்டதைப்போன்று இங்கும்

லங்கா இராணுவம் ரஷ்யாவில் மாட்டிக்கொண்ட நெப்போலியனின் படைகள் போலவும், பின்னர் அங்கு ஒப்பரேசன் பார்பரா என்ற ரஷ்ய படைநகர்வில் மாட்டிக்கொண்டு அழிந்த ஹிட்லரின் படைகள் போலவும் வரக்கூடிய ஒரு சூழ் நிலையே உள்ளது.

சிறீலங்கா இராணுவ அதிகாரிகள் சிலர் தாம் 'பிடித்துள்ள இடங்களை தொடர்ந்து தக்க வைத்துக் கொண்டு அவற்றைப் பலப்படுத்தி வைத்திருப்பதன் மூலம், புலிகளை காத்திருக்க வைத்து பலவீனப்படுத்திவிடலாம் என்ற ஒரு புது உபாயத்தை தற்போது முன்வைத்திருக்கிறார்கள். ஆனால் புலிகள் தங்களுக்கு உரித்தான 'ஊடுறுத்துத் தாக்குதல் நடவடிக்கைகள் மூலம், அரச படைகளின் தக்கவைத்தல் நடவடிக்கைகளை முறியடித்துவிடும் வல்லமை படைத்தவர்கள்' என்பதை இந்தப் படை அதிகாரிகள் கவனிக்கத் தவறிவிட்டார்கள் என்று சில இராணுவ ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எப்படியிருந்தாலும் இந்த ஒரு வருடம் என்பது புலிகளுக்கு மனோ ரீதியான பலத்தையும், அரசு படைகளுக்கு மனோ ரீதியான பலவீனத்தையும் கொடுத்து விட்டது. பலவீனமான அரச படைகள் இன்னொரு வன்னி மாரிக்கு தாக்குப் பிடிக்கும் நிலையில் இல்லை. இதுதான் உண்மை.

# ஒரே பார்வையில் படைநகர்வின்

**13.05.97** வவுனியாவில் இருந்தும் நெடுங்கேணியிலிருந்தும் சிறீலங்கா படைகள் புறப்பாடு.

**13-18.05** 6 நாட்கள் விடுதலைப் புலிகள் தொடர்ச்சியான எதிர்த் தாக்குதல். 225 முதல் 300 வரையிலான படையினர் பலி; 600-க்கு மேல் படுகாயம்; 5 தாங்கிகள் அழிப்பு; தமது தரப்பில் 52 படையினர் பலி, 80 பேர் காயம் எனவும் புலிகள் தரப்பில் 300 பேர் இறந்து, 500 பேர் காயம் எனவும் அறிவிப்பு.

**09.06.97** நொச்சிமோட்டை, தாண்டிக்குளம் மீது அதிரடித் தாக்குதல். 2 ஆயுதக் கிடங்குகள் கைப்பற்றப்பட்டன. 4 தாங்கிகள் அழிப்பு, 2 ஆட்டிலெறிகள் கைப்பற்றல், 1 துருப்புக்காவி கைப்பற்றல், 300-ற்கும் மேற்பட்ட படையினர் பலி. 500-க்கு மேற்பட்ட படையினர் படுகாயம்.
புலிகளில் 600 பேர் பலி, 800 பேர் காயம் என இராணுவப் பேச்சாளர் அறிவிப்பு.

## இரண்டு வாரத்தில் கிளிநொச்சி

**புலிகள் தலையைத் தூக்கப் பயந்து வாலைத் தூக்குகின்றார்கள். அவர்கள் விரக்தியின் விளிம்பில் நிற்கிறார்கள். இன்னும் இரண்டு வாரத்தில் எமது படைகள் கிளிநொச்சியை அடைந்துவிடும் என்று ரத்வத்தை அறிவிப்பு.**


**25.06.97** ஓமந்தையில் அமைந்த இராணுவக் கட்டளைத் தலைமையகம் தகர்ப்பு. 230-க்கு மேற்பட்ட படையினர் பலி; 450-க்கு மேற்பட்ட படையினர் படுகாயம்; 95 போராளிகள் வீரமரணம். 4 ஆட்டிலெறிகள், பல இராணுவ வாகனங்கள் புலிகள் வசம். வெற்றி நிச்சயத்தின் இதயத்தில் விழுந்த அடி என இராணுவ ஆய்வாளர்கள் விபரிப்பு. MI 24 ஹெலி அழிப்பு. 1000 கோடி ரூபா ஆயுத இழப்பு. 1050 புலிகள் பலி, 1450 பேர் காயம் என இராணுவப் பேச்சாளர் அறிவிப்பு. 119 சடலங்கள் மீட்கப்பட்டதாகவும் 250 பேர் தமது தரப்பில் காயம் என்றும் அறிவிப்பு.

**16.07.97** நெடுங்கேணி பகுதியில் தாக்குதல், 2 அதிகாரிகள் உட்பட 30 படையினர் பலி. 60 பேர் படுகாயம், 80 புலிகள் பலி. 200 பேர் காயம் என அரசு அறிவிப்பு.

**01.08.97** ஓமந்தை ரம்பைக்குளம் பகுதியில் படையினர் மீது தாக்குதலில் 135 படையினர் பலி, 40-க்கு மேற்பட்டோர் படுகாயம்.



126 போராளிகள் வீரமரணம். கனரக ஆயுதங்கள் புலிகள் வசம். தமது தரப்பில் 68 படையினர் பலி. 183 பேர் காயம் என்றும் புலிகள் தரப்பில் 200 பேர் பலி, 450 பேர் காயம் என அரசு அறிவிப்பு.



**19.08.97** புளியங்குளம் புறநகர் பகுதியில் சிறீலங்காவின் 53, 55-வது படைப்பிரிவின் மீது அதிரடித் தாக்குதல். 10 அதிகாரிகள் உட்பட 200-க்கு மேற்பட்ட படையினர் பலி. 500-க்கு மேற்பட்டோர் காயம். T55 ரகத்தைச் சேர்ந்த 6 தாங்கிகள் அழிப்பு. அரசு தமது தரப்பில் 77 பேர் பலி, 360 பேர் காயம் எனவும் புலிகள் தரப்பில் 320 பேர் பலி, 480 பேர் காயம் எனவும் அறிவிப்பு.

## நாளொன்றுக்கு 24 இலட்சம் ரூபா செலவு

**ஜெய்சிக்குறுய் இராணுவ நடவடிக்கைக்காக சிறீலங்கா அரசு நாளொன்றுக்கு 24 இலட்ச ரூபாவை செலவழித்து வருவதாக இராணுவப் பேச்சாளர் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.**

**08.09.97** ஜெய்சிக்குறுய் 125வது நாள் 12 கிமீற்றர் தூரம் மட்டுமே முன்னேற்றம். 700 படையினர் வரை பலி. 4000 பேர் வரை காயம்.

**14.09.97** புளியங்குளம் புறநகர் பகுதியில் உக்கிரச் சமர். 44 படையினர் பலி, 250-க்கு மேற்பட்டோர் காயம். 13 போராளிகள் வீரச்சாவு.

## 132-வது நாள் அரச தகவல்

**ஜெய்சிக்குறுயின் 132 நாள் சிறீலங்காவின் இராணுவப் பேச்சாளர் விடுத்த செய்திக் குறிப்பில் இதுவரை 650 இராணுவம் பலி, 3671 பேர் காயம் எனவும், புலிகள் தரப்பில் 2480 பேர் பலி, 3000 க்கு மேற்பட்டோர் படுகாயம் என விபரிப்பு.**

**15.09.97** புதூர் பகுதியில் முன்னேற முயன்ற இராணுவம் விரட்டியடிப்பு. 20 படையினர் பலி, 5 போராளிகள் வீரச்சாவு.

**01.09.97** ஜெய்சிக்குறுய் தொடங்கி 4 மாதங்களாகியும் 13 கி.மீற்றர் தூரத்தைக்கூட கடக்க முடியாத நிலையில் புளியங்குளம் புறநகர் பகுதியுடன் இடை நிறுத்தம்.


**01.10.97** கனகராயன்குளப் பகுதியில் சிறு மோதல்.

**05.10.97** ஜெய்சிக்குறுய் மீண்டும் புறப்பாடு, புளியங்குளத்தை தவிர்த்து கரிப்பட்டுமுறிப்பு, கற்கிண்டி முனை ஊடாக முன்னேற முயற்சி. விடுதலைப் புலிகள் கடும் எதிர்த் தாக்குதல், 100-க்கு மேற்பட்ட படையினர் பலி. 200-க்கு மேற்பட்டோர் காயம். 72 போராளிகள் வீரமரணம். இராணுவக் களஞ்சியம் கைப்பற்றப்படல்.

**06.10.97** பெரியமடு பகுதியில் கடும் சமர். பெரியமடுச் சந்திக்கு அப்பால் இராணுவம் விரட்டியடிப்பு. 20 படையினர் பலி. 13 போராளிகள் வீரச்சாவு.

**07.10.97** விக்னன் குளம் பகுதியில் கடும் சமர். அடம்பன் வரை இராணுவம் விரட்டியடிப்பு.

**08.10.97** கரிப்பட்டுமுறிப்பு பகுதியில் கடும் சமர். 100-க்கு மேற்பட்ட படையினர் பலி. (அதில் 4 உயர் அதிகாரிகள்) 200 இற்கும் மேற்பட்டோர் காயம். இவ் வாரத்தில் MI 17 ரகத்தைச் சேர்ந்த 3 உலங்கு வானூர்திகள் அழிப்பு, இரண்டு ஆயுதக் களஞ்சியங்கள் கைப்பற்றப்படல். 25 சடலங்கள் செஞ்சிலுவைச் சங்கம் மூலம் கையளிப்பு.



# ஜெயசிக்குறூய் ஓராண்டு நிகழ்வுகள்

## அக்டோபரில் 5 தாக்குதல்கள்

அக்டோபர் மாதத்தில் மட்டும் விடுதலைப் புலிகள் ஜெய்சிக்குறூய் படையினர் மீது 5 மரபுவழி மற்றும் கரந்தடி சமர்களைத் தொடுத்துள்ளனர். இந்தக் காலப்பகுதியில் மட்டும் 400 படையினர் பலியாகி, 1000-க்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். 32 இராணுவ வாகனங்கள், 36 மோட்டார்கள், 10,000 க்கு மேற்பட்ட எறிகணைகள் உட்பட 100 மில்லியன் ரூபா பெறுமதியான ஆயுத தளவாடங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. ஜெய்சிக்குறூய் தற்காலிக இடைநிறுத்தம்.

**16.11.97** ஜெய்சிக்குறூய் III ஆரம்பம். கனகராயன் குளம், புளியங்குளம், கிளிநொச்சி என மூன்று முனைகளில் கடும் மோதல். புளியங்குள மோதலில் 19 இராணுவக் கொமாண்டோக்கள் பலி. 75 பேர் படுகாயம்.

**27.11.97** கனகராயன் குளப் பகுதியில் விடுதலைப் புலிகள் ஊடுருவித் தாக்குதல்.

**04.12.97** மன்னன்குளம், கனகராயன் குளப் பகுதியில் மாபெரும் தாக்குதல். 300 விசேட இராணுவக் கொமாண்டோக்கள் பலி. 400 இற்கும் மேற்பட்டோர் படுகாயம். கனரக ஆயுதங்கள் புலிகள் வசம்.
133 படையினரின் சடலங்கள் புலிகளால் கைப்பற்றப்படல்.
113 சடலங்கள் செஞ்சிலுவைச் சங்கம் மூலம் கையளிப்பு.
மன்னக்குளத்தில் 35 போராளிகள் வீரச்சாவு.

**04.01.98** ஓலுமடு இராணுவ நிலையை ஊடறுத்து நடந்த கரும்புலித் தாக்குதலில் MI-17 உலங்கு வானூர்தி தகர்ப்பு

## ரத்வத்தையின் காலக்கெடு

பெப்ரவரி 4–ம் திகதி அதாவது 04.02.98 அன்று சிறீலங்காவின் 50–வது சுதந்திரதினம் கொண்டாடப்படும்போது சுதந்திரதினப் பரிசாக கிளிநொச்சிக்கான தரைப் பாதையைத் திறந்து, அங்கிருந்து சுதந்திரத்தினப் பேருந்து ஒன்றை கண்டிக்கு விடப் போவதாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை சவால் விடுத்துள்ளார். ஒரு மாத காலத்துக்குள் அது முடியாத காரியம் என்று இராணுவத் தலைமைப் பீடம் அவருக்குத் தெரிவித்துள்ளது.

**26.01.98** விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு சிறீலங்கா அரசாங்கம் தடைவிதித்துள்ளது.

**02.02.98** கிளிநொச்சி—பரந்தன் இராணுவ வலையம் தகர்ப்பு. இயக்கச்சி ஆட்டிலெறித் தளம் அழிப்பு. ஆனையிறவு இராணுவத் தளத்தில் ஊடுருவித் தாக்குதல்.
ஆனையிறவு பிரதான தொலைத் தொடர்புக் கோபுரம் தகர்ப்பு. கிளிநொச்சி நகரம் புலிகளின் கட்டுப்பாட்டில்.
400 இற்கும் மேற்பட்ட படையினர் பலி, 2500 க்கு மேற்பட்ட படையினர்காயம்.
159 போராளிகள் வீரச்சாவு.

**23.02.98** சிறீலங்காவின் 53, 55, 56—வது படைப் பிரிவுகள் மாங்குளத்தைக் கைப்பற்ற கடும் முயற்சி. விடுதலைப் புலகள் எதிர்த்தாக்குதல்.

**02.03.98** மாங்குளம் புறநகர் பகுதியில் தொடர்ந்து பீரங்கிச் சமர்.

**04.03.98** நயினா மடுவில் படையினர் மீது புலிகள் கண்ணிவெடித் தாக்குதல் 15 படையினர் பலி. 2 இராணுவ வாகனங்கள் தகர்ப்பு.


## யுத்த இழப்பு–அரச அறிக்கை 28.03.98


1500 பேர் பலி
5500 பேர் காயம்
1900 பேர் மீண்டும் யுத்த முனைக்கு செல்லமுடியாத நிலை.

## 1997 இல் அரச படைகளின் இழப்பு விடுதலைப் புலிகள் ஏட்டின் கணிப்பு

3500 க்கு மேற்பட்ட படையினர் பலி.
8000 க்கு மேற்பட்ட படையினர் காயம்.
1400 விடுதலைப் புலிகள் வீரச்சாவு
1000 விடுதலைப் புலிகள் காயம்.

**16.03.98** மாங்குளத்தைக் கைப்பற்ற மும்முனைகளில் முயற்சி. புலிகள் அதை எதிர்த்து பீரங்கிக்குண்டு மழை. அரச பீரங்கிப் படைத் தளபதி உட்பட 22 படையினர் பலி. பிரதான தளபதிகள் உட்பட 109 பேர் படுகாயம். ஓலுமடு முனையில் 18 படையினர் பலி. தலைமைக் கட்டளை அதிகாரி, பிரிகேடியர் சரத் பொன்சேகா, பிரதித்தளபதி T.W. போக்றான் உட்பட 72 பேர் படுகாயம்.
உத்தராயங்குளம் முனையில் கெமுனு கண்காணிப்பு படைப் பிரிவைச் சேர்ந்த மேஜரும், கப்டனும் பலி, 12 பேர் படுகாயம்.





## 1 கிலோ மீட்டருக்கு 100 படையினர் பலி

இந்த ஜெய்சிக்குறூய் படை நகர்வில் 1 கிலோ மீற்றருக்கு 100 படையினர் என்ற அடிப்படையில் இராணுவ இழப்புகள் அமைத்திருப்பதாக சிறீலங்கா இராணுவ உயர் அதிகாரிகள் உத்தியோக பூர்வமற்ற முறையில் ஒப்புக் கொண்டுள்ளனர்.

அதேவேளை இதுவரை நடந்த சண்டையில் 1000 மில்லியன் ரூபாவுக்கு மேல் பெறுமதியான ஆயுத தளவாடங்கள் விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டதாகவும் அதே அளவு பெறுமதியான ஆயுதத் தளவாடங்கள் அவர்களால் கைப்பற்றப்பட்டதாகவும் சிறீலங்காவின் முன்னாள் விமானப் படைத் தளபதி ஹரி குணதிலகா கூறியுள்ளார்.



# அத்தாசின் பதிவுகள்

இக்பால் அத்தாஸ், சிறீலங்காவின் பிரச்சினைக்குரிய பிரபலமான இராணுவ ஆய்வாளர். ஒரு பகுதி இராணுவத் தலைமையின் வெறுப்பை சம்பாதித்தவர். இவர்மீது கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அண்மையில் கொழும்பு சென்ற ஐ.நாவிற்கான அமெரிக்க தூதுவர் அவரைச் சந்தித்ததன் மூலம் சிறீலங்காவிற்கு மறைமுகமான எச்சரிக்கையை அமெரிக்கா விடுத்தது.

அவரது ஆய்வுகள் கொழும்பை மையமாகக் கொண்ட பத்திரிகையாளனின் நிர்ப்பந்தங்களுக்கும், மனோநிலைக்கும் உட்பட்டதாயினும், கொழும்பில் ஜெயசிக்குறுய் எழுப்பிவரும் அதிர்வுகளை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது.

வாரக்கணக்கில் முடிப்பதாகத் திட்டமிடப்பட்டு வருடத்தை அண்மித்துள்ள ஜெயசிக்குறுய் தோற்றுவித்துள்ள கருத்துக்களின் பதிவேடாக அத்தாஸ் எழுதிய ஆய்வு இங்கு தொகுக்கப்படுகின்றது.

08.06.97

## புதிதாக வாங்கிய பீரங்கிகள் போர்முனைக்குச் செல்கின்றன

குருநாகல் - அநுராதபுர நெடுஞ்சாலையில் கடந்த வியாழன் அன்று போக்குவரத்துக்கள் இடைநிறுத்தப்பட வன்னியை நோக்கி இராணுவ வாகனங்கள் நிரை நிரையாக நகர்கின்றன. அவற்றின் பின்னால் 130 மி.மீ பீரங்கி சுடுகலன்கள் ரெயிலர்களில் வைத்து இழுத்துவரப்பட்டன ......

.......... ஜெயசிக்குறுய் நடவடிக்கைகளுக்காக வெளிநாட்டு உற்பத்தியாளரிடமிருந்து கொழும்புத் துறைமுகத்திற்கு அவை வந்திறங்கியவை. அன்று மாலையே அவை புலிகளின் நிலைகளை நோக்கி வன்னியில் தாக்குதல்களை ஆரம்பித்து விட்டன.

......... ஜெயசிக்குறுயின் பிரதி பலிப்புக்கள் நெடுஞ்சாலைகளில் மட்டுமல்ல நாட்டின் தூரத்து மூலை முடுக்கு எங்கும் தெரிகின்றன.

பாதுகாப்புப் படைகள் முன்னோக்கி நகரும் போது அதன் வால்பகுதியை குறைந்த பயிற்சியுடைய இராணுவத்தினரே பாதுகாக்கவேண்டி இருக்கும். முன்னேறும் படைகளை வால்பகுதியிலிருந்து தனிமைப்படுத்தும் புலிகள் இயக்கத்தலைவர் பிரபாகரனின் நம்பிக்கைக்கு இது வாய்ப்பாக இருக்கலாம்.

...... பிரபாகரன் குறைந்துவரும் இராணுவ வாய்ப்புக்களை மட்டும் எதிர்கொள்ளவில்லை, குறைந்துவரும் தனது அரசியல் வாய்ப்புக்களையும் எதிர்கொள்கிறார். அவரது இராணுவ நிலையைப்போன்று அவரது இராச்சியமும் அச்சுறுத்தப்பட்டுள்ளது. நீண்டகால நோக்கில் ஒரு படைவீரனாகவோ இல்லாவிட்டால் அரசியல்வாதியாக இருக்க வேண்டிய தேர்வே அவருக்குத் தரப்பட்டுள்ளது.....

15.06.97

## தாண்டிக்குளத்தின் செவ்வாய் முழக்கம்

அவர்களுக்கு (இராணுவத்தினருக்கு) தெரியாமல் நெடுங்கேணிக்கு அண்மையில் அமைந்திருந்த காட்டுப்பகுதி ஒன்றிலிருந்து புலிகள் தலைவர் பிரபாகரன் தன் நம்பிக்கைக்குரிய கருணாவுக்குபதிலடி தாக்குதல் நடத்துமாறு உத்தரவிட்டார்.

......... ஜெயசிக்குறுய் படைகள் ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கும் போது தாண்டிக்குளம் நோக்கி காட்டுவழியாக கருணாவும் அவரது சகாக்களும் ஊர்ந்து சென்றனர்.

சுமார் 600; நன்றாக ஆயும் தரிந்த புலிகள் (ஆண்களும், பெண்களும்) போர்முனைக்கு பீரங்கிகளை இழுத்துவந்து உளவுத்துறையினை ஆச்சரியத்திற்குள்ளாக்கினர்.

........ வவுனியா மீதான (புலிகள் நடத்திய) தாக்குதல் தோற்றுவித்த பயப்பீதி தொடர்கையில் கெரில்லாக்கள் முன்னரங்க காவலரணை புயலென தாக்கினர்...........

............. புலிகளின் பாரிய அணியொன்று 55ம் பிரிவின் தலைமையகத்தை தாக்கியது தாங்கிகள், கவச வாகனங்கள் போன்றன மீது ரொக்கட் தாக்குதல் நடத்தப்பட்டது.

...... நான்கு மணிநேர சண்டையில், நொச்சிமோட்டை - தாண்டிக்குளம் பகுதியில் மூன்று கிலோமீற்றர் பரப்பு புலிகளின் கட்டுப்பாட்டில் வந்தது. கருணாவும், அவரது ஆண்களும், பெண்களும் 'பயங்கரத்தையும்', 'அழிவையும்' கட்டவிழ்த்து விட்டனர்.

....... புலிகள் போரை அடுத்த வருடத்திற்கும் நீடிக்க வேண்டுமாயின் வவுனியா - கிளிநொச்சி பாதை திறப்பை தாமதிக்க வேண்டும். மாரிகாலம்வரை (97 இறுதி வரை) போரை நீடிக்க முடியுமாயின் பிரபாகரன் திறமையாக செயற்பட்டுள்ளார் எனக் கருதலாம்....

29.06.97

## வெற்றி நிச்சயம்; ஆனால் எப்போது - எவ்வளவு செலவில் ?

'ஒப்பரேசன் ஜெயசிக்குறுய்' என பெயரிட்ட இராணுவ திட்டமிடலாளர்கள் கடந்தவாரம் மிகவும் அவமானத்திற்கு உள்ளானார்கள்.


இதன் கருத்து 'வெற்றி நிச்சயம்' என்பது தான். ஆனால், 47 நாட்களின் பின்னர் 400 சாவுகளுக்குப் பிற்பாடு 64 கிலோமீற்றர் நீளமான நெடுஞ்சாலையில் மூன்றில் ஒருபங்கை கைகளில் வைத்துள்ள படையினருக்கு வெற்றி அடைய முடியாதது அல்ல. ஆனால், எவ்வளவு விரைவாக அடையலாம் என்பதே நாட்டின் அரசியல் - பாதுகாப்புத்துறையினரின் மிகப்பெரிய கேள்வியாகும்.

முதலாவது பதிலடி தாக்குதல் நடந்து இருவாரங்களின் பின் புலிக்கெரிலாக்கள் கடந்த செவ்வாயன்று மூர்க்கமான மற்றுமொரு தாக்குதலை நடத்தியுள்ளனர். இம்முறை 55 வது பிரிவின் கிழக்கு அரண்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. வட ஓமந்தையிலுள்ள பனிக்கந்தலாவை கிராமத்தில் 55-வது பிரிகேட் பலமணிநேரம் தனிமைப்படுத்தப்பட்டது.

...... இத் தொடரில் நாங்கள் மீள வலியுறுத்தியது போன்று தற்போது இடம்பெறும் ஜெயசிக்குறுய் நடவடிக்கையின் இழப்பு விகிதம் வழமையிலும் மிக அதிகமானதாகும்.

...... தற்போது கிடைக்கப்பெற்ற சேதார விபரங்களின் படி 409 படையினரும் அதிகாரிகளும் கொல்லப்பட்டுள்ளனர். 27 பேரைக் காணவில்லை. 1166 படையினர் காயமடைந்துள்ளனர். ஆனால், இராணுவ வட்டாரங்கள் உண்மையான இழப்பு உத்தியோகபூர்வ இழப்புகளிலும் மிக அதிகமெனக் கருதுகின்றது. சராசரி 11 இழப்புக்கள் தினசரி நடக்கின்றன. இதை விட பல பில்லியன்கள் பெறுமதியான இராணுவ உபகரணங்கள் அழிக்கப்பட்டும், சேதமாக்கப்பட்டும் உள்ளன.

சிங்களப் பத்திரிகையின் பார்வையில் ஜெயசிக்குறுய்




06.07.97

## மூன்றாவது பதிலடிக்கு பிரபா தயாராகிறாரா ?

அரசின் தகவல்தொடர்பு சாதனங்கள் பிரபாகரன் தான் எதிர்கொள்ளும் மூர்க்கமான இராணுவ நடவடிக்கைகளிலிருந்து தப்புவதற்காக நாட்டைவிட்டு ஓட முயல்கிறார் என 'சர்வதேச பரபரப்பை' ஏற்படுத்துகையில் இராணுவ உளவுத்துறை வேறொருவிதமாக பேசுகின்றது. அவர் மூன்றாவது பதிலடி தாக்குதலுக்கு தயாராகின்றார் எனக் கூறுகின்றனர்.

22.07.97

## 'செய் அல்லது செத்துமடி' காரணம் என்ன ?

ஒப்பரேசன் ஜெயசிக்குறுய் ஆரம்பமாகி நாற்பது நாட்கள் ஆகிவிட்டது. புலிகளின் செய் அல்லது செத்துமடி தாக்குதல்களின் அதிர்வுகள் பாதுகாப்பு வட்டாரத்தில் இன்னமும் எதிரொலிக்கின்றன. தாக்குதல் முடிந்து இரண்டு நாட்களின் பின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ரத்வத்தை தன் முப்படைத் தளபதிகளுடனும், பொலிஸ்மா அதிபருடனும் சம்பவம் நடந்த இடத்திற்கு சென்றார்.

....... பிறவிடயங்களுடன் எவ்வாறு புலிகளால் பதிலடித் தாக்குதல் நடாத்தப்பட்டது என ரத்வத்தை அறிய முனைந்தார். தாக்குதல் தொடர்பான விபரங்கள் இராணுவ உளவுத் துறையினரால் தமக்குத் தரப்படவில்லை என குறைந்தது இரு உயரதிகாரிகளாவது முறைப்பாடிட்டனர்.

...... 'எமது படைகள் இத்தகைய தாக்குதல்களை எதிர்பார்த்திருந்தனர் அதனால்தான் புலிகளை தோற்கடித்து பின்வாங்க வைக்க முடிந்தது. நாங்கள் தயாராக இருந்தோம். எமது வால் அவர்களது ஒன்றிணைந்த படைகளிலும் பலமானது.' என ரத்வத்தை பிரகடனம் செய்தார்.

17.08.97

## ஜெயசிக்குறுய் தொடரும்

...... அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் ஒப்பரேசன் ஜெயசிக்குறுய் பதினைந்துவருட பிரிவினவாதப் போரில் மைல்கல்லாக அமைகிறது. அரசியல் ரீதியாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைவர்கள் முழுமையான இலக்கை எப்பவோ அடைந்திருக்க வேண்டும் என எதிர்பார்த்திருந்தனர். அத்துடன் இத்தகைய சாதனையுடன் இவ்வருட முடிவுக்குள் அரசின் தீர்வுப் பொதியை அறிமுகப்படுத்தி இராணுவ செலவீனங்களைக் குறைத்து அரசினால் மீள அரசியல் நிகழ்ச்சித் திட்டத்திற்கு செல்லமுடியும் எனக் கருதினர். இவ் அரசியல் இராணுவ விடயங்களினால் ஜெயசிக்குறுய் ஆனது கொழும்பைத் தளமாகக் கொண்ட இராஜதந்திர சமூகத்தினுள் அதிக ஆர்வத்தை ஈட்டியுள்ளது. இதுவரை மூன்றுமாதகால ஒப்பரேசன் ஜெயசிக்குறுய் நடவடிக்கையில் 530 பேர் கொல்லப்பட்டும், 3200 பேர் படுகாயப்படுத்தப்பட்டும் உள்ளனர். இது சூரியக்கதிர் மூன்று நடவடிக்கையுடன் ஒப்பிடும் போது மிக அதிகமான சேதார விகிதமாகும்.

........ விடுதலைப் புலிகள் ஒரு அரசியல் குழுவாக இல்லாவிடினும் ஒரு அரசியல் இலட்சியத்திற்காக தம்மை அர்பணித்தவர்கள். இந்தவகையில் அதனது தீவிரத் தன்மையானது பிற அரசியல் கட்சிகளிலிருந்து அதனை மிகத் தூரத்தில் வைத்துள்ளது. இதனால் பிற தமிழ் குழுக்களின் உதவியுடன் அரசு அரசியல் இலாபத்தைப் பெறவேண்டுமாயின் புலிகளை அடக்க வேண்டும் என்பதே முதலாவது தேவையாகும்.

புரட்சிகர ஆழுமை இல்லாவிடில் புலிகள் அரசியல் பிடியை கொண்டிருக்கமாட்டார்கள் இதனால் வன்னியில் விடுதலைப் புலிகளை தோற்கடிப்பதும் கிழக்கு மாகாணத்தில் புலிகளின் இராணுவ பலத்தை அழிப்பதும் முதலாவது தேவையாகும். துரதிஷ்டவசமாக இதனை சாதிக்கமுடியவில்லை. இச் சூழ்நிலையில் அரசியல் தீர்வானது புலிகளின் தலைமையின்பாற்பட்டே உள்ளது.

(தொடரும்)




# நுரையீரல், மண்ணீரல் பாதிப்புற்றிருப்பதை அறிவது எப்படி?

எம் உடலிலுள்ள நுரையீரல், மண்ணீரல் பாதிக்கப்பட்டிருந்தால் நாளடைவில் நாம் ஏராளமான நோய்களிற்கு ஆளாவதற்கு வாய்ப்புகள் உள்ளன. எனவே, இவை பாழடைந்த நிலையில்தான் இருக்கிறனவா என்பதை அறிய கீழ்க் காணும் நோய்கள் ஆரம்ப அறிகுறியாக இருக்கின்றன.

பொதுவாக நுரையீரல் பாதிக்கப்பட்டிருப்பின் இரத்தத்தில் போதிய பிராணவாயு இன்றி பற்கள் வெண்மையிழந்து பழுப்பாகவும், முகம் வெள்ளையாக அல்லது சாம்பல் நிறமாக பளபளப்பின்றியும் இருக்கும். அத்தோடு கண்கள் வெளிறிய நிலையில் எப்போதும் சோர்வாக காணப்படும். சாதாரணமாக நுரையீரல் தன் இயக்கத்திற்கான சக்தியை மண்ணீரலிலிருந்தே பெறுகிறது. வழமைக்கு மாறாக பலவீனப்பட்ட நிலையிலுள்ள நுரையீரல் தனக்கு வேண்டிய இழந்த சக்தியையும் அதிகமாக மண்ணீரலிலிருந்து பெறத்தொடங்கும்போது மண்ணீரலும் சோர்ந்து பாதிப்படையும். இம் மண்ணீரலின் இயக்கம் எம் சமிபாட்டுத் தொழிற்பாட்டுக்கு இன்றியமையாத ஒன்று.

ஆனால், இது பாதிப்புற்று இருக்குமெனில் சரியான சமிபாடு இன்றி, உணவு உண்டதும் வயிறு கனமாகவும், போதிய பசி நித்திரை இன்றியும் வாயில் எந்நேரமும் உப்புக்கலந்த உமிழ்நீர் சுரப்பதும், வெள்ளைத் திட்டுக்கள் படர்ந்து நாக்கு ஓரங்களில் புண்களும் உருவாகும். இவை மட்டுமல்லாது சாதாரணமாக பெண்களுக்கு நிகழும் வெள்ளைபடுதல், மாதவிடாய் என்பவற்றிலும் வித்தியாசம் தெரியும்.



ஆரோக்கியமான மண்ணீரல்



பழுதடைந்த மண்ணீரல்

நுரையீரல் பாதிக்கப்பட்ட நிலையில் வெள்ளைபடும்போது அது மஞ்சள் நிறம் கலக்காமல் சளி அல்லது முட்டையின் வெண்கரு போல் இருக்கும். இதன்மூலம் அரிப்போ வாசனையோ வராது. மாதப்போக்கின்போது வெளியேறும் இரத்தம் சிவப்பாக இன்றி வெளிறிய சிவப்பாகவும், ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்கு மேல் இரத்தப்போக்கும் இருக்காது. இவர்களுக்கு சிறு வேலை செய்தாலும் களைப்பு, தூக்கம் மூச்சு வாங்கல் என்பன தோன்றும். சிலருக்கு காலையில், தலை கனமாகவும் இருக்கும்.

இதேபோன்று மண்ணீரலும் பாதிக்கப்பட்டிருப்பின் வெள்ளைபடும்போது மஞ்சளாகவும், இது தோன்றும் இடத்தில் அரிப்பும் கெட்ட வாசனையும் இருக்கும். மாதப்போக்கின்போது கடுமையான அடிவயிற்று வலியுடன் அதிக இரத்தப் போக்கும் சில வேளை குருதிக் கட்டிகளாகவும் வெளியேறும். இத்தகையவர்கள் அதிக பசியுடனும் ஊளைச் சதையுடனும் இனிப்பை அதிகம் விரும்பி உண்பவர்களாகவும் இருப்பர்.

இதை ஆரம்பத்தில் இனங்கண்டு மாற்றாவிடின், இதன் மூலம் தோன்றும் வாய்ப்புண், கருப்பை வாயில் தோன்றும் புண் என்பவற்றால் புற்றுநோய் போன்ற கொடிய நோய்களுக்கும் ஆளாக வேண்டிவரும்.

# 'POLO' விளையாட்டில் பெண்கள் தொகை அதிகரிக்க வேண்டும் - *MIREILLE SOLARZ*

'POLO' நீண்ட பனி படர்ந்த நிலத்தில் வேகமாக ஓடும் குதிரையோடு இணைந்து சறுக்கி வருவதென்பது அழகும் ஆபத்தும் கொண்ட ஓர் அற்புதமான விளையாட்டு. இவ்விளையாட்டை ஆண்களிற்கென்றே ஒதுக்கி விட்டதெனலாம்.

பெண்கள் பெரிதும் இதை விரும்புவதே இல்லை. காரணம் மிகக்கடினமானது என்பதுதான். ஆனால், 'MIREILLE SOLARZ' என்ற பிரெஞ்சுப் பெண்மணியோ இக் கடினங்களையெல்லாம் சவாலாக ஏற்று POLO விளையாட்டில் 2 சாம்பியன் விருதைப் பெற்றதன் மூலம் பிரெஞ்சுப் பெண்கள் அனைவருக்கும் பெருமை சேர்த்துள்ளார். 10 வருடங்கள் மேற்கொண்ட கடும் பயிற்சியின் பலன் இன்றைய சிறந்த POLO வீராங்கனையாகத் திகழும் MIREILLE SOLARZ முறையே 20, 23 வயதுடைய இரு பிள்ளைகளின் தயார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



இவ்விளையாட்டைப் பற்றிக் குறிப்பிடும் MIREILLE SOLARZ இது மற்றைய விளையாட்டைப் போல் இலகுவானதல்ல என்கிறார். ஏனெனில் நாமும் எம்மோடு இணைந்து விளையாடும் குதிரையும் மனதார ஒரு முகப்படுத்தப்பட்ட நிலையில் இருக்க வேண்டும். மின்னல் வேகத்தில் ஓடும் குதிரை பனியில் சறுக்கி எழும்போது நாமும் துணிவுடன் அதனை எதிர்கொள்ள வேண்டும். நாம் சறுக்கி எழும் அந்நேரம் வார்த்தையால் சொல்லாத உணர்வுகளையெல்லாம் எம்வசம் உண்டாக்கும்.

இவ்விளையாட்டு ஆஜென்டினாவில்தான் பிரபலம். அங்கே ஏராளமானவர்கள் இவ்விளையாட்டில் ஆர்வமாக உள்ளனர். ஆனால், இங்கு பெரிதாக யாரும் இதற்கு முன்வருவதில்லை. குறிப்பாக இவ் விளையாட்டிலிருந்து பெரிதும் ஒதுங்கியே உள்ளனர். எனவே விரைவில் இந்நிலை மாறவேண்டும். POLO என்ற இப்பிரபல விளையாட்டில் பெண்கள் தொகை அதிகரிக்க வேண்டும் என்கிறார் MIREILLE SOLARZ.

# வயோதிபத்திலும் இளமைத் துடிப்பு

இங்கு படத்திலுள்ள இந்த புன்னகை பூக்கும் பெண்ணின் வயது என்ன தெரியுமா? 55. இவர் எப்போதும் தன்னோடு இணைபிரியாமல் வைத்துள்ள பொருள் பள்ளிச் சிறுவர்களைப் போல் சக்கரம் பொருத்திய சப்பாத்துக்கள்தானாம்.

எம்மவர்களில் அநேகர் வயது சற்று ஏறினாலே மற்றவர்களிடத்திலிருந்து தம்மைப் பிரித்து தம்மால் இனி எதுவுமே முடியாது. நாம் பிறருக்கு பாரமாக உள்ளோம் எனத் தப்புக் கணக்குப் போட்டு ஒரு வட்டத்தினுள் ஒதுங்கி விடுவார்கள்.

ஆனால், Helene என்னும் இப் பெண்மணியோ தன் வயதை ஒரு பொருட்டாகக் கொள்ளாமல் எப்போதும் காலில் பூட்டிய உருளும் சப்பாத்தும் கண்கொள்ளாத உடையலங்காரமுமாகக் களிப்புடன் உலாவருகிறார்.



வீட்டிலிருந்து எந்த ஒரு வேலையாக வெளியே செல்வதானாலும் இச்சப்பாத்துடன் தான் செல்வார். செல்வதும் சும்மா அல்ல வீதிவழிகளில் உள்ள நேர்கோட்டைப் பார்த்து அதிலிருந்து சற்றேனும் விலகாமல் செல்வதுதான். இவருக்கு அதிகம் பிடித்தமானது இந்த ஆசைக்கு நகர்புற வீதிகளும் விதிவிலக்கில்லை. குளிர் காலம் தொடங்கினால் Helene இற்கு கொண்டாட்டம்தான். ஏனெனில் தன் உருளும் சப்பாத்தின் வித்தைகளை பனியிலும் காட்டத் தவறுவதில்லை.

வயது என்பது உடலுக்குத்தானேயன்றி உள்ளத்திற்கு இல்லை என்கிறாரோ இந்த ஆர்ப்பாட்டப் பெண்மணி?

## ஒரு கதை

*ஒரு ஆடுகுதிரையின் மீது*
*ஒரு குழந்தை ஆடுகிறது.*
*அது மரக்குதிரை*
*குழந்தையின் ஸ்பரிசம் அறியாதது*
*குழந்தை குதிரையை அடிக்கிறான்*
*தனது திறமையைக் கண்டு*
*தன்னையே மெச்சிக் கொள்கிறான்*
*அவன் வளர்ந்து பெரியவனாகிறான்*
*மரக்குதிரையில் மீண்டும் சவாரி செய்கிறான்*
*ஒரு சடங்கின் மூலம்*
*தன் இளமையை அறிவிக்கிறான்*
*இரவு கழிந்ததும்*
*குதிரை உருமாறுகிறது*
*குதிரையை அடிப்பவன்*
*தன்னைத்தானே மெச்சிக் கொள்கிறவன்*
*மாறாமலேயே இருக்கிறான்;*
*எஜமானாக*
*சவாரி செய்பவனாக*
*கணவனாக.*


*— பெண்களின் உரிமைகளுக்காகப் போராடிவரும் ஒரு பாகிஸ்தானியக் கவிஞர்.*

வளர்ந்துவரும் பெண் எழுத்தாளர்களை ஊக்குவிக்குமுகமாக ஈழமுரசு பெண்கள் பகுதியினரால் நடாத்தப்படும்

# கவிதைப் போட்டி



இப் படத்தை உற்றுநோக்குங்கள்; தலைமுறை இடைவெளி கொண்ட இவ் இரு பெண்களுக்கிடையிலான எண்ணவோட்டத்தை கவிதையாக வடித்து, உங்கள் பெயர் முகவரியுடன் 20.05.98 இற்கு முன்பாக எமக்கு கிடைக்குமாறு அனுப்பி வையுங்கள். வெற்றிபெற்றவர்களுக்கான பரிசுகள் ஈழமுரசு நடாத்தும் 'இசைமுரசு' போட்டியின்போது வழங்கப்படும்.




# பெயர்வு

— குந்தவை —

படகில் இருந்தவர்களிடையே ஒரு வித மௌனம் இறுகியிருந்த எல்லோருமே அது இது என்று ஏதேதோ பேசி வந்தவர்கள்தான் சொல்லி வைத்தாற்போல அவ்வப்பொழுது இப்படி மௌனத்தில் மூழ்கிக் கொண்டன.

தங்கள் எல்லோரையும் இம்சைப்படுத்துவது ஒரே மாதிரியான கவலைதான் என்பது சிவரஞ்சனிக்குத் தெரிந்திருந்தது.

விட்டு விட்டு வந்த வீடு. வாசல், தோட்டம் துரவு.

அவர்களும் கொட்டிலில் கட்டித் தூக்கியிருந்த வெங்காயத்தை அப்படியே விட்டு விட்டு வந்துவிட்டார்கள். அந்த வெங்காயத்தை கிண்டியவுடனேயே விற்றிருக்கலாம் சில வண்டிக்காரர்கள் தோட்டத்திற்கே வந்து கேட்டார்கள் விலை சரியாக அமையவில்லை என்று கொடுக்கவில்லை. அவர்கள் கேட்ட விலைக்கே கொடுத்திருந்தால் இதுவரை செலவழித்த காசிற்கு மட்டும்தான் கண்டிருக்குமென்று மகேந்திரன் சொல்லிவிட்டான். பிறகு வீட்டிற்கு கொண்டுவந்து காயவைத்து, ஆள் வைத்து குந்து குந்தாக கட்டி கொட்டிலுக்குள் காற்றோட்டமாக தூக்கிக் கட்டி வைத்து மாசி முடிய விலை ஏறும் எனக் காத்திருந்தது, ஆனால் மாசி முடியமுன்பாக சண்டை வந்துவிட்டது.

எல்லாவற்றையும் அப்படியே போட்டது போட்டபடி விட்டு ஓடி வந்தாகி விட்டது. டிராக்டர் பிடித்து உழுது, அடி உரமிட்டு வெங்காயம் நட்டு மூன்று நாளுக்கொருமுறை மிஷின் பிடித்து நீர் இறைத்து, அடிக்கடி மருந்தடித்து... இரு பத்திஐந்து தறை வெங்காயம் எல்லாம் வீணாகிப் போய்விட்டன. நினைக்க நினைக்க தாளவில்லை. வண்டிக்காரர்கள் கேட்ட விலைக்குக் கொடுத்திருந்தால், செலவழித்த காசாவது திரும்பக் கிடைத்ததே என்றிருக்கலாம். பட்ட சிரமம் ஒன்றுதான் நஷ்டமாயிருக்கும்.

படகின் மறு மூலையிலிருந்து ஒரு குழந்தை வீரிட்டுக் கத்துவது கேட்டது. தொடர்ந்து தாயின் சமாதானப்படுத்த முயலும் குரலும் கேட்டது.

சிவரஞ்சனி தன் மடியிலிருந்த அமுதனைத் தடவிக் கொடுத்தாள். அவனின் ஈரம் வழியுமுடலில் நீரை வழித்துவிடும் பொழுதெல்லாம், அவனுக்கு காய்ச்சல் கீச்சல் வரக்கூடாதே என்று உள்ளூர அங்கலாய்ப்பாக இருந்தது. அவனுக்கு காய்ச்சல் வந்து விட்டால் போய் இறங்கப்போகும் அந்த வசதிகள் குறைந்த கிளிநொச்சிப் பகுதியில் அவனுக்கு மருந்தெடுக்க எங்கே போவார்கள்? அங்கு இருக்கும் ஒரே அரச ஆஸ்பத்திரியிலும் மருந்துத் தட்டுப்பாடு என்று அவள் கேள்விப்பட்டிருந்தாள்.

கடல், தன் உடம்பை படகு கிழித்துச் செல்வதைப் பொறுக்காதது போல வாரித்தூற்றி இரைந்து கொண்டிருந்தது. படகில் இருந்தவர்கள் ஏதுமறியாதவர்களாய், ஒவ்வொரு வாரியடிப்பிற்கும் உடல் கொடுத்து நனைந்த வண்ணமிருந்தனர்.

முதலில் இந்த அலையடிப்பிற்குள் சிலிர்த்து, சந்தோஷமாகச் சிரித்த அமுதன் கூட இப்பொழுது சோர்ந்து விட்டிருந்தான். பசிக்களை வேறு. 'ஜிப்' போட்டு மூடிய தோற்பைக்குள் அரை ராத்தலுக்கும் குறைவான பாண் துண்டமிட்டு இருந்தது. நேற்று சாவகச்சேரி கடை ஒன்றில் அருமையாகக் கிடைத்த பண்டத்தின் பாதி. அவனுக்கு ஊட்ட முயற்சித்த பொழுதெல்லாம் 'வேண்டாம்' என்றுவிட்டான். கடைசியாக, கிளாலிக் கடற்கரையில், இந்த படகிற்காகக் காத்துக் கொண்டு, மேற்கு புற வானச் சிவப்பு கருமைக்குள் மூழ்குவதைப் பார்த்திருந்த வேளை அவனுக்குக் கொடுக்க முயன்றது. அவனுக்கென எடுத்ததை தாங்களும் சாப்பிட மனமில்லாமல் மீள பத்திரப்படுத்தி வைத்தது.

அமுதனுக்கும் பசிதான். இருமுறை கரைத்துக்கொடுத்த 'அங்கர் பால்மாவைத் தவிர இன்று முழுக்க வேறு ஒரு சாப்பாடுமில்லை. என்றாலும் பிடிவாதமும் அதிகம். பாண் என்றால் பிடிக்காது. அதுவும் சற்று காய்ந்து விட்டிருந்த பாண். காலையில் இடியப்பமும் சொதியும் என்றால்தான் நாலுவாய் தின்பவன். இப்பொழுது பிஸ்கட் இருந்திருந்தால் தின்றிருப்பான் சிலவேளை.

கொண்டு வந்த பிஸ்கட் பக்கெற்றுகள் தீர்ந்துவிட்டன. கடைசிப் பக்கெற்றும் மூன்றாம் நாள் மாலை நடந்தோய்ந்து சாலையோர மரத்தடியில், ஈரமில்லாத இடமாய் பார்த்து, கல்சேர்த்து காய்ந்த சருகு கூட்டி தேநீருக்காய் அடுப்பு மூட்டியவேளை முடிந்துவிட்டது.

'ஆமி நெருங்கிவிட்டது. எல்லோரும் ஊரை விட்டு வெளியேறி விடுங்கள்' என்று ஒலிபெருக்கியில் வந்த அறிவிப்பைக் கேட்டு நிராசையும் குமைச்சலும் போட்டியிட 'எப்படி எத்தினை தரமெண்டு ஓடுறது? நான் வரேல்லை. இஞ்சையே இருந்து குண்டு பட்டு சாகிறன் நீங்க பிள்ளையைத் தூக்கிக்கொண்டு போங்கோ' என வீம்பு காட்டி உட்கார்ந்து விட்ட பொழுது, மகேந்திரன் அவசரமாய் வெளியே போய் காலியாக்கப்பட்டு, பூட்டப்பட்டுக் கொண்டிருந்த கடைகளிலிருந்து ஏதோ கிடைத்தவற்றை தேயிலை, சீனி, பால்மா என வாங்கி வந்த பொழுது அவற்றோடு இந்த பிஸ்கட் பக்கெற்றுகளுமிருந்தன. வந்தவன் 'அக்கம் பக்கமெல்லாம் வீடுகளைப் பூட்டி விட்டு, வீதியில் இறங்கி விட்டார்கள்' என்று சொன்ன பின்தான் அவள் பரபரப்படைந்தாள் பெட்டிகள் அடுக்கி இடைவெளியில் சோறாக்கி சாம்பார் போல் ஒரு பருப்புக் குழம்பு வைத்தாள். மத்தியானம் சாப்பிட்டதாகப் பெயர் பண்ணி விட்டு. மீதியை தூக்குச் சட்டியில் போட்டு எடுத்துக்கொண்டாள்.

அந்த உணவு, அடுத்தநாள் மதியம் வரை வந்தது. ஒரு பூட்டிய கடையின் முன்பாக, தட்டி இறக்கிய கூரையின் கீழிருந்து கடைசி கவளங்களை உண்டனர். அமுதன் அப்பொழுதும் அந்த சோற்றைத் தின்னவில்லை.

அடுத்தநாள், யாரோ தோசை சுட்டு விற்கிறார்கள் என அறிந்து முண்டியடித்துப்போய், ஒரு கிடுகு கூரைக்குள் 'தோசை' என்ற பெயரில் ஒரு கிழவி சுட்டு விற்றுக்கொண்டிருந்த கோதுமை மாக் கரைசலை, ஐம்பது ரூபாய் கொடுத்து வாங்கிய பொழுதும், அதில் இரண்டு விள்ளல்தான் தின்றான்.

பிஸ்கட் முடிந்தபின் 'அங்கர்' பால் மாவைத்தான், பிளாஸ்க் நீரில் கரைத்துக்கொடுத்து வந்தாள். இப்பொழுது அதுவும் முடிந்துவிட்டது.

இந்த பாண் ஒன்றுதான் உள்ளது இப்பொழுது.

படகில் இருந்தவர்கள் இப்பொழுதும் அமைதியாய்த்தானிருந்தனர்.

என்ஜினின் உறுமல் சத்தமே பெரிதாய் கேட்பது போலிருந்தது. படகின் இருபுறமும் திரண்டு மோதும் அலை நுரைகளின் கொதிப்பும் தள தளப்பாய் கேட்டுக்கொண்டிருந்தது.

தடையேதுமின்றி கடல்காற்று வந்து வீசிக்கொண்டிருந்தது. அவள் கண்களை ஆயாசத்துடன் மூடிக்கொண்டாள்.

மூடிய கண் திரைக்குள் மனிதர்கள் ஊர்ந்தனர். தெருவை அடைத்துக்கொண்டு மூட்டை முடிச்சுக்களோடு, குழந்தை குட்டிகளை இழந்தோ, சுமந்தோ கொண்டு குடும்பம் குடும்பமாக



நகரும் மக்கள் மழைக் கம்பிகளுக்கூடாக மங்கலாகத் தெரிந்தனர். சேற்றையும் சகதியையும் தாண்டி நடந்தனர்.

நடக்கையில் தான் பட்ட அவஸ்தையும் கண் முன் தெரிந்தது. பாளம் பாளமாய் பிளந்துகொண்ட கால்விரல் இடுக்குகளில் சேறும் சகதியும் அப்பி தாங்க முடியாத எரிவைத் தர, ஒரு கையில் அமுதனைத் தூக்கி, மறு கையில் பாரமேத்திய சைக்கிள் ஹாண்டிலைப்பிடித்து நடக்கும் கணவனின் பின்னால் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் உயிர் போய் வரும் வேதனையைத்தர, தன் உடம்பையே தான் இழுத்துக் கொண்டு நடந்த அவள்.....

கண்களைத் திறந்து விரிய வைத்துக்கொண்டாள். இனி கண்களை மூடுவதில்லை என்ற நினைப்போடு, கடல் ஆகாயம் என்று பார்க்கத் தொடங்கினாள். கடல் எதிரே கருமையாய், கெட்டியாய் தெரிந்தது. கடலிலிருந்து எழுந்தது மாதிரியான வானம் மேலே கவிந்து கிடந்தது. தேய் நிலாக் காலத்து லேசான வெளிச்சத்தில் சாம்பல் கலந்த மேகம் நடு வானமெங்கும் பரவித் தெரிந்தது, மேவாயை நிமிர்த்தி அதையே பார்க்கையில் அது தாழத் தொடங்கி அசைபாது கண்ணை நிறைத்தது.

இந்த வானக் கருமைப் பின்னணியில் ஒரு ஹெலிகாப்டர் சிவப்பும் மஞ்சளுமாய் சீறிக் கொண்டு மேலே வந்தால் எப்படியிருக்குமென கற்பனை ஓடியது.

வீட்டை விட்டு வெளியேறிய அன்றிரவு ஒரு பெரிய மரத்தடியின் கீழ் தங்கியிருந்தபொழுது வான இருள்மையில் சிவப்பாய் கோடிட்டு, வடக்குப் புறமாக ஹெலியோ வேறெதுவோ, சீறிக்கொண்டு தீங்கங்குல்களைக் கொட்டித் தீர்த்ததை நினைத்துக் கொண்டாள். சுற்றிச் சுற்றி வந்து அதுமீள மீளச் சுட்டது.

அதன் இலக்கு தாங்களில்லை என்று நன்கு தெரிந்திருந்தாலும் அதைப் பார்த்துக் கொண்டிருக்கையில் ஒருவித அழகுணர்வு கலந்த அச்சம்.

அது போன பின்பு மரத்தடியில் இருக்கப் பயந்து பின்னாலிருந்த காம்பவுண்ட் சுவர் கதவைத் தள்ளிக்கொண்டு ஒரு வீட்டிற்குள் போனார்கள். வீட்டிற்குள் படுக்க இடமிருக்கவில்லை. நிறையச் சனங்கள், வெளி முற்றத்தில் பெட்ஷீட் விரித்துப் படுத்தார்கள். ஆனாலும் விமானச் சத்தம் நெருங்கிக் கேட்ட ஒவ்வொரு முறையும் எழுந்து, அமுதனைத் தூக்கி, பெட்ஷீட்டை உருவிக்கொண்டு வீட்டுச் சுவரோடு மறைவாய் ஒண்ட வேண்டியிருந்தது. அன்றிரவு நித்திரை என்பதே இல்லை.

அன்று அவர்களைக் கண்டு கொள்ளாமல் போன ஹெலிகாப்டர். இப்பொழுது வந்தால் சும்மா போகாது. கட்டாயம் பதித்தெழுந்து குண்டு வீசி விட்டுத் தான் போகும் அல்லது சாய்வாக நின்று, ஐம்பது 'கலிபர்'களால் 'பட பட' என அடிக்கவும் கூடும்.

எல்லோரும், குண்டு பட்டுச் சிதறியவர்கள் போக, மற்றவர்கள், அரண்டு புரண்டு கொண்டு கடலிற்குள் விழ வேண்டியதுதான்.

ஒரு இரவு, மூன்றாம் நாளாயிருக்கலாம். ஒரு கோயில் மண்டபத்தில் படுத்திருந்த பொழுது, இப்படித்தான் அரண்டடித்துக்கொண்டு எழும்பினார்கள்.

கோயில் கிணற்றில் மேல் கால் கழுவி, பித்த வெடிப்பு உபாதையை தைலம் போட்டு இதப்படுத்தி, கோயில் மண்டபத்தில் கால் நீட்டிப் படுக்க இடம் கிடைத்து, 'கோயில் மேல் குண்டு போட மாட்டார்கள்' என்ற நினைவு பாதுகாப்புத்தர, படுத்தவள்தான்.

செவிப்பறையில் வந்து ஏதோ மோதியது மாதிரி, திடுக்கிட்டு கண் விழித்த பொழுது சுற்றியிருந்த சனங்களெல்லாம் கூப்பாடு போட்டுக்கொண்டிருந்தார்கள்.

என்ன எது என்று தெரியாத தூக்க மயக்கத்தில் அமுதனைத் தடவி எடுத்துக்கொண்டு, அவளும் எழுந்தோட முற்பட்டு

பிறகு தெரிந்தது, பக்கத்து வீடொன்றில்தான் ஷெல் வந்து விழுந்ததென்று

மீள படுத்திருந்த இடத்திற்கு வந்த பொழுது, அந்த இடம் போய்விட்டிருந்தது. சுற்றி வர நீட்டிக்கொண்டு படுத்து விட்டவர்களோடு சண்டைபிடிக்க முடியுமா என்ன? கிடைத்த கொஞ்ச இடத்தில் அமர்ந்து அமுதனை மடியில் வைத்துக்கொண்டு மீதி இரவைக் கழித்தாள்.பக்கத்து வீட்டில 'ஷெல்' விழுந்ததினால் செத்துப்போன குழந்தையை நினைத்துக்கொண்டு.

அடுத்த நாளிரவும் அப்படித்தான் அவர்கள் படுக்க ஒரு பூட்டிய வீட்டின் போர்டிகோ வசதியாகத்தானிருந்தது. ஆனால் நடு இரவில் நல்ல மழை பிடித்துக்கொண்டுவிட்டது. தூக்கி, தூக்கி அடித்த சாரலில் படுத்திருந்த படுக்கை இடம் தொப்பலாகி விட்டன. பிள்ளையைத் தூக்கி தோளில் போட்டுக்கொண்டு நிற்க வேண்டியதாயிற்று.

பார்க்கப் போனால் வீட்டை விட்டு வெளியே வந்த பின், ஒரு இரவுகூட ஒழுங்காக நித்திரை என்ற ஒன்றில்லை. அதுவும் நேற்றிரவு ஒரு கண் மூடவில்லை.

படுக்கக் கிடைத்த இடம் ஒரு பள்ளிக்கூட மண்டபம். நித்திரை கொண்டிருக்கலாம் முடியவில்லை. வரும் வழியில் கைதடிப் பாலத்தைக் கடக்கையில் பாலத்தின் கீழ் நிறைந்திருந்த நீரில் மிதந்த குழந்தையின் உடல் சிற்றலைகளால் அலைப்புண்டது போல் அவள் நினைவிலும் அலைப்புண்டது. அதோடு கைப்பிடிச் சுவரோடு,· நாலு பேரின் கைத்தாங்கலுக்குள் திமிறிக் கொண்டு அரற்றிய அந்த தாயின் கதறல் பாவி! ஏன் இடுப்புக் குழந்தையைத் தவறவிட்டாள்? பாலத்தின் மேல் நடக்கையில் களைத்து விழுந்தாளோ? நெரிசலில் சிக்குண்டு கை தவறவிட்டாளா?

இதையே நினைத்து நினைத்து மாய்ந்த வேளையில்தான் விடியப்புறமாக அந்த தீர்மானம் உருவானது.

இத்தனை ஆபத்துக்களிடையே அமுதனை இங்கே வைத்திருக்க முடியாது. இப்பொழுது, வடக்கு கிழக்கு என்று யாழ்குடா நாட்டின் எந்தப் பகுதிக்கு ஓடினாலும் அங்கும் சண்டை தொடர்ந்து பின்னால் வரத்தான் போகிறது. அமுதனையும் கொண்டு நெடுக ஓடிக்கொண்டிருக்க முடியாது. அவனுக்குப் பாதுகாப்பு வேண்டும். அவனைப் பத்திரமாகப் பார்க்க வேண்டும்.

இதற்கு, யாழ்குடாநாட்டை விட்டு, கடல் நீரேரியைக் கடந்து போய்விடுவதுதான் உசிதமெனப்பட்டது. பெரு நிலப்பரப்பு இப்பொழுது அமைதியாக இருக்கிறது. இப்போதைக்காவது அங்கு சண்டை வராது.

இந்த முடிவு, திருப்தி தரவில்லைத்தான், மனத்தின் ஒரு மூலையில் ஏதோ குடைந்து கொண்டிருந்தது. இப்படி ஒரேயடியாக குடாநாட்டை விட்டு வெளியேறிவிட்டால், பிறகு எப்பொழுது திரம்பி வரமுடியுமோ?

விடிந்து, பாடசாலை மண்டபத்தைவிட்டு வெளியே வந்த பொழுது ஒரு ட்றக்ரரில் ஆட்கள் திணிய திணிய ஏறிக்கொண்டிருந்தனர். கிளாலிக் கடற்கரைக்குப் போக அவர்களுக்கும் வேறு ஒன்றும் நினைக்கத் தோன்றவில்லை ஏறிவிட்டார்கள்.

படகுப் பிரயாணம் மூன்று மணித்தியாலங்கள் எடுக்குமென்றார்கள். இன்னும் மூன்று மணித்தியாலங்கள் வரவில்லையா?

அதே நேரம் கரையே வரக்கூடாது என்றுமிருந்தது. இப்படியே, நீள கடலில் போய் கொண்டிருந்தால் போதுமென்றிருந்தது.

நேரம் ஆக, கரை

[தொடர்ச்சி 24ம் பக்கம்]

# ALPHA TELECOM





| | |
|---|---|
| Sri Lanka | 52P, 48P |
| India | 44P, 40P |
| Malaysia | 33P, 29P |
| Canada | 12P, 8P |
| Australia | 14P, 10P |

**UK 5P**

உங்கள்
உறவினர்கள், நண்பர்களுடன்
உரையாட குறைந்த கட்டண
தொலைதூர தொலைபேசி
சேவையை வழங்குவதில் மகிழ்ச்சி
அடைகிறார்கள்.



| | |
|---|---|
| France | 14p, 10p |
| Germany | 14p, 10p |
| Switzerland | 16p, 12p |
| Norway | 16p, 12p |
| Singapore | 23p, 19p |
| USA | 9p, 5p |

## ALPHA TELECOM

இணைப்புகளுக்கும், தொடர்புகளுக்கும்:
வேந்தன்: 0181 682 1141/ 0956 262684



# வெளிவந்துவிட்டன

# ரமியின்










RAMIY
RECORDS



# மாவீரர் கரப்பந்தாட்ட போட்டி
# சார்புறுக்கன் முதலாமிடம்

ஆறாவது ஆண்டாக தமிழ் மாணவர் அமைப்பின் ஜேர்மன் கிளையினரால் மாவீரர் வெற்றிக்கிண்ண விளையாட்டுப் போட்டிகளின் ஆரம்பப் போட்டியாக கரப்பந்தாட்டப் போட்டிகள் 04.04.98 சனிக்கிழமை ஜேர்மனி டோட்முண்ட் நகரில் நடாத்தப்பட்டன.

போட்டிகள் ஆரம்பமாவதற்கு முன்னர் தமிழீழ மண் மீட்புப் புனிதப் போரிலே வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கும், பொதுமக்களுக்கும் அமைதி வணக்கம் செலுத்தப்பட்டது. தமிழ் மாணவர் அமைப்பின் ஜேர்மனிக்கிளையின் பொறுப்பாளர் திருஇராஜசுந்தரம் அவர்களால் மங்கலவிளக்கு ஏற்றி வைக்கப்பட்டு போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டன.



ஒவர்கேம் போட்டியில் முதலாவது இடத்தையும், செற்றப்கேம் போட்டியில் இரண்டாவது இடத்தையும் பெற்ற சார்புறுக்கன் சலாம் விளையாட்டுக் கழக வீரர்கள்



செற்றப்கேம் போட்டியில் மூன்றாவது இடத்தைப்பெற்ற சுட்காட் ஐக்கிய தமிழர் விளையாட்டுக் கழக வீரர்கள்

இப்போட்டிகளில் பதினைந்துக்குத் மேற்பட்ட கழகங்கள் ஜேர்மனியின் பல பாகங்களிலிருந்தும் வந்து கலந்துகொண்டனர்.

இப்போட்டிகளில் ஓவர்கேம் ஆட்டத்தில் முதலாவது இடத்தை சார்புறுக்கன் சலாம் விளையாட்டுக் கழகமும், இரண்டாவது இடத்தை வாறன் டோவ் தமிழோசை மன்றம் வி.கழகமும், மூன்றாவது இடத்தை கேர்னெ இளந்தளிர் விளையாட்டுக் கழகமும் பெற்றுக்கொண்டன. சிறந்த விளையாட்டு வீரராக திரு. சிவகுருநாதன் இராசநாதன் (வாறன் டோவ் தமிழோசை ம.வி.கழகம்) தெரிவாகினார்.

செற்றப்கேம் ஆட்டத்தில் பங்குகொண்ட விளையாட்டுக் கழகங்களில் முதலாவது இடத்தை புறுக்சல் ஐக்கிய வி.கழகமும், இரண்டாவது இடத்தை சார்புறுக்கன் சலாம் வி.கழகமும், மூன்றாவது இடத்தை ஸ்ருட்காட் ஐக்கிய தமிழர் வி.கழகமும் பெற்றுக்கொண்டன. சிறந்த விளையாட்டு வீரராக திருவிஜயரஞ்சன் (புறுக்சல் ஐ.வி.க) தெரிவானார்.

இப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை தமிழீழ விடுதலைப் புலிகளின் ஜேர்மனிக்கிளையின் இணைப்பாளர் திரு.ராஜன் அவர்கள் வழங்கி கௌரவித்தார். இறுதியாக இப்போட்டிகளைச் சிறப்பாக நடாத்தி முடிக்க உறுதுணையாகவிருந்த போட்டியாளர்களுக்கும், பார்வையாளர்களுக்கும், உதவிபுரிந்தவர்களுக்கும் தமிழ்மாணவர் அமைப்பினரால் நன்றி கூறப்பட்டு போட்டிகள் இனிதே நிறைவடைந்தன.

# மாவீரர் வெற்றிக்கிண்ணம்–98
# நீச்சல் போட்டி

மாணவர் அமைப்பு ஜேர்மன் கிளையினர் நடாத்திவரும் 6-வது ஆண்டிற்கான மாவீரர் வெற்றிக்கிண்ண விளையாட்டுப் போட்டியின் நீச்சல்போட்டி 25.04.98 சனிக்கிழமை கேர்ன் (Herne) நகரத்தில் சிறப்பாக நடைபெற்றது.

போட்டிகள் ஆரம்பமாவதற்கு முன்னர் மண்மீட்புப் போரிலே தம் இன்னுயிரை ஈர்ந்த மாவீரர்களுக்கும் பொதுமக்களுக்கும் அமைதி வணக்கம் செலுத்தப்பட்டது. மங்கல விளக்கினை தமிழ் மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் திரு. ராஜசுந்தரம் அவர்கள் ஏற்றி போட்டிகளை ஆரம்பித்து வைத்தார்.

இப் போட்டிகளில் தமிழாலயங்களில் இருந்து 7 தொடக்கம் 17 வயது வரையான 70 போட்டியாளர்கள் கலந்துகொண்டு 50, 100 மீற்றர்களில் முன்நீச்சல், பின்நீச்சல், நெஞ்சு நீச்சல் என மூன்று நீச்சல் முறைகளில் நீந்தி போட்டியைச் சிறப்பித்தனர்.

போட்டியில் அதிகப்படியான புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்தை வூப்பெற்றால் தமிழாலயமும், இரண்டாவது இடத்தை கம்பேர்க் தமிழாலயமும், மூன்றாவது இடத்தை டெயாபுஸ் தமிழாலயமும் பெற்றுக்கொண்டன.



இறுதியாகப் பார்வையாளருக்கென நடாத்தப்பட்ட போட்டியில் ஐந்து வயதுச் சிறுமியான மெயாபுஸ் நகரைச் சேர்ந்த தீபிகா ஜெயராசா குறைந்த நேரத்தில் நீந்தி முதலாவது இடத்தைப் பெற்று எல்லோருடைய பாராட்டுதல்களையும் பெற்றுக்கொண்டார்.

இரண்டாவது இடத்தை வாறன்டோவ் நகரைச் சேர்ந்த கௌசிகன் சிவலிங்கமும் மூன்றாவது இடத்தை வாறன்டோவ் நகரைச் சேர்ந்த பிதுரன் தில்லைநாதனும் பெற்றுக்கொண்டனர்.

# புகலிட நிகழ்வுகள்

## 'மண்' சஞ்சிகையின் 8வது ஆண்டு நிறைவு

### போட்டி முடிவுகள்

**மாணவர்கள்**

1.-10 வயதிற்குட்பட்டவர்கள்: வர்ணம் தீட்டுதல் போட்டி
- 1-வது பரிசு- செல்வன். கஜிநாத் தவம் - Ennepetal
- 2-வது பரிசு- செல்வி: ரஜினா தர்மராசா - Krefeld
- 3-வது பரிசு- செல்வி. தர்சிகா தர்மசோதிராசா - Essen

2.- 10 வயதிற்குட்பட்டவர்கள்: உறுப்பெழுத்துப்போட்டி
- 1-வது பரிசு- செல்வி: துஷ்ஷா சிறிதரன் - Olsberg
- 2-வது பரிசு- செல்வன்: துசீபன் அருள் நீதன் - Brilon
- 3-வது பரிசு- செல்வி: செப்வியா சிவலோகேஸ்வரன் - Goslar

3, 10-15 வயதிற்குட்பட்டவர்கள்: வர்ணம் தீட்டுதல் போட்டி
- 1-வது பரிசு- செல்வி: கார்த்திகா தர்மகுலசிங்கம் - Oberhausen
- 2-வது பரிசு- செல்வி: அனுஷா நாகேஸ்வரன் - Gondelsheim
- 3-வது பரிசு- செல்வி: சுபாசினி அரிச்சந்திரன் - Duisburg

4. 10-15 வயதிற்குட்பட்டவர்கள்: உறுப்பெழுத்துப்போட்டி
- 1-வது பரிசு -செல்வி: ஆன்லினோலினி நடேசன் - Havixbeck
- 2-வது பரிசு- செல்வி: கனிமொழி பவானந்தராசா - Alsdorf
- 3-வது பரிசு- செல்வி: கனிஸ்ரா செல்வராசா - Selm

**வாசகர்கள்**

1. கவிதைப்போட்டி
- 1-வது பரிசு- திரு. அ. வேணுகோபாலன் - Mühlacker
- 2-வது பரிசு- திருமதி. சிவகாமசுந்தரி கணேசநாதன் - Goslar
- 3-வது பரிசு- திருமதி. கிருஸ்ணதேவி அரிச்சந்திரன் - Wildemann

2. சிறுகதைப்போட்டி
- 1-வது பரிசு- திருமதி சத்தியதேவி சத்தியநாதன் - Grevenbroich
- 2-வது பரிசு- திருமதி ஜெயா நடேசன் - Havixbeck
- 3-வது பரிசு- செல்வன் ஜெயன் சிவநாதன் - Danemark

3. கட்டுரைப்போட்டி
- 1-வது பரிசு- திருமதி ஜெயா நடேசன் - Havixbeck
- 2-வது பரிசு- திரு. எஸ் தர்மலிங்கம் - Kassel
- 3-வது பரிசு- திருமதி நகுலா சிவநாதன் - Selm

போட்டிகளில் பரிசு பெற்ற மாணவர்கட்கும், வாசகர்கட்கும் பரிசுப்புத்தகங்கள் காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கப்படும்.

- ஆசிரியர்

'மண்' சஞ்சிகையின் 8-வது ஆண்டு நிறைவுப் போட்டிகளில் ஆர்வத்துடன் கலந்துகொண்ட மாணவ மணிகளுக்கும், வாசகர்களுக்கும் 'மண்' சஞ்சிகை மனமார்ந்த நன்றிகளை தெரிவிக்கின்றது. தொடர்ந்தும் எழுதுங்கள். 'மண்' சஞ்சிகை உங்களுக்கு துணைநிற்கும்.

தேசியத் தலைவர் விடை கொடுக்க
பகை முடித்த கரும்புலிகளின் கதை

தமிழீழ தளத்தில் உருவாக்கம் பெற்ற முழு நீளத்திரைப்படம்

நிதர்சனம் ஆதரவுடன்...
இம்ரான் பாண்டியன் படைப் பிரிவு வழங்கும்

பொ. தாசனின்

தேசத்தின் புயல்கள்

உண்மைச் சம்பவத்தைத் தழுவியது

இரு காட்சிகள் 10.05.98 ஞாயிறு
பிற்பகல் 2.30 மணி, 7.00 மணி
Volkshaus, Stauffacherstr 60Zurich

பலாலி படைத்தளத்தினுள் இருளோடு இருளாக ஊடுருவி கரும்புலிகள் நடாத்திய தாக்குதல்களை உயிர்ப்புடன் வெளிப்படுத்தும் அதி உன்னத திரைக் காவியம்

தமிழீழ விடுதலைப் புலிகள் (சுவிஸ் பணியகம்)

அகன்ற திரையில் கரும்புலிக் காவியம்

# அன்னை பூபதியின் 10ம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு

அன்னையர் திலகம் பூபதி கணபதிப்பிள்ளை அவர்களின் நினைவு நிகழ்வு இத்தாலி ஜெனோவா நகரில் 19.04.98 ஞாயிறு பிற்பகல் 15.30 மணிக்கு ஆரம்பமானது.



தமிழீழ தேசத்தை வணங்கிய பின், தமிழீழ விடுதலைப் புலிகளின் இத்தாலிப் பணியகப் பிரதிநிதி திரு. து. மேதா அவர்கள் அன்னையின் ஈசைச் சுடரை ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து லிகூரியா தமிழ்ச் சங்கம் கலைப்பிரிவைச் சேர்ந்த செல்விகள் பாமினி சீனிவாசன், சிறீப்பிரியா சீனிவாசன் மலரால் அன்னையின் பாதங்களுக்கு வணக்கம் செலுத்திச் சென்றனர்.

தொடர்ந்து பூபதி அம்மாவின் வீரத்தைப் போற்றும் கவிதை ஒன்றை திலீபன் தமிழ்பாடசாலை மாணவன் செல்வன் மரியசீலன் விநோத் வழங்கினார். அவரைத் தொடர்ந்து 'கங்கை நதியோரம்...' என்ற பாடல் வரிகளுக்கு அபிநயத்தால் உயிர் கொடுத்தார் திலீபன் தமிழ்பாடசாலை மாணவி செல்வி பிரசா மகேந்திரராஜா. அதனையடுத்து லிகூரியா தமிழ்ச் சங்கக்கலைப் பிரிவைச் சேர்ந்த செல்விகள் பாமினி, சிறீப்பிரியா 'பாரில் தமிழன் படும் வேதனைகள்...' என்ற பாடலுக்கு அபிநயம் கொடுத்தனர். தொடர்ந்து 'மானம் ஒன்றே வாழ்வெனக் கூறி வழியில் நடந்தான் மாவீரன்' என்ற தமிழீழ கானத்திற்கு நேர்த்தியாக அபிநயம் புரிந்தார், திலீபன் தமிழ் பாடசாலை மாணவி செல்வி ருசாந்தி செல்வநாயகம். அடுத்து அன்னை பூபதி அவர்கள் பற்றிய கவிதையை நிகழ்த்திச் சென்றார், செல்வி பிரசா மகேந்திரராஜா. அடுத்து 'எங்கள் தேசத்திலே இடிவிழுந்தது 'என்ற பாடலுக்கு அபிநயம் வழங்கினார் செல்வி பாமினி சீனிவாசன். தொடர்ந்து 'எதிரிகளின் பாசறையைத் தேடிப் போகிறோம்' என்ற பாடலுக்கு அபிநயம் வழங்கினர் செல்விகள் ருசாந்தி, பிரசா, சர்மிளா. தமிழீழ கானங்களின் வரிகளுக்கு அழகுற அபிநயம் புரிந்த சிறார்களை லிகூரியா கலைப் பிரிவைச்சேர்ந்த செல்வி பாமினி சீனிவாசன், திருமதி பவானி கல்யாணகுமார், செல்வி சிறீப்பிரியா சீனிவாசன், திரு.மகேந்திரராஜா ஆகியோர் நெறிப்படுத்தினர்.



அடுத்து திருமதி மது ஆனந்தராஜா அவர்கள் பூபதி அம்மாவின் அறப்போரின் மேன்மை பற்றி கவிதை வழங்கினார்.

தொடர்ந்து லிகூரியா தமிழ்ச் சங்கம் கலைப்பிரிவினர் வழங்கிய வீணை இசை இடம்பெற்றது. தமிழீழப்பாடல்கள் உயிர்ப்புடன் வீணைநரம்புகளில் தவழ்ந்து வந்தன. அடுத்து 'பத்து ஆண்டுகளின் பின் அன்னை பூபதி எம்முடன்...' என்ற விவரண உரை நிகழ்வு திலீபன் தமிழ் பாடசாலை மாணவர்களால் மேடையேற்றப்பட்டது. இந் நிகழ்வை பாடசாலை ஆசிரியர் திருமதி நிர்மலா ரவீந்திரன் நெறிப்படுத்தினார்.

அடுத்து அம்மையார் அனுப்பிய தூதுவர்கள்... என்ற இசை நாடகம் மேடையேறியது. நப்பாலோ தமிழீழக் கலைஞர்களின் முயற்சியில் இந்நாடகம் உருவானது. இந்நாடகத்தை வைரவன் சண்முகநாதன் அவர்கள் நெறிப்படுத்தினார்.

தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் பணியகப் பிரதிநிதி து.மேதா அவர்கள் சிறப்புரையாற்றினார்.

அவரைத் தொடர்ந்து இறுதி நிகழ்வாக ஜெனோவா வாழ் தமிழ் கலைஞர்கள் 'விடியும் வேளை' என்ற நாடகத்தை மேடையேற்றினர். இந்நாடகத்தை லிகூரியா தமிழ்ச்சங்க கலைப்பிரிவுப் பொறுப்பாளர் அருள் ஆனந்தராஜா நெறிப்படுத்தியிருந்தார். ஆனாலும் நேரம் போதாமையால் நாடகம் இடையில் நிறுத்தப்பட்டது. நன்றி அறிவித்தலுடன் இரவு 8.00 மணிக்கு நிகழ்வுகள் நிறைவு பெற்றன.

# பாசல் நகரில் முத்தமிழ் விழா

சுவிசின் உற்பத்திநகராக விளங்கும் பாசல் நகரில் 19.04.98 அன்று தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், பாசல் தமிழ் நீலப் பறவைகள் விளையாட்டுக் கழகமும் இணைந்து முத்தமிழ் விழா ஒன்றினை நடாத்தியிருந்தன. மங்கல விளக்கேற்றல், அமைதி வணக்கம் நிகழ்வுகளுடன் விழா ஆரம்பமானது. பாசல் தமிழ்ச் சிறுவர் பாடசாலை மாணவ மாணவியரின் 'தமிழீழத்தாயின் பிள்ளைகள் நாங்கள்...' என்ற பாடலானது, எம் வருங்கால சந்ததியின் உள்ளத்தில் எழுகின்ற எழுச்சியையே காட்டியது எனலாம்.

அடுத்து, சிறப்புச் சொற்பொழிவாற்றிய திரு. அல்பிரட் அவர்களின், தாயக விடுதலைக்கு புலம் பெயர்ந்த தமிழர்கள் செய்ய வேண்டிய கடமைகளை எடுத்துரைத்தார். இவ் விழாவில் லுசேர்ன், அங்கயற்கண்ணி இசைக்குழுவில் விடுதலைக்கானங்களும், பாசல் கலாநிகேதன் நாட்டியக் கல்லூரி மாணவிகளினது நடனங்களும் விடுதலை உணர்வை ஊட்டி நின்றது. சிறுபிள்ளைகளை வைத்து திருமதி தர்மராஜா அவர்களும் தரமான நடனத்தைக் கொடுத்திருந்தார். தமிழ் நீலவிளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த திரு. கோபியுடனான நேர்காணலும் இடம்பெற்றது. 'பற்று' என்ற தலைப்பில் மதம், குடும்பம், மண் ஆகிய மூன்று விடயங்கள் கருத்துமோதலுக்கு எடுக்கப்பட்ட போதும் மண் மீது பற்றுக்கொண்டால் எல்லாமே ஆனந்தமாகிவிடும் என்ற தீர்ப்பு எஞ்சியது. முத்தமிழ் விழாவின் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ மாணவியரின் பேச்சும் இடம்பெற்றிருந்தது. சில வியாபார ஸ்தாபனங்களும் தனிமனிதர்களும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு நன்கொடைகளை வழங்கியிருந்தார்கள். இறுதியாக போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ மாணவியருக்கான பரிசளிப்புடன் விழா முடிவுற்றது.

# ஜேர்மனி இந்து இளைஞர் பேரணி
## தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு நிதி வழங்கியது

ஜேர்மனியில் கவுஸ்நோகா (Hausnoah) நகர இந்து இளைஞர் பேரணி ஜேர்மனி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு ஆயிரம் மார்க் பணத்தை வழங்கியுள்ளது. கட்டிங்கன் சிறீ வரசித்திவிநாயகர் ஆலய உற்சவத்தை நடாத்தும் செலவைக் குறைத்து அதனை தமிழீழ மக்களின் துயர் துடைப்பிற்கென தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு மேற்படி இளைஞர் பேரணி வழங்கியுள்ளது.

தமிழ் இளைஞர்களின் இந்த முன்மாதிரி ஏனைய இந்து இளைஞர் கழகங்களையும் விழிப்படையச் செய்துள்ளது. புலம்பெயர் நாடுகளில் ஆலயங்களுக்குச் செலவிடப்படும் பணத்தின் ஒரு பகுதி தமிழீழத்தின் துயர் துடைப்புக்கு பயன்படுத்தப்பட வேண்டும் என பரவலான கருத்து தெரிவிக்கப்படுகின்றது. கவுஸ்நோகா நகர இந்து இளைஞர் பேரணியின் முன் மாதிரி பாராட்டப்படத்தக்கது.

# முன்ஸ்ரர் தமிழர் கலை கலாச்சார விளையாட்டுக் கழகத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும்

மேற்படி கழகத்தின் பொதுக் கூட்டம் 14.03.1998 அன்று மாலை 3.30மணிக்கு கழகத் தலைவர் திரு.ப. பரமேஸ்வரன் அவர்கள் தலைமையில் 48147 munster kinderhauser str st.110இல் அமைந்துள்ள கழகமண்டபத்தில் நடைபெற்றது.

முதலில் மறைந்த மாவீரர்களுக்கும் மக்களுக்கும் 2 நிமிட மௌன அஞ்சலி இடம்பெற்றது. இக்கூட்டத்திற்கு பெருந்திரளான பொதுச்சபை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். ஜேர்மனியில் தமிழர்களைத் திருப்பி அனுப்புவதை எதிர்த்து கழகம் பலவழிகளில் செயற்பட்டு வந்திருக்கிறது மேலும் எவ் வழிகளில் செயலாற்றலாம் எனவும் பொதுச்சபையில் ஆராயப்பட்டது. கழக யாப்பும் சபையில் வாசிக்கப்பட்டது.

அடுத்து புதிய நிர்வாகசபையைத் தெரிவு செய்வதற்காகத் தேர்தல்குழு அமைக்கப்பட்டது. இதில் திரு.சு.பரமானந்தன், திரு. க. ஜெஜகுமார், திருமதி.பு.சண்முகரத்தினம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இவர்கள் மூவரின் தலைமையில் புதியநிர்வாகசபை தெரிவாகியது. புதிய நிர்வாக சபையினரின் பெயர் விபரம் வருமாறு, தலைவராக திரு.ப பரமேஸ்வரன் அவர்கள் மூன்றாவது தடவையாக ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டுள்ளார். செயலாளர் திரு. தம்புவரதராஜன், பொருளாளர் திரு. நா. தெய்வேந்திரம், உப.தலைவர் திரு. அருள்ராஜ், உப செயலாளர் திரு.பா.நிதர்சன், கணக்குப் பரிசோதகர் திரு.செ நாகேஸ்வரன், எழுத்தாளர் திரு.சு. வசந்தராஜன், கலை கலாச்சாரத்துறை உறுப்பினர்களாக திருமதி பொ. யோகநாதன், திருமதி லோ. சண்முகலிங்கம், விளையாட்டுத்துறை உறுப்பினர்களாக திரு இ. ஸ்ரீரங்கராஜா, திரு. இ ராஜ்குமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். கழக நடைமுறைகளைக் கண்காணிப்பதற்காக அமைக்கப்பட்ட கண்காணிப்பாளர்கள் குழுவில் திரு. சி. இரவீந்திரநாதன், திரு.ச.சிவலிங்கம் திரு.ததிப்பாகன் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். இதையடுத்து நன்றியுரையுடன் கூட்டம் நிறைவு பெற்றது.


# புனித சூசையப்பர் திருவிழா

எதிர்வரும் 10.05.98 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு புனித சூசையப்பரின் திருவிழாத்திருப்பலி

Bern. Tauben Str. 4 இல் அமைந்துள்ள கத்தோலிக்க தேவாலயத்தில் நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

— பேர்ண் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம்

# யாழ்முரி 98 விருதுப் போட்டி

புலம்பெயர் தேசத்தில் வாழும் இசைக் கலைஞர்களே இலைமறை காயாக இருக்கும் உங்கள் இசைத் திறமைகளை வெளிக்கொண்டுவர ஓர் அரிய சந்தர்ப்பம்.

ஆம் எதிர்வரும் 12.07.98 அன்று சுவிசில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு சுவிஸ் பணியகம் நடாத்தும் யாழ்முரி 98 விருதுப் போட்டியில் பங்குகொள்வதன் மூலம் உங்கள் இசைத் திறமைகளை தமிழ் உலகிற்கு வெளிப்படுத்துங்கள்.

மேலதிக விபரங்களுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

- சுவிஸ் பணியகம்
011-2733407 / 055-6432369




## தேடியவை

# மா-நரக கூட்டம் (வி)மானமும்; கம்பளியும்

'அன்று... விட்டேன்... கொண்டலடி' என்று நரியார் ஒருவர் ஒப்பாரி வைத்ததைப் போல யாழ்ப்பாண மா-நரக முதல் அம்மணி ரோஜினியார் தனது முதற் கூட்டத்திலேயே படாதபாடு பட்டாராமே அது உண்மையா ஐயா'

இவ்வாறு கேட்டுக்கொண்டே கண்களை வெட்டிச் சிமிட்டியபடி வந்தார் எதுகைப் பெருமகனார்.

ஓ..நீர்..அந்த உருப்படாதவர்களின் வெட்டிக் கதை களை கேட்கிறீரா? உண்மைதானைய்..யா. யாழ். மா-நரக சபையின் முதலாவது குழப்பம் அது [கூட்டமாம்] 15 வருடங்களுக்குப் பின்னர் கடந்த 26-ம் திகதி ஆ...ரம்பமானது. 1983-ம் ஆண்டு 5-ம் மாதம் 31-ம் திகதி [சுருக்கமாக எழுத மாட்டீரோ?] நடைபெற்ற மா-நரக சபையின் கடைசிக் கூட்டத்திற்குப் பின்னர் நடந்த கூட்டம் இதுவாகும். இக் கூட்டத்தில் டக்-தேவாங்கானவரின் படிமாத்தான்கள் கலந்துகொள்ளா மல். [இன்னும் சத்தியப் பிரமாணம் எடுக்கவில்லையாம்] ஏனைய 'குலுக்களின்' படிமாத்தான்கள் கலந்து கொண் டாலும் முதற் கூட்டமே குழப்பமாகிவிட்டது.

தந்தை செல்வாவின் பெயரினை யாழ்.நகரில் எந் தெந்த இடங்களுக்கு சூட்டுவதென்ற விடயத்தில் இவர்கள் மயிர்பிடி சண்டை பிடிக்க ஆரம்பித்துவிட்ட தால் முதல்வர் ரோஜினி யாருக்கு சீச்சீ... என்று போய் விட்டு நாமாவது நாலு கிறுக்கலை கிறுக்குவோம் வாரும் என்று கூறிவிட்டு நகர்ந்தார் மோனையார்.

'அன்று விட்டேன் கொண்டலடிக்கான' கொசுறு கதை:

ஒரு ஊரிலே ஒரு நரி இருந்ததாம். அந்த நரியா ருக்கு சரியான பசியெடுத்த வேளையில் கொட்டிக் கொள்ள ஒன்றுமே கிடைக்காததால் கொண்டல் மரத் தடியிலே படுத்திருந்து யோசித்த வேளையில் நீள நீள மாக காய்த்துத் தொங்கும் கொண்டற் காய்களைக் கண்டு 'ஆஹா' இவற்றை தின்று பசியாறுவோம் என எண்ணியது மட்டுமல்ல, அவற்றினைத் தின்றும் விட் டாராம். வயிற்றுள் போன கொண்டற் காய்கள் சும்மா இருக்குமோ அவை தமது காய்[கை] வரிசையை காட்டத் தொடங்கிவிட்டன.

நரியாருக்கோ வயிற்றோட்டம் தாங்க முடிய வில்லை. களைத்துப்போன நரியாரோ போவோர் வருவோரையெல்லாம் பார்த்து 'அன்றுவிட்டேன் கொண்டலடி' என இராகமெடுத்து பாடிவிட்டாராம். [உமது ஊரில் நரி பாடுமோ? தருவதே அறுவை விச யங்கள் அதற்குள் கொசுறுக் கதை வேறு உம்மை... அப் படி... யே நற...நற.]

★★★

சிங்கக்கொடியோரின் தேசீய விமான சேவை யின் பங்குகள் எண்ணெய்கார நாடொன்றுக்கு தாரை வார்த்துக்கொடுத்ததன் பின்னர் [வி]மானம் போச்சே... [வி]மானம் போச்சே என 'சி' னா 'அ' னா வாதிகள் எல்லாம் 'லபோ லபோ' என்று கத்தினாலும் ஏ[ஓ]ப்-பந்தம் கச்சிதமாக முடிக்கப்பட்டுவிட்டது.

இந்த விற்பனை முடிக்கப்பட்ட மகிழ்வில் விமான சேவையின் பெரி..ய்..ய படிமாத்தான் குடும்பத்தோடு வெளிநாடொன்றுக்குச் சென்றுவிட்டு [முதல்வகுப்பு இலவச பயணம்] திரும்பிய வேளை அதே வகுப்பில் பய ணித்த வெளிநாட்டுக்காரர்கள் தனது விமான சேவைக்கு கொடுத்த 'வழிபாட்டினை' கண்ணாரக் கண்டுள்ளார்.

அவரின் போதாத, காலம் அந்த வழிபாட்டுக் காட்சி யினை அதே வகுப்பில் பயணஞ்செய்த வெளிநாட்டவ ரின் நீதி+ நிதி அமைச்சர் பீரிசாரும் நேரடியாகக் கண்டு கொண்டிருந்தாராம். வழிபாட்டுக்கான விசயம் இது தான், விமானம் உயரப்பறந்து கொண்டிருந்த போது பய ணிகளுக்கு கொஞ்சம் குளிர் பிடித்துள்ளது. அதுவும் முதல் வகுப்பு பயணிகள் குளிர் தாங்கமாட்டார்க ளல்லவா? எல்லோரும் விமானச் சிப்பந்திகளிடம் கம்பளி கேட்டுள்ளனர். ஆனால் விமானத்திலோ போதிய கம்ப ளிகள் இல்லாத விசயம் சிப்பந்திகளுக்கு ஏற்கனவே பளிச்..பளிச்.. என்பதால் கம்பளிகளை அங்கும் இங்கும் மாற்றிக்கொடுத்து திருவிளையாடல்கள் புரிந்துள்ள னர்.

பாவிக்கப்பட்ட கம்பளிகள் தான் தமக்கு வழங்கப் படுகின்றதென்பதுபற்றி எப்படியோ பயணிகளுக்கு வெளிச்சமாகிவிட்டதால் சிப்பந்திகளுக்கு வழிபாடுகள் நடந்துள்ளன. [காசு கொடுத்து பறப்பவர்களல்லவா விடுவார்களா.]

இந்த வழிபாடுகள் எல்லாம் பார்த்த இலவசப் பய ணிகளான விமான சேவையின் பெரிய படிமாத்தானும், அமைச்சர் பீரிசாரும் பேசாமல் தலையைக் கவிழ்ந்தபடி இருந்துவிட்டார்களாம்.

எம்மை ஏன் பேசுகிறீர்கள். விமான சேவையின் பெரியவரே இவர்தான். இவரிடமே நேரடியாக குறை களை கூறுங்கள் என யாராவது சிப்பந்தி படிமாத்தானை சுட்டிக்காட்டியிருந்தால் என்ன நடந்திருக்கும்? ஆனால் கெட்டிக்கார சிப்பந்திகள் மானம் போனாலும் பெரிய வரை காட்டிக்கொடுக்கவில்லை.

★★★

விட்டதாம். குழப்பணிக்காரர் தந்தை செல்வாவின் பெயரைத்தான் சூட்ட வேண்டுமென்று அ[வ]டம் பிடிக்க புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். படிமாத்தான்களோ முன்னாள் முதல்வர் ஆள் பிரட்[டி] தூ..ரையப்பாவின் பெயரினை அங்கும்... இங்கும் சூட்டலாமெனவும் அ[வ]டம் பிடித்துள்ளனர். [ஆஹா... என்ன பொருத் தம்; துரையப்பாவுடன் என்ன பொருத்தம்!]

நிலைமை மோசமாகப் போகவே முதல்வர் ரோஜினி யார் இப் பிரச்சினையை வேறொரு நாளில் எடுக்கலா.. மென சொல்லி [கத்தி] ஒருவாறு சமாளித்து விட்டா ராம்.

தந்தை செல்வாவின் உண்மையான ஆசை என்ன வென்பதை வட்டுக்கோட்டை தீர்மானம் மூலம் அழ காக வார்த்தைகளால் வடித்த குழப்பணிக்காரர்கள் தற் போது தந்தை செல்வாவின் பெயரை எங்கு சூட்ட லாம்? அவரின் படத்தினை எங்கு தொங்கவிடலா மென அடி தடியில் இறங்கி தமது 'வீரத்தை'காட்டும் முயற்சியில் இறங்கிவிட்டதைப் பார்த்தீரா ஐயா? இவ் வாறு குறுக்கிட்டார் கையார்.

அட ...சும்மா இருமைய்...யா.. அவர்களுக்கு வட் டுக்கோட்டைத் தீர்மானம். 'துட்டுக்கு ரெண்டு கொட் டைப்பாக்கு' கதையாகி எவ்வளவோ நாளாகிவிட்டது.

நீ வேறு அதனைத் இப்போது தூக்கிப் பிடித்துக்கொண்டு... வருகிறீரே

அதுமட்டுமா சிங்கக்கொடியோரின் மா-காணசபை தேர்தலில் எந்தக் கட்..சீ யோடு கூட்டு வைக்கலா மென்று குழப்பணியினர் அலைகின்ற இந்த நேரத்தில் அவர்களுக்கு தமிழ் மக்களாவது... சுதந்திரமாவது. சரி... சரி அவர்களின் உருப்படாத கதைகளை விட்டு

(20-ம் பக்கத் தொடர்ச்சி)

## பெயர்வு

வரப்போகிறதே என்ற தவிப்பாகவுமிருந்தது. அங்கு போய் என்ன செய்வது என்று நினைக்கவே விருப்பமில்லா திருந்தது. இப்படி பெருந் தொகையாக அங்கு போய் இறங்கி என்ன செய்வது. கடவுளே!

சொல்லி வைத்தாற்போல், எதிரே ஒரு ஒளி புள்ளியாகத் தோன்றி, வரவரப் பெரிதாகி வந்தது. சரியான ஒளியின் வழிகாட்டலின் பின்னால்தான் படகு செல்கிறதா என்ற ஒரு சந்தேகம் ஒரு கணமெழுந்தது. சில படகுகள், வேறொரு ஒளியைப்பின்பற்றி தவறுதலாக பூநகரி கடற்படை தளத்தருகே கூட போய்விடுவதுண்டு என அவள் கேள்விப்பட்டிருந்தாள்.

இப்பொழுது ஒளி பட்டையாக கடலில் விழுந்து தெரிந்தது. அதன் விளிம்போரம், கரையோடு நின்ற படகுகள் சில கருமையாய் தெரிந்தன.

படகோட்டி, என்ஜினை நிறுத்திவிட்டு கையில் நீண்ட துடுப்புடன், ஒரு பலகை மேலேறி நின்றுகொண்டான். துடுப்பு, நீரை 'தடக் தடக்' என அடிக்கும் ஒலி சீராகக் கேட்க படகு நழுவிக் கொண்டு சென்றது. கரையோரச் சிறு பாறைகளை லாவகமாகக் கடந்தபடி.

'படகோட்டி கெட்டிக்காரன்'தான் என்ற எண்ணமெழுந்தது. ஆட்களை கரையில் இறக்கிவிட்ட சில படகுகள் அவர்களைக் கடந்து சென்றன.

படகு, கரையை அண்மியதும் நின்றுகொண்டுவிட்டது. ஒவ்வொருவராக இறங்கத் தொடங்கினார்கள். மகேந்திரன் அவள் மடியில் இருந்த பிள்ளையைத் தூக்கிக் கொண்டதும் அவளும் எழுந்தாள். தலை கிறுகிறுத்தது. படகு விளிம்பைப் பிடித்துக்கொண்டு சிறிது நின்றாள். பசிக் களைப்புத்தான், நேற்று முழுக்க இரு தேநீர்தான்.

நீருக்குள் இறங்கிய பொழுதும் கால் தடுமாறிக்கொண்டு வந்தது. படகின் வெளிப்புறத்தைப் பற்றிக் கொண்டு கால்களை நீருக்குள் அழுத்த ஊன்றிச் சமாளித்தாள். அவளிடம் படகிலிருந்தபடி பிள்ளையைத் தூக்கித் தந்த மகேந்திரன், 'கவனம், கவனம்' என முணுமுணுத்தான். மண்ணை அரித்துக் கொண்டோடிய நீர், பித்த வெடிப்புக் கால்களுக்குச் சுகமாகத்தானிருந்தது. மெல்ல நடந்து கரைக்கு வந்தாள்.

படகில் இருந்தவர்கள். கரையில் ஒன்றாய் சேர்ந்து கொண்டனர். பிய்த்துக்கொண்டு போன கரைக்காற்றில் உப்பு நீரில் நனைந்திருந்த ஆடைகள் யாவும் நொடியில் காய்ந்தன. மகேந்திரன், அவர்களின் சாமான்களைக் கரைக்குக் கொண்டுவந்து சேர்த்த பின் சைக்கிளையும் தூக்கி வந்தான். சாமான்களை மீள சைக்கிளில் ஏற்றினான்.

உள் பகுதிக்கு நடக்கத் தொடங்கினர். சதுப்பு நிலத்தைக் கடந்து, கடற்கரை மணலைக் கடந்து, சைக்கிள் சில்லுகளும் கால்களும் புதைந்து புதைந்து எழ நடந்தனர்.

ஜெனரேட்டர் தந்த ஒளி கடற்கரையோடு நின்றுவிட்டது. வானம் முழுவதையும் மேக மூட்டம் கப்பி பிடித்திருக்க வேண்டும். எல்லாம் ஒரு இருட்டாக இருந்தது. கண்ணில் தெரிந்த மரங்கள் யாவும் கரும் பூதங்களாய், தெரிந்தன.

பாதையோரத்தில் ஒவ்வொரு மரமாக இடம்தேடி நடந்தனர். எல்லா மரத்தடியிலும் ஆட்களிருந்தனர். விலகி விலகி நடந்து ஒரு மரத்தடியில் இடம் பிடித்தனர். பெட்ஷீட் விரித்து அமுதனை கிடத்திவிட்டு தாமும் அருகே படுத்தனர்.

அவள் கண்விழித்த போது பக்கத்தில் கணவனும் பிள்ளையும் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தனர். உடம்பு அயர்ச்சியாக இருந்தது. எழும்பினால் தலை சுற்றிக்கொண்டு வருமோ என்றும் நினைத்தாள். இனி என்ன செய்யப் போகிறோம் என்பதுதான் தெரியாதிருந்தது. வேண்டுமானால் மரத்தை மரக்கிளைகளைக் கூரையாகக் கொண்டுவிடலாம். ஆனால் சாப்பாட்டிற்கு யார் வீட்டிற்குப் போவது- இவ்வளவு பெரும் தொகையான மக்களுக்கு யார் சாப்பாடு போடப் போகிறார்கள்?

மெதுவாக எழுந்து மரத்தின் பின்னாலுள்ள பற்றைக்குள் போய் வந்தாள் மரத்தடிக்குத் திரும்புகையில் கால்கள் மடிந்து விழுந்தன. அப்படியே உட்கார்ந்து முகத்தை முழந்தாளில் புதைத்த பொழுது ஆற்றாமை பொங்கியது. அழுகை கொப்பளித்து வந்தது. மகேந்திரன் எழுந்து 'எல்லோருக்கும் தானே இப்படி' என்று ஏதோ தேற்றமுயன்று தோற்றுப் போனான்.

அவள் தானாக அழுதுமுடிந்த பொழுது அமுதன் விழித்து விட்டிருந்தான். அவளைப் பார்த்து 'அம்மா என்று கை நீட்டினான். அவனைத் தூக்கி இறுக்கித் தழுவிக்கொண்டாள்.

அவனை மரத்தின் பின்புறம் கொண்டுபோய் நிறுத்தி தூக்கி வந்தாள். அமுதன் அவள் தோளில் முகத்தை உராய்ந்து மெல்லச் சிணுங்கினான். 'அம்மா! பாண் தாங்கோ'

அவசரமாக அவனைப் பக்கத்திலிருத்தி, தோல் பையைத் திறந்தாள். பாணில் ஒரு துண்டை- பிய்த்து அதில் மேலாகச் சீனி தூவி ஒரு விள்ளலை அவன் வாயருகே கொண்டுசெல்ல அவன் ஆவலோடு வாய் திறந்து அதை வாங்கிக் கொள்வதைக் காண மீள ஆற்றாமை பொங்கியது. சாதாரணமாக சாப்பிடுவதற்கு அடம் பிடிப்பவன், இடியப்பம் சொதி என்றால் மட்டும் நாலு வாய் தின்பவன். இந்த காய்ந்துபோன பாண் துண்டை ஆர்வமாய் சாப்பிடுவதைக் காண, இன்னுமொரு முறை அழுது விடுவோமோ என்று தோன்றியது.

கையிலிருந்த துண்டு முடிந்துவிட்டது. அவள் குனிந்து இன்னொரு துண்டைப் பிய்த்தெடுத்தாள். யாரோ பார்ப்பது போலிருந்தது. நிமிர்ந்தாள், அவர்களோடு மரத்தடியைப் பகிர்ந்துள்ள மற்ற குடும்பத்துச் சிறுவன் ஒருவன் சற்று விலகி நின்று அவள் கையிலிருந்த பாணைப் பார்த்து நின்றிருந்தான். அமுதனை ஒத்த வயதுதானிருக்கும் மூன்றரை மிஞ்சினால் நாலு. அவளுக்குச் சங்கடமாக இருந்தது.

பாணின் இரு துண்டங்களைப் பிய்த்து நீட்டி, அவனை அருகில் கண்களால் கூப்பிட்டாள். சிறுவன், தயக்கமின்றி வந்து வாங்கிக் கொண்டான். அப்பொழுது தான் அவனின் தாய் அதைப், பார்த்திருக்கவேண்டும். 'என்னத்திற்கு இதெல்லாம்?' என அவள் சொல்லவிரும்பியது போலிருந்தது. ஆனாலும் அவள் சொல்லவில்லை. இயலாதவள் போல் நின்றாள்.

கையிலிருந்த மீதி இரண்டு துண்டும் அமுதனுக்குக் காணும் என நினைத்துக் கொண்டாள். கையில் எடுத்த துண்டும் முடிந்து விட்டிருந்தது.

மற்றதையும் அவள் எடுத்துக் கொண்ட பொழுது, முதுகில் ஏதோ துருதுருப்பதுபோல் இருந்தது. திரும்பினாள், பக்கத்து மரத்தடியில் இருந்த ஒரு சிறுகுழந்தை முதுகிற்குப் பின்னால் இருந்து அவள் கையிலிருந்த பாண்துண்டையே பார்த்துக் கொண்டிருந்தது.

★★★

(25-ம் பக்கத் தொடர்ச்சி)

## விடியலைத் தேடி......

அன்ரனி போனதன் பிறகு மரியாவிற்கு தனிமையின் கொடுமை இன்னம் கொடூரமாக தாக்கியது. ஆனாலும் ஏதோ ஒருவகை நிம்மதி உணர்வு, அன்ரனியைப் பற்றி தோன்றுவதால், அமைதியாக பெருமூச்சுடன் வாழ் நாட்களைக் கழித்தாள்.

ஒருநாள் அதிகாலை வேளை, மரியா முற்றம் கூட்டிக்கொண்டி ருந்த போது, 'அம்மா... அம்மா' என்று கத்தியபடி அருள் ஓடிவந் தான். அந்தக் குரலில் ஏற்கனவே நைந்து நொந்துபோன மரியா 'என்னடா' என்று, அச்சத்துடன் அதட்ட,

தன்னிலும்விட பெரிய சயிக்கிளை மாமரத்துடன் சாத்தியவாறு 'அண்ணன் சுவிசுக்குப் போய்ச் சேர்ந் திட்டானாம்....! மாமா... கரவை சின்னத் தம்பியாரிட்டை சொல்லி விட்டவராம்..' என்று கூறினான். நீண்ட நாட்களின் பின் அவ்வீடு அன்று மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருந்தது, ஆனால் அருள் மட்டும், எதிலும் மனம் ஒட்டாமல், அடிக்கடி எதையோ சிந்திப்பவன் போலக் காணப்பட்டான்.

(தொடரும்)




**அத்தியாயம் 6**

**முன்கதைச் சுருக்கம்:-**

**(அந்தக் கரையோர கிராமத்தில், வறுமையின் கொடுமையால் அன்ரனியும், தகப்பனும் கடலுக்குச் செல்ல, அங்கே நேவி வர, நேவியிடமிருந்து தப்பி அன்ரனி மட்டும் வீட்டுக்கு வருகிறான். தகப்பனுக்கு என்ன நடந்ததென்று, தெரியாமல் எல்லோரும் தவித்துக்கொண்டிருக்க, அன்ரனியை வெளிநாட்டுக்கு அனுப்ப முடிவு செய்கிறாள் தாய் மரியா.)**

அன்று மாலை இருள் எங்குமே பரவிக் கொண்டிருந்தது. ஆங்காங்கே எண்ணெய் விளக்குகள் மங்கலாக வெளிச்சம் தந்துகொண்டிருந்தன. மரியாவும், மேரியும் வீட்டு முன் விறாந்தையில் இருந்தார்கள். அருள் விளக்கின் முன்பு, உட்கார்ந்து படித்துக்கொண்டு இருந்தான். படலை திறக்கும் சத்தத்துடன், தொடர்ந்து அன்ரனி அங்கு வந்துகொண்டிருந்தான். தூரத்தில் அவன் நடந்து வரும்போது தகப்பனின் சாயல் தெரிய, மரியா ஒருகணம் தடுமாறி பின்னர் நிதானித்தாள்.

அன்ரனி வந்து திண்ணையில் ஏறியபடி 'அம்மா நான் இண்டைக்கு தொழிலுக்கு போகப் போறன்..' என்று கூறினான். இதைக் கேட்டு, அனைவரும் திடுக்கிட்டு அன்ரனியை நிமிர்ந்து பார்த்தனர்.

'ஏன்ரா தம்பி... நான் உயிரோட இருக்கிறது உனக்கு பிடிக்கேல்லையோ? என்று மரியா ஆற்றாமையுடன் கேட்க 'சும்மா எத்தினை நாளைக்கு எண்டு புயந்திருக்கிறது...' என்று அன்ரனியும் பதிலுக்கு கேட்க' டேய் என்ரை சொல்லைக் கேட்காமல் போய்த்தான் இண்டைக்கு இந்த நிலை...! நானும் அப்பவே அந்தாளோடை போய் சேர்ந்திருக்கோணும்...! இண்டைக்கு நான் உயிருடன் இருக்கிறன் எண்டால் உங்களுக்காகத்தான்...' என்று கூறியபடி தாய் அழத்தொடங்கினாள்.



அதைப் பார்த்த அன்ரனி 'ஏன் இப்ப அழுகிறாய்...? இப்பிடியே இருந்து என்னம்மா... செய்யிறது? எத்தினை நாளைக்கு மாமாட்டையும்.. கடமைப்படுகிறது...?' என்று கோபத்துடன் கேட்க, 'அதுதான் நான் சொல்லுறன்... நீ வெளிநாட்டுக்குப் போ..' என்று தாய்கூற, 'என்ன வெளிநாடோ... நான் போகேல்லை...' அன்ரனி மறுத்தான்.

தாய் மீண்டும் கெஞ்சுதலாக உந்தச் 'சம்மாட்டியாரின்ரை மோனுக்கும் உன்ரை வயதுதானே... அந்தப் பெடியும் வெளியில போய்... என்னமாதிரி இருக்கு... நீ உழைக்காவிட்டாலும் பரவாயில்லை... அங்கினேக்க போய் உயிர்தப்பி பிழைச்சு... சுகமா இருந்தா காணும் அப்பு...' என்று கூறினாள்.

தாயின் அருகே ஆதரவாக வந்து அமர்ந்த அன்ரனி 'அம்மா நான் உங்களுக்காக என்னவேணுமெண்டாலும் செய்யிறன்... ஆனால் வெளிநாடு மட்டும் போகமாட்டன்.. உங்களை.. இந்த ஊரை எல்லாம் பிரிஞ்சு என்னால இருக்க ஏலாது..! அதோட வெளிநாடு போறதெண்டால் எவ்வளவு காசு தெரியுமோ....? என்று தாயின் மனதை மாற்ற முற்பட்டான்.

ஆனாலும் அதிலும் அவன் முழுமையாகத் தோற்றான். தாய், மாமன் கூறிய, காசுப் பிரச்சினையை கூற, அன்ரனி ஒன்றும் கூறமுடியாமல் தவித்தான். இடையில் குறுக்கிட்ட மேரியும் 'ஏன்ரா இஞ்ச இருந்து என்ன செய்யப் போறாய்? கடலுக்கு போய்... சாகப்போறியோ...? சாகிறதெண்டால் எல்லாரும் சேர்ந்து சாவம்' என்று அன்ரனியைத் திட்டினாள். அதற்கு அன்ரனி 'அக்கா நீயாவது கொஞ்சம் பேசாமலிரக்கா...' என்று அலுத்தவாறு மாமரக் கொட்டிலை நோக்கிச் சென்றான்.

அன்று இரவு மரியாவுக்கு தூக்கமே வரவில்லை. அன்ரனியைப் பற்றி யோசித்தவாறு வெகுநேரம்வரை இருட்டை வெறித்தபடி இருந்தாள். 'அந்தாள் இருந்தால் எனக்கேன் இந்த நிலைமை...! எல்லாப் பொறுப்பையும் என்ரை தலையிலை சுமத்திப்போட்டு... அவர் போட்டார்...! நான் இந்த சொல்லுக்கேக்காத பெடியனோட படுகிறபாடு...' என்று பலவற்றையும் யோசித்தவாறு ஒருவாறு தூங்கிவிட்டாள்.

அன்று விடிய, மரியா கண்விழிக்கையில் வாசலில் படுத்திருந்த அன்ரனியை காணாது, அவள் மனம் திடுக்கிட்டது. வீடு முழுக்க தேடிய பின் அருளைக் கேட்டாள். அருளும் 'அண்ணன் தொழிலுக்கு போட்டான்..' என்று கூற பயங்கர அதிர்ச்சியுடன் தனது இயலாமை, கோபம் எல்லாவற்றையும் அருள் மீது காட்டி, அவனுக்கு அடித்துத் தீர்த்தாள்.

சத்தம் கேட்டு வந்த மேரி, தாயின் கையை கோபத்துடன் பிடித்து நிறுத்தி 'இப்ப ஏன் நீ இவனை அடிக்கிறாய்...? உன்ரை மோன் தொழிலுக்கு போனதுக்கு இவன் என்ன செய்யிறது...? என்று கேட்க 'இல்லையடி பிள்ளை ...இவன் என்னை எழுப்பியிருக்கலாம்தான.... எல்லாரும் சேர்ந்து என்னை கொல்லுறது எண்டு முடிவு எடுத்துப் போட்டாங்கள்..' என்று குமுறிய மரியா, அடிவாங்கிய அருளை தன்னோடு சேர்த்து, அணைத்தபடி 'நீ பள்ளிக்கூடத்துக்கு போ அப்பு..! இவன் வரட்டும் இண்டைக்கு... ஒன்றில் நான் இந்த வீட்டில் இருக்கிறன்... இல்லாட்டால் அவன் இருக்கிறான்' என்று ஆத்திரத்தில் கதறியபடி, வாசலில் குந்தியிருந்து கடலையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

கதிரவன் கொஞ்சம்கொஞ்சமாக உச்சிப் பகுதியை அடைந்துகொண்டிருக்கும் வேளையில் அன்ரனி வீடு வந்து சேர்ந்தான். அன்ரனியைக் கண்டதும் இதுவரை அடக்கி வைத்திருந்த ஆத்திரமெல்லாம் சேர்த்து, அவனின் கையிலிருந்த மீன்களைப் பறித்து, முற்றத்தில் எறிந்தபடி 'உன்னை ஆரடா போகச் சொன்னது... எனக்கு கொஞ்ச நஞ்சை தந்திட்டு... நீ போயிருக்கலாமே...' என்று வாய்க்கு வந்தபடி பேசினாள். இழந்தவளுக்குத்தான் இழப்பின் அருமை தெரியும். முற்றத்தில் எறிந்த மீன்களைச் சுற்றி, காகங்கள் சந்தோஷமாக வட்டமிட்டன.

ஏதோ அலுவலாக அங்கே வந்த மனுவில் சம்மட்டியார் 'என்ன பிள்ளை... ஏன் சத்தம் போடுறாய்?...' என்று விசாரிக்க 'வீட்டில உந்த இடியேறு நடந்து கிடக்கு சம்மட்டியார்.... உவன் கடலுக்கு போட்டுவாறன்... இவனுக்கு ஏதும் நடந்தால் ஐயோ! நானேன் உயிரோடு இருக்கோணும் என்று...' மரியா அழத்தொடங்கினாள்.

'சரியடி பிள்ளை அழாத..! ஏதோ அவன் தெரியாமல் போட்டான்...! நான் அவனுக்கு புத்தி சொல்லுறன்...! பின்னேரம் வீட்டை அனுப்பிவை... செய்வேத்தியும் எனக்குச் சொன்னவன்...! வெளிநாட்டுக்கு இவனை அனுப்பிறதைப் பற்றி... நானும் என்ரை பெடியளோடை கதைச்சு... காசு தாறன்!... எனக்குத் தெரிஞ்ச ஏஜென்சிமார் கனக்க இருக்கினம்... நீ யோசிக்காத...!' என்று ஆறுதல் கூறிய சம்மட்டியார், வேறு விடயங்களைப் பற்றிக் கதைத்தார்.

வீட்டுக்குள் நுழைந்த அன்ரனி, அழுது கொண்டு இருக்கும், தமக்கையின் அருகில் சென்று 'இனி நான் கடலுக்கு போகேல்லை அக்கா... இண்டைக்கும் இவங்கள் சுந்தர் ஆட்களோட.... கரைவழிதான் போட்டு வந்தனான்... நீ அழாத...'என்று கெஞ்சினான். தம்பியாரின் வார்த்தைகளில் நம்பிக்கை அடைந்த மேரி 'அந்த மனிசி பாவம் உங்களையே நினைத்து நித்திரையில்லாமல் அவதிப்படுறது, எனக்குத்தான் தெரியும்..! இப்பிடியே இருந்தா மனிசிக்கு விசராக்கிப் போடும்...! நீ எழும்பிக் குளிச்சிட்டு வந்து சாப்பிடு என்றாள்.

அன்ரனிக்கு குடும்பத்தின் நிலைமையை நினைக்க பயமாக இருந்தது. 'அப்பாவும் இல்லாத இடத்தில்... நான் தானே பார்க்க வேண்டும்...! அக்காவுக்கும் வயது ஏறுது....' என்று சிந்தித்த அன்ரனிக்கு, எந்த முடிவும் எடுக்க முடியாமல் மனம் தவித்தது. எவ்வளவு நேரம் இப்படி இருந்தானோ தெரியவில்லை. மாலை வெளிச்சம் பரவிக் கொண்டிருந்தது. மனதில் ஏதோ ஒரு உறுதியான முடிவுடன் சம்மட்டியாரின் வீடு நோக்கிச் சென்றான். சம்மட்டியாரின் அறிவுரையும் சேர்ந்து, அவனது முடிவு இன்னும் உறுதி ஆகியது.

அங்கிருந்து திரும்பி வந்தபோது, வீட்டின் வாசலில் பந்தல் போட்டுக்கொண்டிருந்த அருளை நோக்கி 'என்னடா நடக்குது...' என்று அன்ரனி அதட்ட 'நாளைக்கு திலீபன் அண்ணாவின்ரை நினைவு நாள் தொடங்குது... நீ என்ன மறந்திட்டியோ...?' என்றவாறு அருள் தன்து வேலையைத் தொடர்ந்தான். அருளின் அலட்சியமும், துணிவும் அன்ரனியை வியக்க வைத்தாலும், இவனாவது இப்படியான சிறு பணியைச் செய்யட்டும் என்று நினைத்தான்.

அன்ரனி வெளிநாடு போவதற்கான ஆயத்தங்களை மாமன் மும்முரமாக, கவனிக்கத் தொடங்கினார். நாட்கள் நெருங்க, அன்ரனிக்கு மனம் முழுக்க வெறுமை சூழ ஆரம்பித்தது. ஏதோ ஒருவிதமா குறிப்பிட்ட ஓர்நாளில், எல்லோரையும் பிரிந்து அன்ரனி பயணமானான். அவனது பயணம் எந்தவித தடங்கலும் இன்றி அமைந்தது.


(தொடர்ச்சி 24-ம் பக்கம்)

# நாற்றுகள்

தாயகக் கனவினை
தாங்கிய தோழனே..!
மூடிய விழி திறந்து
மெல்ல எழுந்துபார்.
உனை எம் நெஞ்சில்
இன்னும் நினைத்தே
தொடுக்கிறோம் தினந்தோறும்
களத்தினில் போர்.
உன் கனவை ஈடேற்றி
விடுதலைப் பயிர் வளர்க்க
உயிரையே உரமாக்கி
வீழ்கின்றார் வேங்கைகள் ஆயிரம்.
காடுகள் மலைகள் என
கால்கள் நடக்கும்...
போகும் பாதையெலாம்
முட்கள் கிழிக்கும்.
இடர்கள் பல வந்தும்
தடைகள் தாண்டி
வேகமுடன் செல்கிறோம்.
உறவை இழந்து
வாழ நேர்கினும்
மண் உணர்வை இழந்து
வாழ்கிலோம்
விழுதென ஆகி
வேதனை சுமந்தீர்.
மெழுகென உருகி
வெளிச்சம் தந்தீர்.
முத்தான ஈழம்பெற
வித்தாகிப் போனவரே
உங்கள் சமாதியை
சன்னதியாய் தொழுகிறோம்.
மலர் வைத்து மனமுருகி
நிற்கிறோம்.
மலர் நாளை வாடலாம்
உங்கள் நினைவு அழியாது
கனவும் கலையாது
புலரும் காலையில்
தாயகம் மலரும் — அதுவரை
எம் சுடுகுழலும் கனலும்....

கு. ஞானக்குமாரி.

**ரவி வாகனசேவை**



உங்கள் அனைத்து
வாகனத் தேவைகளுக்கும்
நீங்கள் தொடர்புகொள்ள
வேண்டியது
தொலைபேசி:
0148765190 அல்லது
0607622689

Pub

# சொற்சிலம்பம்

## போட்டி எண் – 3

**ப - ந் - தி - த - த் - பா - ல் - ள - பி - ர - தா - ய - ம - ன - சு - வ - வி - ஷ - ணை - ரி - மா - ச - ட் - டி - ம் - மே - சா.**

இங்கு காணப்படும் எழுத்துக்களைக் கொண்டு 15க்கும் மேற்பட்ட சொற்கள் ஆக்கப்படவேண்டும். சொற்கள் 4 எழுத்துக்களுக்கும், அதற்கு மேற்பட்டதாகவும் இருக்க வேண்டும். எந்த எழுத்தில் முதல் சொல் தொடங்குகிறதோ, அதே எழுத்திலேயே ஆக்கப்படும் சொற்கள் அனைத்தும் தொடங்கப்படல் வேண்டும். எந்த எழுத்தில் அந்த சொல் முடிகிறது, அதே எழுத்திலேயே 15 சொற்களும் முடியவேண்டும்.

| | |
|---|---|
| 1) ........................ | 15) ........................ |
| 2) ........................ | 16) ........................ |
| 3) ........................ | 17) ........................ |
| 4) ........................ | 18) ........................ |
| 5) ........................ | 19) ........................ |
| 6) ........................ | 20) ........................ |
| 7) ........................ | 21) ........................ |
| 8) ........................ | 22) ........................ |
| 9) ........................ | 23) ........................ |
| 10) ........................ | 24) ........................ |
| 11) ........................ | 25) ........................ |
| 12) ........................ | 26) ........................ |
| 13) ........................ | 27) ........................ |
| 14) ........................ | 28) ........................ |

'சொற்சிலம்பம்' எண்-3 இற்கான விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள்: 14.05.98

**விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:**

சொற்சிலம்பம்
ஈழமுரசு - 22, Rue Perdonnet, 75010 Paris, France.

பெயர்: ..............................

முகவரி: ..............................

..............................

..............................

பிறந்த திகதி: ..............................

சந்தா இல: ..............................

சொற்சிலம்பம் 1, 2 ஆகிய போட்டிகளில் நூற்றுக்கணக்கான வாசகர்கள் பங்குபற்றியிருக்கின்றார்கள். அதில் போட்டி எண் 1 இல் ஒரே ஒரு வாசகி மட்டுமே சரியான விடையை எழுதியிருக்கின்றார். போட்டி எண் 2 இல் எந்த வாசகரும் சரியான விடை எழுதவில்லை. அதற்குக் காரணம் பலருக்கு இப் போட்டியின் விதிமுறைகள் சரியாகப் புரியாமையே.

இப் போட்டியில் தரப்பட்டுள்ள எழுத்துக்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டே சொற்கள் ஆக்கப்பட வேண்டும். மேலதிகமான சொற்கள் எதையும் சேர்க்கக் கூடாது. அதேபோல் எந்த எழுத்தும் விடுபடவும் கூடாது.

எங்கே, இம்முறை முயன்றுபாருங்கள்; நிச்சயம் நீங்கள் சரியான விடையினை எழுதுவீர்கள்.

**போட்டி எண் 1 இல் சரியான விடை எழுதியவர்:**

**ரஞ்சினி கமலேந்திரன்**
**3800 Interlaken, Swiss.**

(இவருக்கான பரிசு மக்கள் கடை ஸ்தாபனத்தாரால் காலக்கிரமத்தில் அனுப்பிவைக்கப்படும்.)

**போட்டி எண்: 1. விடைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பகட்டு | பகுத்தல் | பக்கம் | பண்டிதர் | பத்திரம் | பப்பாளி |
| பரப்பு | பம்பரம் | பரீட்சை | பழக்கம் | பருத்தி | பருப்பு |
| பருமன் | பலகாரம் | பருவம் | பனிப்பு | பறித்தல் | பவளம் |
| பல்லவி | பலித்தல் | பனிக்காலம் | பருகுதல் | படித்தல் | பதநீர் |
| பரவசம் | பகலவன் | பக்குவம் | பதிபக்தி | பதக்கம் | |

**போட்டி எண் 2. விடைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சத்தியம் | சமுத்திரம் | சமுதாயம் | சந்தனம் | சத்திரம் | சத்தம் |
| சம்பவம் | சக்கரம் | சரசம் | சப்பறம் | சப்தம் | சம்பலம் |
| சரித்திரம் | சருமம் | சர்ப்பம் | சல்லாபம் | சன்னம் | சடலம் |
| சந்நிதானம் | சலனம் | சமர்ப்பணம் | சபதம் | சம்சாரம் | சட்டம் |
| சங்கமம் | சஞ்சலம் | | | | |

போட்டியில் கலந்துகொண்டு சரியான விடைகளை எழுதி அனுப்பும் வாசகர்களில், குலுக்கல் முறையில் தேர்ந்தெடுத்தெடுக்கப்படும் ஐவருக்கு **பாரிஸ் மக்கள் கடை** தாபனத்தினரால் பெறுமதி மிக்க பரிசில்கள் அனுப்பி வைக்கப்படும்.

சொற்சிலம்பம் எண்-3 இற்கான விடையும், சொற்சிலம்பம் எண்-4 உம், 21 – 27 மே 98 ஈழமுரசில் வெளிவரும்.

**ஆக்கம்: சவேயூ சவுந்தரராஜா**

குறிப்பு: போட்டோ பிரதிகள் தெரிவுக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

உங்கள் அனைத்து விதமான அச்சுத் தேவைகளுக்கும்

**தமிழ் அச்சகம்**

வெளியீடுகளுக்கான அச்சுவேலைகள் குறைந்த விலை

வண்ண நிறங்களிலான அச்சுவேலைகள் சிறந்த தரம்

அனைத்து வேலைகளும் குறித்த தவணை

திங்கள் முதல் - சனி வரை 10.00 – 22.00 மணிவரை
60, Rue Louis Blanc, 75010 Paris - Tel & Fax: 01 42 09 60 64

தமிழ் அச்சகத்தின் கிளை நிறுவனம்
20 Rue Labat, 75018 Paris - M°: Marcadet Poissonniers
எனும் முகவரியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறைந்த விலையில் உங்கள் அனைத்து கணினித் தேவைகளுக்கும்....

**VPI Multimedia**
Conseil et Service
Tel: 0160790607 / 0660404351

# சுதந்திரக் கிண்ணத்தை சுவீகரிக்கப்போவது யார் ?


சில மாதங்களுக்கு முன்னால் தனது 50-வது சுதந்திரதின பொன்விழாவை பயத்துடனும் பீதியுடனும் நினைவு கொண்ட சிறீலங்கா, வரவிருக்கும் ஜூன், ஜுலை மாதங்களில் சுதந்திரக்கிண்ண போட்டியாக, மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட ஒரு நாள் கிரிக்கட் போட்டிகளை நடாத்த திட்டமிட்டுள்ளது. 50 ஓவர்களைக் கொண்ட இத் தொடர் பகல் - இரவு ஆட்டங்களாக இருக்கும். சிறீலங்கா மற்றும் இந்தியா, நியூசிலாந்து ஆகிய மூன்று தேசங்கள் கலந்துகொள்கின்றன. பெரும்பாலான ஊகங்களின் அடிப்படையில், சிறீலங்காவும் இந்தியாவுமே இறுதிப்போட்டியில் பங்கு கொள்ளும் வாய்ப்பு அதிகமாக கொண்டுள்ளன. ஆனாலும் மைதான முடிவுகள் பல தடவைகள் ஊகங்களை மாற்றியுள்ளன.



அண்மைக் காலங்களை பார்க்கும்போது சிறீலங்கா அணியின் தரம் குறைந்து வருகிறது. இருந்தாலும் சொந்த நாட்டில் அவர்களை தோற்கடிப்பதென்பதும் இலகுவான காரியமில்லை. சிறீலங்கா அணியின் பெரும்பாலான உலக சாதனைகள் அவர்களின் நாட்டிலேயே நிகழ்த்தப்பட்டிருப்பதையும் இவ்விடத்தில் கவனத்திற்கொள்ளவேண்டும். இந்திய அணியும் அண்மைக் காலங்களில் புதுப் பொலிவுடன் சாதனைகளைப் படைத்து வெற்றிகளைப் பெற்று வருகிறது. அவ்வணியின் இரு பெரும் தூண்களான இளம் புயல் டெண்டூல்காரும், கிரிக்கெட்டில் நன்கு முதிர்ந்த அனுபவமான அணித் தலைவர் அசாருதீனும், வெற்றிகளை பல முனையிலும் நகர்த்துவதில் வல்லவர்கள். அசாருதீன் தலைமை இந்திய அணிக்கு பல மகத்தான வெற்றிகளை கொடுத்ததை யாருமே மறுக்க முடியாது. மூன்றாவது நாடான நியூசிலாந்து ஆசியநாடுகளில் பெரிதாக எதையுமே செய்யவில்லை என்பதற்காக ஒதுக்கி விடமுடியாது. உலகமே மாறி வரும்போது வெற்றி வாய்ப்புக்கள் கைமாறமாட்டாது என்று யாராலும் உறுதியாக கூறமுடியாது. போட்டிகள் நடைபெற்று முடிவுகள் வரும்போது சுதந்திரக்கிண்ணத்தை சுவீகரிப்பது யார் என்று இலகுவாக தெரிந்துவிடும். எனவே பொறுத்திருப்போம்.

# வோர்ன் இன்றிய அவுஸ்திரேலிய அணி

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் பல வெற்றிகளுக்கு வழிவகுத்த சுழல் பந்துச் சிங்கம் ஷேன் வோர்ன் கிட்டத்தட்ட 8 மாதங்கள் அணியில் இடம்பெறாமல் இருக்கப்போகும் நிலை கங்காரு தேசத்திற்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தக்கூடும். அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்த அவுஸ்திரேலிய அணியில் பங்கெடுத்த வோர்ன் கூடுதலாக தனது வித்தைகளை விரையமாக்கி விக்கட்டுகள் வீழ்த்துவதற்குப் பதிலாக தனது வலது கரத்தில் வினையை தேடிவிட்டாரே என்று நினைக்கும் அளவுக்கு அவரின் வலதுகரம் பாதிக்கப்பட்டுவிட்டது. இதனை சீர்படுத்துவதற்காக அவர் அறுவைச் சிகிச்சைக்கு உட்படவேண்டியுள்ளது. பலமான அணியாகத் திகழும் அவுஸ்திரேலியாவுக்கு தலைமை பிரச்சினையும் உண்டு. உலகிலேயே டெஸ்ட் தலைவர், ஒருநாள் போட்டி தலைவர் என உத்தியோகபூர்வமாக இரு தலைவர்களைக் கொண்ட ஒரேயொரு நாடு அவுஸ்திரேலியாதான். அத்தோடு பந்துவீச்சிலும் தொய்வு கண்டால் பலமான அணி, வரவிருக்கும் பாக்கிஸ்தான் பயணத்தை எப்படி சமாளிக்கப்போகிறது. இந்தியாவைப்போல் பாகிஸ்தானும் சுழல்பந்து வீச்சுக்கு கை கொடுக்கும். பாகிஸ்தானில் பந்துவீச்சாளர்களால் ஆட்டத்தின் திசை மாற்றப்பட்ட சம்பவங்கள் அதிகம் இருப்பதால் வோர்னின் இழப்பை ஈடு செய்பவர் யார்?



## உதைபந்தாட்டம்: நாடுகளின் உலக தர நிலைமை

உலகநாடுகளுக்கான உதைபந்தாட்டச் சபை (FIFA) 22.04.98 வெளியிட்டுள்ள நாடுகளின் தர வரிசையில், முதல் 15 நாடுகளின் பட்டியல் இங்கே தரப்பட்டுள்ளது.

| நிலை | நாடு | புள்ளிகள் | உயர்ச்சி/வீழ்ச்சி |
|---|---|---|---|
| 1. | பிரேசில் | 72.28 | 0 |
| 2. | ஜேர்மனி | 65.45 | 0 |
| 3. | செக்குடியரசு | 64.29 | 0 |
| 4. | மெக்ஸிக்கோ | 60.76 | 0 |
| 5. | இங்கிலாந்து | 59.46 | 0 |
| 6. | சிலி | 59.15 | +2 |
| 7. | ஆர்ஜென்டீனா | 58.98 | -1 |
| 8. | யூக்கோஸ்லாவியா | 58.12 | +4 |
| 9. | ஸ்பானியா | 57.96 | +16 |
| 10. | மொரோக்கோ | 57.91 | -1 |
| 11. | ஜப்பான் | 57.88 | -2 |
| 12 | நோர்வே | 57.82 | -2 |
| 13. | கொலம்பியா | 57.80 | +4 |
| 14. | நெதர்லாந்து | 57.45 | -8 |
| 15. | அமெரிக்கா | 57.18 | +1 |

# வெற்றிக் களிப்பில் ஆர்ஜென்டீனா

இரு தடவைகள் உலகக் கிண்ணத்தை கைப்பற்றியதும், சிறந்த வீரன் மரடோனாவை உருவாக்கியதுமான ஆர்ஜென்டீனா, சென்றகிழமை உலக சம்பியன் பிரேசிலை அவர்களின் நாட்டிலேயே ஒரு சிநேகபூர்வமான போட்டியில் சந்தித்தது. உதைபந்தாட்ட போட்டிகளுக்கு அதிகமான மக்களை பார்வையாளர்கள் ஆக்கிக் கொள்வதில் பிரேசில் என்றும் தளர்ந்ததில்லை. இந்தப் போட்டியிலும் கிட்டத்தட்ட ஒரு லட்சம் மக்கள் போட்டியை கண்டு களிப்பதற்காக வந்திருந்தார்கள். சொந்தநாட்டு மக்களின் ஆரவாரத்தின் மத்தியில் உலக புகழ் படைத்த றொனால்டோ, றோமாரியோ, கார்லோஸ் என்று ஒரு பட்டாளமே பிரேசிலுக்காக ஆடியபோதும் இடைவேளைக்கு முன் எவ்வணியினருமே கோல் போடாமல் ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக அமைந்திருந்தது. இடைவேளையின் பின்னரும் ஆட்டத்தின் போக்கில் விறுவிறுப்பு தென்பட்டதே தவிர கோல் போட யாராலும் முடியவில்லை, ஆட்டம் முடிவு தறுவாயை எட்டுவதற்கு சில நிமிடங்கள் முன்னதாக (84-ம் நிமிடத்தில்) ஆர்ஜென்டீன . வீரர் கிளடியோ லொபெஸ் திறமையான முறையில் விளையாடி ஒரு கோலைப் போட்டார். சில நிமிடங்களில் ஆட்டமும் நிறைவடைய ஆர்ஜென்டீனா 1:0 என்ற நிலையில் வெற்றிக்களிப்பில் பரவசம் கொண்டது. பிரேசில் அணியினர் 1992 இற்கு பின் சொந்த நாட்டில் சந்திக்கும் தோல்வி இதுவாகும். சொற்ப காலத்தில் நடைபெறவுள்ள உலகக்கிண்ணப் போட்டிக்கு இம் முடிவு பெரும் பரபரப்பையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.



தமிழீழ விடுதலைப் புலிகள் பிரெஞ்சுக் கிளை நடாத்தும்

**மாவீரர் நினைவு**

மென்பந்து துடுப்பெடுத்தாட்ட சுற்றுப்போட்டி -1998

காலம்: 17.05.1998 ஞாயிறு (காலை 9.00 மணி)

இடம்: Stains மைதானம்

போட்டிகளில் கலந்துகொள்ள விரும்பும் கழகங்கள் 01 43 58 11 42 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொண்டு உங்களது பதிவுகளை மேற்கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவம்

வெகுவிரைவில்

ஈரோ தமிழ் ஒளி - Euro Tamil Oli

Astra Satellite

மாதத்திற்கு - 40 DM. மூன்று மாதத்திற்கு - 120 DM.

6 மாதத்திற்கு - 235 DM. ஒரு வருடத்திற்கு - 455 DM.

Name .................... Adress .................... Bankcode ....................

Surname .................... Countndercode ....................

Date of birth. .................... Postalcode .................... Accountnumber ....................

Place of birth .................... City .................... Adresofbanker ....................

Passport N°: .................... ....................

Signedon ....................Subcribersignauere ....................

அனைத்து தொடர்புகளுக்கும்:

N. Navajeevakumar Euro-Tamil Oli Banhof Str. 1

96224 Burkunstadt Germany Fax And Tp- 09572603135

இவற்றை நிரப்பி எங்களுக்கு அனுப்பவும்

# வரலாற்றில் பதிந்த தவறுகள்

(உலக வரலாற்றில் பதிவு பெற்ற சில தவறுகள் பெரும் அனர்த்தங்களுக்குக் காரணங்களாகிவிட்டன. இத்தகைய அனர்த்தங்கள் சிலவற்றை ஈழமுரசு, வாசகர்களுக்கு தொகுத்துத் தருகின்றது.)

## தவறு : சிறு பெண்ணின் பேச்சை நம்பியது. விளைவு: 25000 பேர் பட்டினியால் மரணம்

14 வயதுடைய (Nongquawuse) நொங்காவூஸ் என்னும் தீர்க்கதரிசிப் பெண் உயிருக்கே ஆபத்து விளைவிக்கக் கூடிய சாமர்த்தியம் கொண்டவள். இவள் தனது 14 வயதிலேயே தெற்கு ஆபிரிக்க மக்களை வசப்படுத்தி, அவர்களை வேரோடு அழிக்கத் திட்டமிட்டாள்.

1856-ம் ஆண்டு ஒருநாள் அந்தப் பெண் தனது குலத்தவர்கள் என்றும் பார்க்காது அங்குள்ள பெரியவர்களிடம் சென்று, 'பெரியோர்களே நான் கூறுவதைக் கவனமாகக் கேளுங்கள். உங்கள் மூதாதைம்மார்களின் முகங்களைக் கடலில் கண்டேன். அவர்களுடன் உரையாடினேன். உயிர்த்தெழுந்துவந்த அவர்கள் தங்களின் நாட்டைக் கைப்பற்றி இருக்கும் ஐரோப்பியருடன் போர்தொடுக்கப் போவதாகக் கூறினார்கள். அதுமட்டுமல்ல, இந்நாட்டு மக்களுக்கு எங்கள் மேல் நம்பிக்கை உண்டெனில், நாட்டில் உள்ள எல்லாவிதமான பயிர்களையும் எரித்து, ஆடுமாடுகள் எல்லாவற்றையும் கொன்று தங்களில் உள்ள நம்பிக்கையை நிரூபிக்க வேண்டும் எனவும் ஒரு நிபந்தனையையும் கூறியதோடு, சொன்னபடி செய்யாவிடின் நாட்டு மக்கள் அனைவரும் ஊர்வனவாகவும், பூச்சி புழுக்களாகவும் மாறுவர் என எடுத்துரைக்கும் வண்ணம் என்னிடம் கூறினார்கள். இதை நான் உங்களுக்கு எடுத்துரைக்கிறேன்' என்று மிகத் துணிவுடன் கூறினாள்.

இப் பெண்ணின் கதையை உண்மையென நம்பிய தெற்கு ஆபிரிக்க மக்கள் எல்லோரும் ஒரு வருடமாக நாட்டில் உள்ள சகல விதமான பயிர்களையும் அழித்து எல்லா ஆடு மாடுகளையும் கொன்று குவித்தனர். ஒரு வருடம் கழித்து, 1857-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18-ம் திகதி நொங்காவூஸ், அங்குள்ள மக்கள் எல்லோரையும் வரவழைத்து ஒன்று சேர்த்து, கிழக்கே உதிக்கும் சூரியன் மெதுவாக சுவர்க்கலோகத்திற்குப் போய் மேற்கே மறையாது வழமைக்கு மாறாக இன்று கிழக்கிலேயே மறையும். அந்த நேரம் உங்கள் மூதாதையர்கள் வருவார்கள். சூரியனைப் பார்த்துக் கொண்டே இருங்கள் எனக் கூறினாள். அந்த வார்த்தையைக் கேட்ட மூட மக்கள் கண் இமை வெட்டாது சூரியனைப் பார்த்துக்கொண்டே இருந்தனர். ஒரு நாள் முடிந்து மாலை ஆகியது. சூரியன் வழமைபோல் மேற்கில் மறைந்தது. பசியுடனும், கோபத்துடனும், களைப்புடனும் இருந்த மக்கள் நொங்காவூஸை தேடியபோது அவள் அந்த இடத்தில் இல்லை. மக்கள் சூரியனை நோக்கிக்கொண்டிருந்த போதே நொங்காவூஸ் ஓடிச்சென்று பிரித்தானிய அரசர் வில்லியத்திடம் புகலிடம் அடைந்து விட்டாள். அவளின் பாதுகாப்பிற்காக அரசர் வில்லியம் அவளை றோபன் தீவுக்கு அனுப்பி வைத்தார். பல நாட்கள் கழிந்து கிழக்கு மாகாணத்திற்குப் போய் அங்குள்ள விவசாயப் பண்ணையில், 1898-ம் ஆண்டில் இறக்கும்வரை அவள் வசித்து வந்தாள்.

தென்ஆபிரிக்க மக்கள் தங்கள் குலத்தில் பிறந்த சிறிய பெண்ணின் வார்த்தையை நம்பியது மிகப் பெரிய தவறாகும். வறுமையால் வாடிய மக்களுக்கு ஐரோப்பியரும், அயல்நாடுகளும் உதவி செய்தபோதும் 25000 மக்கள் பட்டினியால் இறந்தனர்.

## 40 வருடம் வரை படுக்கையில் இருந்த பெண்

தனது 34-வது வயதில் கபசுரத்தினால் (Influenza) பாதிக்கப்பட்ட ஒரு பெண் தனது 74 வயதுவரை படுக்கையில் இருந்த சம்பவம் பிரித்தானியாவில் இடம்பெற்றுள்ளது. 34 வயதில் கபசுர நோயினால் பாதிக்கப்பட்ட இந்தப் பெண்ணை பரிசோதித்த ஒரு வைத்தியர் தான் மறுபடியும் வந்து பார்க்கும் வரை படுக்கையைவிட்டு எழுந்திருக்காது எல்லா விடயங்களையும் படுக்கையில் இருந்துகொண்டே செய்ய வேண்டுமென்று கூறிச் சென்றுவிட்டார்.

சில நாட்களில் அந்தப் பெண்ணுக்கு நோய் குணமாகிவிட்டாலும், வைத்தியரின் சொல்லைத் தட்டக்கூடாது என்பதற்காக அவர் வரும்வரை படுக்கையில் இருந்து இறங்காமல் இருந்தார். நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகியும் அந்த வைத்தியர் திரும்பி வரவேயில்லை. தொலைபேசியிலோ அல்லது வேறு வழியிலோ தொடர்புகொள்ளவும் இல்லை. இந்தக் காலகட்டத்தில் தனது சகல தேவைகளும் படுக்கையிலே நிறைவேற்றப்பட்டதால் அந்தப் பெண் படுக்கையைவிட்டு எழும்பாது வெளியில் செல்லவும் விரும்பாது அதிலேயே இருக்க விரும்பினார். இவ்வாறு நாப்பது வருடங்கள் தொடர்ந்து படுக்கையிலேயே தனது காலத்தைக் கழித்து வந்த அந்தப் பெண்ணை முதலில் அவரது தாயாரும், அவரது மரணத்தின் பின் அவரது மைத்துனரும் பராமரித்து வந்தனர்.

பின்பு அவரது 74-வது வயதில் அவரைப் பரிசோதித்த வேறு வைத்தியரொருவர் அவருக்கு எந்தவித நோயும் இல்லை என்பதைக் கண்டுபிடித்ததோடு மேற்படி விபரங்களையும் தெரிந்துகொண்டார். பின்னர் அவரை வயோதிபர்களுக்கு சிகிச்சை அளிக்கும் விசேட வைத்தியர் ஒருவரிடம் சிகிச்சை பெறுவதற்கு அனுப்பிவைத்தார்.


பீற்றர் ரோவ் என்ற அந்த வைத்தியர் அந்தப் பெண்ணைப் பரிசோதித்தபோது அவர் நாப்பது வருடங்களாக ஒரே இடத்தில் இருந்ததால் உடல் பருத்து அசைக்க முடியாமல் இருந்ததே அவரது பிரச்சினை என்பதைக் கண்டுபிடித்து படிப்படியாக அவரை உற்சாகப்படுத்தி ஏழு மாதங்களில் எழுந்து நடமாட வைத்தார். அதன் மூன்று வருடங்கள் உயிர்வாழ்ந்து அந்தப் பெண் தனது 77-வது வயதில் காலமானார். இந்தத் தகவலை 1978-ம் ஆண்டு டாக்டர் பீற்றர் ரோவ் 'மெடிக்கல் ஜேணல்' என்ற பிரித்தானியப் பத்திரிகைக்கு தெரிவித்திருந்தார். அப் பத்திரிகை அந்தப் பெண்ணின் பெயரை வெளிப்படுத்தவில்லை.

# வரலாற்றுப் பதிவான இயற்கையின் அனர்த்தங்கள்

எரிமலை, பெருவெள்ளம், காட்டுத்தீ எனப் பல சம்பவங்கள் வரலாறு பூராவும் பதிவாகி உள்ளன. இவற்றுள் சில மனித குலத்து வரலாற்றில் நினைத்துப் பார்க்கத்தக்க சம்பவங்களை கொண்டவை. இவற்றுள் சிலவற்றை 'ஈழமுரசு' தொகுக்கின்றது.

## ரோக்கியோவில் நடைபெற்ற பூமி நடுக்கம் (1923)


1923-ம் ஆண்டு, செப்டெம்பர் மாதம் 2-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை, ஜப்பானின் தலைநகரான ரோக்கியோவில் கூடுதலான பகுதியிலும், அதன் அடுத்துள்ள யோகோகமா என்னும் நகரத்திலும் நடந்த பூமி நடுக்கத்தினால் தொடர்ந்த தீ விபத்தில் பெரும் சேதம் எற்பட்டதுடன் பெருந்தொகையான மக்களும் உயிரிழந்தனர். செப்டெம்பர் 3-ம் திகதி 100,000 மக்கள் பலியாகினர். ரோக்கியோவின் பிரதான வர்த்தக தலைமையகங்களும்,



அரசாங்க அலுவலகங்கள் உட்பட 200,000 கட்டடங்கள் அழிந்தன. மின்சக்தி நிலையம் (Power Station) உடைந்து அங்கு தொழில் புரிந்த 600 மக்கள் உயிரிழந்தனர்.

ரோக்கியோவின் ஆயுதங்கள் பதுக்கி வைக்கும் இடமும், உணவு வகைகள் சேர்த்துவைக்கும் இடங்களும் முற்றாக அழிக்கப்பட்டதுடன் நீர்க்குழாய்கள் உடைந்து நீர் விநியோகம் இல்லாது மக்கள் கஷ்டப்பட்டனர். செப்டெம்பர் 4-ம் திகதி 150,000 மக்கள் மேலும் உயிரிழந்தனர். புகையிரத நிலையம் முற்றாக சேதமடைந்தது. ஜப்பானில் உள்ள மிக நீளமான நிலத்தின் கீழ் உள்ள புகையிரதம் செல்லும் குகைப் பாதையின் (Tunnel) வளைவு பூமியின் நடுக்கத்தினால் கீழ் அமர்ந்து ஒன்று சேர்ந்ததினால் பாதையில் ஓடிக்கொண்டிருந்த புகையிரதத்தின் உள்ளே இருந்த பயணிகள் அனைவரும் மூச்சுத் திணறி இறந்தனர். சுமேதா என்னும் கடலில் உள்ள நீர் அதிர்ச்சியினால் வெளியேற்றப்பட்டு தரையில் வெள்ளப் பெருக்கினால் 100 பேர் பலியாகினர்.

முன்பு பல தடவை இவ்வாறு பூமி நடுக்கம் ஏற்பட்டபோதும் 1923-ம் ஆண்டில் ஏற்பட்ட பூமி நடுக்கம் கட்டுப்படுத்த முடியாத ஒன்றாகியது. வீதிகள் உடைந்து நிலத்தின் கீழ் அமர்ந்து போனதால், வீதிகளில் நடந்து கொண்டிருந்த மக்கள் கீழே அமிழ்ந்து மூச்சுத் திணறும்போது, மின்சாரக் கம்பிகள் அறுந்து மின்சார அதிர்ச்சியினாலும் மக்கள் பரிதாப நிலையில் உயிரிழந்தனர்.



பூமிநடுக்கம் ஒருபுறமிருக்க (Gas main) வாயுவின் பிரதான இடங்கள் உடைந்து அதிலிருந்து தீப்பிடித்து வேகமான காற்று வீசியதால் தீயின் வேகம் கூடி, மிக விரைவாகப் பரவியதால் ஓடித்தப்ப முயன்ற மக்களும் முடியாது போக எரிந்து சாம்பலாகினர். குழந்தையுடன் ஒரு தாய் வேகமாக ஓடி கழுத்துவரையுள்ள தண்ணீரில் இறங்கி தனது குழந்தையை தனது தலையில் ஏற்றி வைத்து காப்பாற்றினாள்.

அங்கு 17 நூலகங்கள் நாசமாகின. 633 பௌத்த கோவில்களும், பல அழகான பூந்தோட்டங்களும் அழிந்தன. மிகப் பிரசித்தம்பெற்ற யோகோகமா துறைமுகம் அழிந்தது. இறுதியில் ரோக்கியோவில் 150,000 மக்கள் இறந்ததுடன், 100,000 மக்கள் காயமடைந்தனர். பெரிய கட்டடங்களல்லாத 700,000 சிறிய வீடுகள் அழிந்தன. ரோக்கியோ தேசத்து மக்களை திரும்பவும் சாதாரண நிலைக்குக் கொண்டுவர பலர் உதவினர். வீடிழந்தவர்கள் அதிகமானோர் வேறு நாடுகளுக்கு உதவிகளுடன் அனுப்பப்பட்டனர். பலர் அகதி முகாம்கள் உருவாக்கப்பட்டு அங்கு இருத்தப்பட்டனர். தண்ணீர்க் குழாய்கள் சீர்திருத்தப்பட்டு நீர் வசதி ஒழுங்கமைக்கப்பட்டது.

வியாபாரிகள் அரசாங்க பண உதவியுடன் சிறிதுசிறிதாக கடைகளை ஆரம்பித்தனர். அமெரிக்கா, பிரித்தானியா உட்பட பல நாடுகளின் உதவியுடன் 7 வருடங்களின் பின் 1930-ம் ஆண்டு ரோக்கியோ சாதாரண நிலைக்குக் கொண்டு வரப்பட்டது.

– கவிதா –

# யூதர்களின் சுதந்திரதாகம் 'இஸ்ரேல்'

பாலஸ்தீனம் யூத மக்களுக்கான நிலம் என்பது. 16-ம் நூற்றாண்டு காலம் முதலே நம்பப்பட்டுவந்துள்ளது. ஏதோ காரணங்களுக்காக பாலஸ்தீனத்தை விட்டு வெளியேறியிருந்த யூதர்கள் மீண்டும் தமது நிலத்திற்கு திரும்ப வேண்டுமென்ற தோற்றப்பாடு மீண்டும் 19-ம் நூற்றாண்டில் ஏற்பட்டது.



1880-களின் இறுதிப் பகுதியில் ரஷ்யாவின் ட்சார் அரசாட்சி அங்கு வாழ்ந்துகொண்டிருந்த மிகப்பாரிய யூதச் சமூகத்தின் மீது அடக்குமுறையைப் பிரயோகித்தது. இதனைச் சமாளிக்க முடியாத நிலையில் ஆறு மில்லியன் வரையிலான யூத மக்கள் உக்கிரேன், போலந்து முதற்கொண்டு ஐரோப்பா முழுவதும் பரவி வாழத் தொடங்கினார்கள். இதேவேளை 1880-ம் ஆண்டில் சில குழுக்களாக யூதர்கள் பாலஸ்தீனத்தில் குடியேறத் தொடங்கினார்கள். அச் சமயம் பாலஸ்தீனம் துருக்கிய ஓட்டோமான் சாம்ராஜ்யத்திற்குள் இணைக்கப்பட்டிருந்தது. பாலஸ்தீனத்திற்கு புறம்பாக ஐரோப்பாவில் குடியேறியிருந்த யூதர்கள் அலைந்து அலைந்து களைத்துப் போயிருந்த நிலையில், தமக்கென ஒரு தேசம் வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து 1887-ம் ஆண்டு முதலாவது 'சியோனிச் காங்கிரஸ்' அல்லது யூத தேசியவாத மாநாடு சுவிட்சர்லாந்தின் பாசல் நகரில் நடத்தப்பட்டது. இம் மாநாட்டின் பிரதானமானவராக கருதப்பட்டவர் ஆஸ்திரிய யூத பத்திரிகையாளரான தியோடோர் ஹேர்சி என்பவரே. இவரே சியோனிசத்தின் தந்தை என்றும் இவரது கோரிக்கை யூத சமூகத்திடையே பெரும் வரவேற்பை பெற்றபோது பிரித்தானிய சாம்ராஜ்யத்திடம் அதற்கான ஆதரவை கோரினார். முதலாம் உலகப் போர் தொடங்கக்கூடிய சந்தர்ப்பம் பிரித்தானியப் படைகள் ஜெரூசலேமின் வாசலில் நின்றன.

முதலாம் உலக யுத்தம் முடிவடைந்து துருக்கிய ஓட்டோமான் சாம்ராஜ்ஜியம் இல்லாது ஒழிக்கப்பட்டது. பாலஸ்தீனம் பிரித்தானியாவின் மேற்பார்வையின் கீழ் கொண்டு வரப்பட்டது. 1917 முதல் 1922 வரை பிரித்தானிய மேற்பார்வையின் கீழ் பாலஸ்தீனத்தை நிர்வகித்த அப்பிராந்திய மக்கள் சுய அரசு ஒன்றினை அமைக்கக்கூடிய தயாரிப்பு வேலைகளை மேற்கொண்டார்கள்.

அன்று சியோனிஸ்டுக்கள் விடுத்த கோரிக்கைக்கான பதில் இன்று மறைமுகமாக பிரித்தானியாவினால் வழங்கப்பட்டது. ஏராளமான யூதர்கள் பாலஸ்தீனத்துக்குள் குடியேறத் தொடங்கினார்கள். இப்படியான சூழ்நிலைகளில் ஏற்கனவே அங்கு வாழ்ந்து கொண்டிருந்த அராபியர்கள் தாம் வெளியாரின் ஆக்கிரமிப்புக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறோம் என எண்ணத் தொடங்கினார்கள். பொருளாதார ரீதியான, தொழில் நுட்ப ரீதியாக முன்னேறியிருந்த புதியவர்களின் வருகை நிச்சயம் தம்மை அழிக்கும் என அராபியர்கள் எண்ணியதில் தப்பில்லைத்தான். இடையிடையே இரு இனத்தவர்களுக்குமிடையே இனக் கலவரங்கள் ஏற்பட்டன. 1920-ம் ஆண்டு ஹெப்ரோன் நகரில் 60 யூத சமயவாதிகள் அரா




பியர்களால் கொல்லப்பட்டனர். இந்த இன ரீதியான மோதல்கள் 1930 களில் உச்ச நிலையை அடைந்தன. அதேவேளை ஐரோப்பாவில் 'நாசிசம்' பாரிய அளவில் பரவத்தொடங்க முன்னேற்றமடைந்த, கல்வியறிவில் உயர்ந்த யூதர்களின் பெரும் தொகுதி பாலஸ்தீனத்துக்கு படையெடுத்தது.

1936-ம் ஆண்டு பிரித்தானிய அரசு தமக்கு துரோகமிழைத்து விட்டதாக கருதிய அராபியர்கள் ஆயுத ரீதியான எதிர்ப்பு நடவடிக்கைகளை பிரித்தானிய படைகளுக்கெதிராக மேற்கொள்ளத் தொடங்கினார்கள். அவர்களது திட்டமிடப்படாத ஒழுங்கற்ற ஆயுத எதிர்ப்பியக்கம், மூன்று ஆண்டுகளில் பிரித்தானியாவால் நசுக்கப்பட்டது. ஆனால் பாலஸ்தீனத்தை அரபுப் பிரதேசம், யூதப் பிரதேசம் என பிரிவுபடுத்த எண்ணியிருந்த பிரித்தானியா அதைக் கைவிட்டது. அத்துடன் பாலஸ்தீனத்துக்குள் யூதர்களின் குடியேற்றத்தை கட்டுப்படுத்தவும் முனைந்தது.

ஆனால் 1939-40-ம் ஆண்டுகளில் ஐரோப்பாவில் யூதர்களின் நிலை மிகவும் ஆபத்துக்கட்டத்தையடைந்தது. ஹிட்லரின் பிராந்திய ஆசையும் யூத ஒழிப்பு நடவடிக்கையும் பிரித்தானியாவின் எண்ணத்தில் மண்ணை அள்ளித் தூவியது. ஆரம்பத்தில் பிரித்தானியா, பாலஸ்தீனத்தை அராபியர்கள் ஆள்வது என்றும் அத் தேசத்துக்குள் சுய இராச்சியமாக யூதப்பிரதேசம் ஒன்று அமைய வேண்டும் என்றுமே விரும்பியது. ஆனால்

> **இந்த இன ரீதியான மோதல்கள் 1930 களில் உச்ச நிலையை அடைந்தன. அதேவேளை ஐரோப்பாவில் 'நாசிசம்' பாரிய அளவில் பரவத் தொடங்க முன்னேற்றமடைந்த, கல்வியறிவில் உயர்ந்த யூதர்களின் பெரும் தொகுதி பாலஸ்தீனத்துக்கு படையெடுத்தது.**

அதற்கு மாறாக முற்றிலும் எதிர்மாறான நடவடிக்கைகளை சியோனிஸ்டுக்கள் மேற்கொண்டனர். பாலஸ்தீனத்தின் யூதர்கள் தமக்கென ஒரு தேசத்தை அமைத்துக் கொள்வதில் வெற்றி பெற்றனர்.

1948-ம் ஆண்டு மேமாதம் 14-ம் திகதி யூத தலைவரான டாவிட் பென்குரியன் இஸ்ரேலிய சுதந்திர தேசத்தை பிரகடனப்படுத்தினார். இன்று ஐம்பது வருட சுதந்திர விழாவை கொண்டாடும் இஸ்ரேலியர் கடந்து வந்த கரடுமுரடான பாதை, அடுத்தவாரம்....

- உதயன்

## டாவிட் பென் குரியன்

1886-ம் ஆண்டு போலந்தில் இவர் பிறந்தபோதே யூத இனம் அடக்கு முறைக்குள் அகப்பட்டுக்கொண்டிருந்தது. சுதந்திர வாழ்வைத் தேடியும், தாம் செல்ல வேண்டிய இறுதி இடத்தை தெரிவு செய்தும் 19–வது வயதின் இறுதியில் துருக்கிய பாலஸ்தீனத்தில் காலடியெடுத்து வைத்தார்.

கிழக்கு ஐரோப்பாவில் தமது இனம் அனுபவிக்கும் வேதனைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும், தமது இனம் சுதந்திரமான, மற்றைய இனங்களுக்கு உதாரணமாக வாழ வேண்டும் என்கின்ற கொள்கையில் துருக்கிய பாலஸ்தீனத்தில் யூதர்கள் மத்தியில் செயலாற்றத் தொடங்கினார். இளம் வயதிலேயே அவரிடம் சியோனிச தேசியவாத கொள்கைகள் காணப்பட்டதாலும், சோசலிசத்திலேயே அவர் நம்பிக்கை கொண்டிருந்தார். அவரது சோசலிச மற்றும் சமூக நடவடிக்கைகளால் ஆத்திரமடைந்த அன்றைய ஆட்சியாளர்கள் 1915-ம் ஆண்டு பென்குரியனை நாட்டைவிட்டு வெளியேற்றினார்கள். இப்போது இவர் தேர்ந்தெடுத்தது அமெரிக்கா. சுமார் மூன்று ஆண்டுகள் அமெரிக்காவில் தங்கியிருந்தவேளையில் ஆங்கிலம், மற்றும் பல்வேறு சோசலிச நூல்களைக் கற்றறிந்தார். அமெரிக்காவின் ஜனநாயக முறையை அவர் அறிந்து கொண்டிருந்தாலும் லெனினின் புரட்சியிலும் அவரது தலைமைத்துவத்திலுமே மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தார். இந்நிலையில் 1918-ம் ஆண்டு மீண்டும் பாலஸ்தீனம் திரும்பினார். இப்போது இந் நிலம் பிரித்தானியர்களால் ஆளப்பட்டுக் கொண்டிருந்தது. பின்னர் 1922-ல் தேசங்களின் ஒன்றியத்தினால் யூதர்களின் தேசிய இல்லம் பாலஸ்தீனம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது. இப்போது மீண்டும் பென்குரியன் தமது மக்களுக்கான நலன்களில் ஈடுபடத்தொடங்கினார்.

ஐரோப்பாவில் 1920-களிலும் 30-களிலும் ஏற்பட்டிருந்த மத எதிர்ப்புவாதம் உக்கிரமடைந்த போது அலைய அலையாக யூத மக்கள் பாலஸ்தீனத்துக்குள் குடி பெயர்ந்தனர். யூத மக்களுக்கு ஒரு தேசம் அமைக்கப்பட வேண்டும் என்ற கொள்கையை கொண்டிருந்த பென்குரியன் விரக்தியில் எல்லையில் ஒன்றுமேயில்லாமல் வந்திறங்கிய அம் மக்களுக்கு உயிர் பிழைக்க உடனடி உதவி அவசியம் என்பதினால் அவர்களுக்கான தற்காலிக குடியிருப்புக்களையும், அன்றாட வாழ்வுக்கான உதவிகளையும் மேற்கொண்டார்.

பாலஸ்தீனத்தில் ஏற்கனவே வாழ்ந்து கொண்டிருந்த அரபு மக்கள் யூதர்களுக்கு எதிராக கிளர்ச்சிகளில் ஈடுபட்டவேளை பாலஸ்தீனத்தின் தீவிரவாத யூத அடிப்படைவாதிகள் யூதர்களையும் மோதலுக்கு தூண்டிவிட்டனர். இதனை பென்குரியன் பலமாக எதிர்த்தார். அனாவசியமாக அரபுகளுடன் மோதிக் கொள்வதை யூதர்கள் தவிர்த்துக் கொள்ளவேண்டும் என்ற கோரிக்கையை அவர் விடுத்தபோது தீவிரவாதிகளால் 'இனததுரோகி' என இனங்காணப்பட்டார். ஆனால் முறையற்ற மோதல்களைத் தவிர்த்து யூத மக்கள் நிரந்தரமாக பலத்துடன் வாழ வேண்டுமானால் தாம் ஒரு நிழல் அரசினை தோற்றுவிக்க வேண்டும் என்றும் அவ் அரசின் நிழல் இராணுவம் பலமாக இயக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

'ஹகானா' என்னும் நிழல் அரசு தோற்றுவிக்கப்பட்டது. இதன் இராணுவப் பிரிவில் பல ஆயிரம் இளைஞர்கள் இணைந்து கொண்டார்கள். இரண்டாம் உலக யுத்த காலம் பல்லாயிரம் யூத மக்கள் ஐரோப்பா முழுவதும் சுற்றி வளைக்கப்பட்டு ஜேர்மனியர்களால் கொலை செய்யப்படுகின்றனர். தப்பியவர்களுக்கு அரசியல் தஞ்சம் வழங்க அநேகமான நாடுகள் மறுக்கின்றன. பாலஸ்தீனத்துக்கு வர பிரித்தானியா தடைவிதிக்கின்றது. இந்நிலையில் பென்குரியன் இரகசியமான முறையில் கப்பல்கள் மூலம் யூதர்களை பாலஸ்தீனம் கொண்டுவரும் முயற்சியில் இறங்கினார். அத்துடன் நாசிகளுக்கு எதிரான யுத்தத்தில் யூத இளைஞர்கள் பிரித்தானிய இராணுவத்துடன் இணைந்து போரிட வேண்டும் என்றும் கோரினார். இதன் மூலம் ஒரு பயிற்சி பெற்ற இராணுவ அணி யூதர்களுக்காக உருவாகியது. இரண்டாம் உலகப் போரின் பின் 1947 இல் பாலஸ்தீனப் பிரச்சினை ஐநாவுக்கு சென்றது. இதில் பாலஸ்தீனம் யூதர்களுக்கும் அராபியர்களுக்கும் பிரிக்கப்படவேண்டுமென முடிவெடுக்கப்பட்டது இதனை அடிப்படையாக வைத்து டாவிட் பென்குரியன் இஸ்ரேலிய தேசத்தின் உதயத்தை உலகிற்கு பிரகடனப்படுத்தினார். இஸ்ரேலின் முதலாவது பிரதமராக தெரிவாகிய பென்குரியன், 53 இல் பதவி விலகினார். ஆனால் மீண்டும் 1957-ல் பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டார். இப்போது சினாய் பிராந்தியத்தினை இஸ்ரேல் எகிப்திடமிருந்து கைப்பற்றிக்கொண்டது. இதற்கான யுத்த உத்தரவை பென்குரியன் வழங்கியபோது 'எகிப்தின் இராணுவ பலம் இப்பகுதியில் அதிகரித்துள்ளது. ஆகவே சினாய் கைப்பற்றப்பட்டால்தான் இஸ்ரேல் நிம்மதியாக இருக்கும் என்றார். உண்மைதான். அடுத்து வந்த பதினொரு ஆண்டுகளில் இஸ்ரேலின் பாரிய நடவடிக்கைகள் எதுவும் நடக்கவில்லை. அடுத்து 67-ம் ஆண்டு 6 நாள் யுத்தம் இதிலும் பென்குரியனுக்குத்தான் வெற்றி. 1973-ம் ஆண்டு டிசம்பர் மாதம் முதலாம் திகதி தனது 87-வது வயதில் காலமானார்.



இஸ்ரேலின் தந்தை எனப்படும் பென்குரியன் வலதுசாரி தீவிரவாதிகளால் துரோகி என்றும், இடதுசாரிகளால் சந்தர்ப்பவாதி என்றும் முத்திரை குத்தப்பட்டாலும் அங்கு வாழ்ந்து கொண்டிருந்த மக்கள் அவரை மோசசின், ஜார்ஜ் வாஷிங்டனின், கரிபால்டியின் பிரதிபலிப்பாகவே பார்த்தார்கள்.

| | |
|---|---|
| பிறப்பு: | 1886-ம் ஆண்டு ட்சார் ஆட்சியின் கீழ் இருந்த போலந்தில் |
| 1906: | பாலஸ்தீனத்தில் குடியேற்றம். |
| 1915: | நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டார். |
| 1918: | மீண்டும் பாலஸ்தீனம். |
| 1948: | முதலாவது இஸ்ரேலிய பிரதமராக பதவியேற்பு. |
| 1953: | பதவி விலகல். |
| 1956: | மீண்டும் பிரதமராதல். |
| 1973: | டிசம்பர் முதலாம் திகதி காலமானார். |

சர்வதேச தொடர்புக்கான நிமிடங்களை மிக அதிகமாகத் தருகின்றோம்*

# ஞானம் சென்ரர்

42




42

| | |
|---|---|
| இந்தியா | 36 நிமிடம் |
| கனடா | 100 நிமிடம் |
| தாய்லாந்து | 27 நிமிடம் |
| ஹொங்கொங் | 45 நிமிடம் |
| பிரான்ஸ் | 135 நிமிடம் |
| இலங்கை (இரவு 10 மணி முதல்- காலை 4 மணி வரை | 42 நிமிடம் |
| இலங்கை (15.5.98 வரை) | 40 நிமிடம் |
| சுவிஸ் | 70 நிமிடம் |
| மொறிசியஸ் | 35 நிமிடம் |
| சிங்கப்பூர் | 50 நிமிடம் |

| | |
|---|---|
| துனிசியா | 60 நிமிடம் |
| பிரித்தானியா | 100 நிமிடம் |
| அமெரிக்கா | 100 நிமிடம் |
| ஜேர்மனி | 75 நிமிடம் |
| அவுஸ்திரேலியா | 65 நிமிடம் |
| பிலிப்பைன்ஸ் | 32 நிமிடம் |
| அல்ஜீரியா | 60 நிமிடம் |
| மொரோக் | 60 நிமிடம் |
| பிரான்ஸ் (கைத்தொலைபேசி) | 80 நிமிடம் |

## இலங்கைக்கு 42 நிமிடங்கள்*

*இரவு 10 மணி தொடக்கம் காலை 4 மணி வரை

## GNANAM Telecom Center

**195, Rue du Fg. Saint Denis. 75010 Paris, France.**

**Tel: 01 46 07 09 36 / Fax: 01 46 07 00 14**

**M°: La Chapelle / Gare du Nord**

**TELECOM CENTERS**
78 Bd Bd Barbes, 75018 PARIS
Tél: 01 55 79 75 11
M°: Marcadet Poissonieres

வெகு விரைவில்

சுவிஸ், லண்டனில்
எமது சேவை ஆரம்பமாகின்றது!

*குறிக்கப்பட்ட சில நாடுகளுக்கு மட்டுமே

Pub

## நாணயமாற்று விகிதம்

| | $ | £ | DM | F Fr | S. Fr |
|---|---|---|---|---|---|
| நியூயோர்க் | - | 1.66 | 0.56 | 0.17 | 0.67 |
| பிராங்பேட் | 1.78 | 2.97 | - | 0.30 | 1.19 |
| சூரிச் | 1.49 | 2.48 | 0.84 | 0.25 | - |
| பாரிஸ் | 5.98 | 9.95 | 3.35 | - | 4.01 |
| லண்டன் | 0.60 | - | 0.33 | 0.10 | 0.40 |
| பம்பாய் | 39.71 | 66.00 | 22.26 | 6.64 | 26.60 |
| கொழும்பு | 63.28 | 105.17 | 35.17 | 10.58 | 42.39 |

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### பாடசாலைகளில்....

பற்றி மாணவர்களுக்கு எடுத்துக் கூறி இராணுவத்தில் சேர தயாரானவர்களையும் இணைத்துக் கொள்ளவுள்ளது.

இராணுவத் தரப்பின் இந்த நடவடிக்கை பற்றி கருத்து வெளியிட்ட மனித உரிமை சங்க உறுப்பினர் ஒருவர், தமிழ் மக்களுக்கெதிரான இனத்துவேசக் கருத்துக்களை பரப்பி சிங்கள மாணவர்களை இனவாதிகளாக்குவதே இத் திட்டத்தின் நோக்கமென குறிப்பிட்டுள்ளார்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### வவுனியா இராணுவ....

படையினர் நகரின் பல பகுதிகளிலும் உசார் நிலையிலிருந்து சோதனைகளை நடாத்தியுள்ளனர். இரவு ஏழு மணிவரை இக் களஞ்சியம் எரிந்துள்ளது. இதனால் பலகோடி ரூபா பெறுமதியான ஆயுத தளபாடங்களை சிறீலங்கா இராணுவம் இழந்துள்ளது. குறிப்பாக இக் கழஞ்சியத்தில் மோட்டார்கள், ஆர்.பி.ஜிக்கள் தன்னியங்கு துப்பாக்கிகள், வெடிமருந்துப் பொதிகள் அடங்கியிருந்தன. இராணுவத்தரப்பு இதனை ஒரு விபத்து எனக் குறிப்பிட்டுள்ளது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### புலிகளின் போர்....

நிறுத்த நடவடிக்கையினை உதாசீனம் செய்த சிறிலங்கா இராணுவத் தரப்பு அப்பட்டமான போர்வெறியில் இருப்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு என அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இராணுவத் தரப்பு புலிகளின் போர் நிறுத்தத்தை ஏற்றுக் கொள்ளாது எனத் தெரிவித்த இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்க இப் போர் நிறுத்தமானது புலிகளின் ஒரு பிரச்சாரத் தந்திரம் என்ற அப்பட்டமான பொய் பிரச்சாரத்தை கட்டவிழ்த்து விட்டுள்ளார்.


வெளிவந்துவிட்டது

பாலம்

மார்ச் 1998


(32ம் பக்கத் தொடர்ச்சி)

### புலிகளுடன்....

சுலோகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்திய வண்ணம் சார்லண்ட் வாழ் தமிழ் மக்கள் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். சிறீலங்கா அரசின் கொடுமைகளை ஜேர்மன் மொழியில் ஒலிபெருக்கி மூலம் ஒலிபரப்பிக்கொண்டும், 'சிறீலங்கா அரசு தமிழர்களை கொலை செய்கிறது', 'மனித உரிமைகள் அங்கு மீறப்படுகின்றன', 'தமிழர்கள் அங்கு அடிக்கடி காணாமல் போகின்றார்கள்', 'ஜேர்மனியிலிருந்து அனுப்பப்படும் தமிழர்கள் அங்கு கைது செய்யப்படுகின்றார்கள்', 'தமிழர்களை சிறீலங்காவுக்கு திருப்பி அனுப்பவேண்டாம்' போன்ற பதாகைகளை ஏந்திக்கொண்டும் தமிழ் மக்கள் ஊர்வலமாகச் சென்றார்கள்.

ஊர்வலம் ஜேர்மனிய மக்கள் பெரும்பாலும் நடமாடும் பகுதிகளூடாக சார்லண்ட் மாநில முதல்வரின் அலுவலகத்தை நோக்கிச்சென்றது. சார்லாண்ட் வாழ் தமிழ் மக்களால் முதல்வரின் அலுவலகத்தில் மகஜர் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது. அதனை முதல்வரின் செயலாளர் பெற்றுக்கொண்டார்.

அடுத்து அவர் மகஜரை வாசித்துவிட்டு கூறியதாவது, 'அரசில் பொதுவான முடிவு ஒன்று எடுக்கப்பட்டுள்ளது. அகதி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டவர்கள் எந்த நாட்டுக்காரர்களாக இருந்தாலும் அவர்களை தமது சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்ப வேண்டும் என்பதே அதுவாகும்.

இருப்பினும் சார்லண்ட் மாநிலத்தில் திருப்பி அனுப்பப்படும் நடவடிக்கைகள் மந்தமாகவே நடைபெறுகிறது. ஆனால், குர்திஸ் இனத்தவர்கள் துருக்கி நாட்டுக்கு அனுப்பப்பட்ட போது, அவர்கள் அங்கு கைது செய்யப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டார்கள். இச் சம்பவம் ஜேர்மனிய அரசு அறியும் வண்ணம் நிரூபிக்கப்பட்டுள்ளது. அதனால் அவர்களை திருப்பி அனுப்புவதை இடைநிறுத்தியுள்ளோம். அதேபோல் ஜேர்மனியிலிருந்து திருப்பி அனுப்பப்படும் தமிழ் அகதி ஒருவர் சிறீலங்கா அரசினால் கைதுசெய்யப்பட்டு சித்திரவதைக்குள்ளானார் என நிரூபிக்கப்பட்டால், ஜேர்மனியில் அகதி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டாலும் தமிழர்கள் சிறீலங்காவுக்கு திருப்பி அனுப்பப்படமாட்டார்கள். எது எப்படி இருப்பினும் நீங்கள் உங்கள் மகஜரில் கூறியுள்ள விடயங்கள் குறித்து நாம் ஆலோசனை செய்வோம்' என்று மாநில முதல்வரின் செயலாளர் தெரிவித்தார்.


ஈழமுரசு சந்தா
Eelamurasu Weekly

விண்ணப்பப் படிவம்

பெயர்:..........................................

முகவரி:..........................................

..........................................

தொலைபேசி எண்: ..........................................

பிரான்சுக்கான சந்தா (தபாற் செலவுடன்)

12 மாதம் ➤ 420 பிரெஞ்சு பிராங் ☐

பிரான்ஸ் தவிர்ந்த ஏனைய நாடுகளுக்கான சந்தா (தபாற் செலவுடன்)

12 மாதம் ➤ 520 பிரெஞ்சு பிராங் ☐

காசுக்கட்டளை, காசோலையை 'ஈழமுரசு' என்ற பெயருக்கு அனுப்பவும்.
நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:
"EELAMURASU"
22, Rue Perdonnet, 75010 Paris.
Tél: 01 40 37 63 63 / Fax: 01 40 37 64 64


## மரண அறிவித்தல்



தோற்றம்: 17.03.1934

மறைவு: 29.04.1998

### திருமதி நவரத்தினசாமி கமலாவதி

பருத்தித்துறை மாதனையை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி: நவரத்தினசாமி கமலாவதி அவர்கள் 29.04.1998 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார், காலம்சென்ற நவரத்தினசாமியின் அன்பு மனைவியாரும், காலம்சென்ற அண்ணாச்சாமி, காலம்சென்ற மகாலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கலைப்பரசி (இலங்கை), கமலநாதன் (பிரான்ஸ்), இன்பநாதன் (குஞ்சன், சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், இராமச்சந்திரன், சிவரஞ்சனி ஜெயகாந்தன், தங்கமலர் துரைலிங்கம் (இலங்கை), இந்திராணி (சுவிஸ்), சுந்தரலிங்கம், சிவலிங்கம் (சுவிஸ்), மைத்துனர் பரமசோதி (சுவிஸ்), நந்தகோபன் (நோர்வே), கமலலோஜினி (ஜேர்மனி), விமலலோஜினி (கனடா), மகாதேவன் மாசிலாமணி (இலங்கை) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெயந்தன், ஜெயந்தி, தனஞ்செயன் (இலங்கை) ஆகியோரின் அன்புப் பேத்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் பருத்தித்துறை மாதனையில் நடைபெற உள்ளன. இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு:
*கமல் 01.43 55 68 59 (பிரான்ஸ்)*
*இன்பம் 026 46 68 308 (சுவிஸ்)*

தகவல்:
கந்தசாமி சாந்தி ஸ்டோர்ஸ்
பாரிஸ்
தொலைபேசி: 01 47 00 08 09

Pub


Ecole De Tamoul

சிவா அன் பிறதர்ஸ் சூப்பர் மார்க்கெட் உள்வாயில்
Rue Louis Blanc, Rue Perdennet சந்தி 75010 Paris
Métro: La Chapelle - Louis Blanc - Gare du Nord

வகுப்புகள் ஆரம்பம்:
10.05.98 ஞாயிறு பி.ப 3.00 மணி

பிரெஞ்சு வகுப்பு
- பேசப்பழகும் வகுப்பு (Spoken Franch)
- பிரெஞ்சில் எழுதும் பயிற்சி வகுப்பு

இக்கால ஆங்கிலம் (Present day English)
- ஆழ-அகல ஆங்கிலம் கற்கும் வகுப்பு

ஆங்கில-பிரெஞ்சு மொழிகளில் இலக்கணம்
- ஒரு வகுப்பில் இரு மொழிகள் படிக்கும் வகுப்பு

வர்தகர்களுக்கு தனி வகுப்புகள்

ஆசிரியர்
ச. சச்சிதானந்தம்

Pub



AMV

IMPORT - EXPORT

அனைத்து மீன் வகைகளும் மொத்த விலையில் கொடுக்கப்படும்.
மரக்கறி வகைகளும் மலிவான விலையில் மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம். Rungis மரக்கறி வகைகளும் மொத்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

208, Rue du Fbg. St. Denis,
75010 Paris.

ஏற்றுமதி இறக்குமதியாளர்கள்

Tel: 01 44 72 91 25
Fax: 01 44 72 91 30

Pub

ஈழமுரசு
Eelamurasu Weekly

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

லண்டனில் புதுப் பொலிவுடன்

கணபதி தமிழ்க்கடை
உடன் மரக்கறி வகைகள், கடலுணவுகள் +
மளிகைப்பொருட்களுக்கு
உங்கள் அனைத்து தேவைகளையும் ஒரே
இடத்தில் பூர்த்தி செய்வதற்கு
**Ganapathy Food & Wine**
34, Ealing Road Wembley, Middx, Hao 4TL, U.K
Tel: 0181 -903 3184 / Fax: 0181 -903 3185

# வவுனியா இராணுவ களஞ்சியம் வெடித்துச் சிதறியது

## பலகோடி பெறுமதியான ஆயுத தளவாடங்கள் எரிந்தன

(மே - 3)

வவுனியாவில் அமைந்துள்ள சிறீலங்கா இராணுவக் களஞ்சியமொன்று இன்று நண்பகலளவில் பாரிய வெடியோசையுடன் வெடித்து தீப்பிடித்து எரிந்து சாம்பரானது. ஆனால் வவுனியா செய்திகளின் படி இவ் ஆயுத தளவாடக் களஞ்சியம், விடுதலைப் புலிகளின் ஊடுருவல் தாக்குதல் காரணமாகவே வெடித்துச் சிதறியதாக தெரிவிக்கின்ற போதிலும் விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் இதுவரை அதனை உறுதிப் படுத்தவில்லை.

சிறீலங்கா விமானப் படைத் தளத்திற்கு அருகாமையில் (நகரிலிருந்து இரு கிலோ மீற்றர் தொலைவில்) அமைந்திருக்கும் இம் முகாமிலேயே ஆயுத தளவாடங்கள் விமானமூலமாக இறக்கப்பட்டு களஞ்சியப் படுத்தப்படுதுவது வழக்கம். 'ஜெயசிக்குறுய்' இராணுவ நடவடிக்கையின் விநியோக களஞ்சியங்களில் இதுவும் ஒன்றாகும்.

நண்பகல் 12.45 மணியளவில் பாரிய வெடியோசையுடன் இவ் ஆயுதக் கிடங்கு வெடித்துச் சிதறியதுடன், பயங்கர சுவாலைகளுடன் தீக்கொழுந்துவிட்டு எரியவும் ஆரம்பித்துள்ளது. இதன் காரணமாக முகாமிலிருந்த இராணுவத்தினரும், விமானப் படையினரும் பீதிகொண்டு நாலாபுறமும் தலை தெறிக்க ஓட ஆரம்பித்தனர். வவுனியா கடைகளும் அவசர அவசரமாக மூடப்பட்டதுடன், மக்களும் நகரைவிட்டு ஓட ஆரம்பித்தனர். தீயினால் எழுந்த புகைமூட்டத்தினை நகரிலிருந்தே பார்க்கக் கூடியதாக இருந்தது. இராணுவத் தரப்பில் இருவர் பலியாகியதுடன் மேலும் ஒருவருக்கு கடுமையான தீக்காயங்கள் ஏற்பட்டதால் அனுராதபுர இராணுவ வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளார்.

களஞ்சியம் எரிந்த வேளையில் வவுனியா நகர இராணுவ நிலைகள் மீது புலிகள் தாக்குதலை தொடுப்பார்கள் என்ற அச்சத்தில் விசேட அதிரடிப்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# பாதிப்புக்குள்ளான தமிழர்கள் திருப்பி அனுப்பப்படமாட்டார்கள்

## ஜேர்மன் சார்லாண்ட் முதலமைச்சரின் செயலாளர் தெரிவிப்பு

ஜேர்மனியிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட தமிழ் அகதி ஒருவர் சிறீலங்கா அரசினால் கைதுசெய்யப்பட்டு சித்திரவதைக்குள்ளானார் என நிரூபிக்கப்பட்டால், ஜேர்மனியிலிருந்து அகதி விண்ணப்பம் நிறுத்தப்பட்டாலும் தமிழர்கள் சிறீலங்காவுக்குத் திருப்பி அனுப்பப்படமாட்டார்கள் என சார்லாண்ட் மாநில முதலமைச்சரின் செயலாளர் இன்று தெரிவித்தார்.

சார்லண்ட் வாழ் தமிழ் மக்கள் இன்று அங்கு மாபெரும் ஊர்வலம் ஒன்றை நடாத்தினர். சிறீலங்காவில் தமிழர்கள் கொடுமைப்படுத்தப்படுகின்றார்கள் என்றும் அதனால், ஜேர்மனியிலிருந்து தமிழர்கள் திருப்பி அனுப்பப்படக்கூடாதென்றும் கோரியே இந்த ஊர்வலம் நடைபெற்றது. இதில் 500க்கும் மேற்பட்ட தமிழர்களும், சில மனித உரிமை அமைப்புக்களைச் சேர்ந்தவர்களும் கலந்துகொண்டனர். ஐம்பதிற்கும் மேற்பட்ட சிறுவர்களும் இதில் அடங்குவர்.

சிறீலங்காவிற்கு எதிரான

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# பாடசாலைகளில் 15000 பேரை திரட்ட இராணுவம் முடிவு

சிறீலங்கா இராணுவத் தரப்பிற்கு ஏற்பட்டுள்ள கடுமையான ஆளணி பற்றாக்குறையினை நிவர்த்திக்கும் பொருட்டு பாடசாலைகளில் ஆட் திரட்டல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதென இராணுவ தலைமையகம் முடிவு செய்துள்ளது.

இத் திட்டத்தின் முதற் கட்டத்தில் 15000 பேரை திரட்ட முடிவு செய்துள்ள இராணுவ தலைமைப் பீடம் இதற்காக சிறீலங்காவிலுள்ள பாடசாலைகளுக்கு ஆட்திரட்டல் குழுக்களை அனுப்ப துரித நடவடிக்கைகளை தற்போது மேற்கொண்டு வருகிறது.

இராணுவ தலைமையகம் தயாரித்துள்ள ஒளியிழை நாடாக்கள், ஒலி நாடாக்கள் சகிதம் பாடசாலைகளுக்கு செல்லவுள்ள இக் குழுவினர் இராணுவத்தினரின் நடவடிக்கைகள்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# சிறீலங்கா இராணுவத்திற்கு மற்றுமொரு பொதுமன்னிப்பு

தப்பியோடிய படையினருக்கு பல தடவை சிறீலங்கா அரசால் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு காலக்கெடு விதிக்கப்பட்ட போதிலும் அரசு எதிர் பார்த்தது போல் தப்பிச்சென்ற படையினர் பெருமளவில் திரும்பி வராததால் மீண்டும் ஒரு பொது மன்னிப்பு சிறீலங்கா அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இம் மன்னிப்பானது 05.05.98 தொடக்கம் ஐந்து தினங்களுக்கு இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இவ் பொதுமன்னிப்பை ஏற்று படைக்கு மீளாதவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அறிவித்துள்ளார்.

# புலிகளின் போர் நிறுத்தத்தை இராணுவத் தரப்பு ஏற்க மறுப்பு

(4.5.98)

ஐ.நா. சபையின் விசேட பிரதிநிதியின் வடபகுதி விஜயத்திற்கு ஒத்துழைப்பு வழங்குமுகமாக தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்ட இரு நாள் போர் நிறுத்த நடவடிக்கையினை ஏற்க சிறீலங்கா இராணுவத் தரப்பு மறுத்துள்ளது.

விடுதலைப் புலிகள் எந்த ஒரு நிபந்தனையையும் முன் வைக்காது புரிந்துணர்வு அடிப்படையில் செய்த இந்தப் போர்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

லண்டனில்
ஆச்சீஸ்
இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இலங்கை மரக்கறி வகைகள், கடல் உணவு வகைகள் மற்றும் பலசரக்கு வகைகளுக்கும், ஒறிஜினல் Pyramid CD, Audios and Video CD (D.V.D) மற்றும் பழைய, புதிய பாடல்கள் அடங்கிய எல்லாவிதமான CD களையும், இலங்கை, இந்திய பத்திரிகைகள், சஞ்சிகைகளையும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ள

Archie'S Tel: 0181-2053652
205, Edgware Road, Colindale-Nw 9.